ஜிம் கார்பெட்

# ஆட்கொல்லிப் பெண்புலி

தமிழாக்கியவர்

தி. ஜ...



...ட் யூனிவர்ஸிடி ப்ரெஸ்

விலை ரூ. 1

MCO
461/4-56
...STRAR OF BOOKS
17 NOV 1956
MADRAS
O111,3mc0,0
31N56
111636

# ஆட் கொல்லிப் பெண் புலி

*ஆசிரியர்*

ஜிம் கார்பெட்

*தமிழாக்கியவர்*

தி. ஜ. ர.

ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி ப்ரெஸ்

1956

ĀṬ KOLLIP PEṆ PULI
(THE MAN-EATING TIGRESS)
Translated into Tamil by
T. J. Ranganathan
from Jim Corbett's
*Man Against Man-Eaters*

111636

Paper used :
Double crown 28 lbs. White S.C.

PRINTED IN INDIA
AT THE JUPITER PRESS PRIVATE LTD., MADRAS-18 AND PUBLISHED
BY JOHN BROWN, OXFORD UNIVERSITY PRESS, MADRAS-2

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| | அறிமுகம் ... | 5 |
| 1. | புலி கொண்ட பலிகள் ... | 9 |
| 2. | புலியைத் தேடியது ... | 33 |
| 3. | புலியின் அட்டூழியம் ... | 46 |
| 4. | வீண் முயற்சி ... | 72 |
| 5. | மனச் சோர்வு ... | 84 |
| 6. | எதிர்பாராத பேரதிருஷ்டம் ... | 88 |
| | கட்டுரை வினாக்கள் ... | 106 |

கிறது. புனகிரி ஆலயங்களிலிருந்து இடைவிடாமல் வருமானம் வந்துகொண் டிருந்ததால், நாளடைவில் மிகவும் வளம்பெற்ற நிலங்களைக் கொண்ட கிராம மாக அது வளர்ந்துவிட்டது. குமாவும் பிரதேசத்தின் பிற ஊர்களைப் போலவே, தக் கிராமமும் சென்ற நூறு வருஷ காலத்தில் பலவித ஏற்றத் தாழ்ச்சிகளைக் கண் டிருக்கிறது. ஆனால், இந்தப் பெண் புலியின் அட்டூழி யத்துக்குப் பயந்து கிராம மக்களெல்லாரும் இதை ஒரே யடியாய்ப் பாழ் போட்டுவிட்டு ஓடியதைப் போல, இதற்கு முன் ஒருபோதும் ஓடியதில்லை.

இந்த நூலாசிரியர் ஜிம் கார்பெட்டின் வாழ்க்கை விவரங்கள் சிலவற்றைச் 'சௌகட் புலிகள்' என்ற புத்தகத்தின் அறிமுகத்திலேயே தந்திருக்கிறோம். வாச கருக்குச் சுவை பயக்கக்கூடிய இன்னும் ஒன்றிரண்டு குறிப்புக்களை இங்கே தருகிறோம்.

பதவியிலிருந்து அவர் விலகிக்கொண்ட பிறகு அவ ருடைய வாழ்க்கையிலே ஒரு புதிய அத்தியாயம் தொடங்கியது. அவர் மணம்புரிந்து கொள்ளாமலே வாழ்ந்தார். ஆனால் அவருடைய இரண்டு சகோதரி களும் அவரிடம் பேரன்பு சொரிந்து அவரைப் பரா மரித்து வந்தார்கள்.

ஆட்கொல்லிப் புலிகளை வேட்டையாடிக் கொன்ற தம்முடைய போராட்டங்களை விவரித்து அவர் சில புத்தகங்கள் எழுதினார். அந்த வேட்டைகளில் பெரும் பாலானவையும், அவர் பதவியிலிருந்து விலகிய பிறகே நிகழ்ந்தன. பயங்கரமான ருத்திரப்பிரயாக் சிறுத் தையை அவர் கொன்றபோது, அவருக்கு வயது ஐம் பத்தொன்று. அந்தச் சிறுத்தைக்குப் பலியான ஆட் களின் எண்ணிக்கை என்ன தெரியுமோ? ஒன்றிரண்டு அல்ல; நூற்றைம்பது! நூற்றைம்பது மனிதர்களின்



உயிரை அது குடித்துவிட்டது. அப்படி உயிரிழந்தவர் களில் பெரும்பாலோரும் இமயமலையின் அடிவாரத்தில் உள்ள ஆலயங்களில் வணக்கம் செய்ய வந்த யாத்திரி கர்கள். ஜிம் கார்பெட்டுக்கு அறுபத்து மூன்று வயதா யிருக்கும்போது, தக் கிராமத்து ஆட்கொல்லிப் புலியை அவர் கொன்றார்.

1947-இல் கார்பெட், தம்முடைய சகோதரி மாக்கீ என்பவளை அழைத்துக்கொண்டு இந்தியாவை விட்டுச் சென்றார்; கெனியா நாட்டில் உள்ள நையேரி என்ற இடத்தில் போய் வசித்தார். 1952-இல் ஆங்கில நாட்டு இராணியும் அவருடைய கணவரும் கெனியாவுக்கு விஜயம் செய்தபோது அவர்களுக்கு விருந்தளித்து உபசரிக்கும் பேறு, ஜிம் கார்பெட்டுக்குக் கிடைத்தது. 1955-இல் அவர் காலமானார்.



# 1. புலி கொண்ட பலி

**1938** செப்டம்பரில் நைனிதால் நகருக்கு ஒரு செய்தி எட்டியது. காட்கின்றி கிராமத்தில் பன்னிரண்டு வயதுச் சிறுமி ஒருத்தியை ஒரு பெண் புலி கொன்று விட்டதாம். காட்டிலாகாவைச் சேர்ந்த டொனால்டு ஸ்டூவர்ட் இந்தச் செய்தியை எனக்கு அறிவித்தார். புலி எப்படிக் கொன்றது என்ற விவரம் ஒன்றும் செய்தியில் இல்லை. சில வாரங்கள் கழித்து அந்தக் கிராமத்துக்கு நான் போனபோதுதான், அந்தத் துயர நிகழ்ச்சியைப் பற்றிய விவரங்களை அறிந்து கொண்டேன். கிராமத்துக்கு அருகே ஒரு மாமரம் இருந்தது. கிராமத்திலிருந்து பார்த்தால், மரம் நன்றாய்த் தெரியும். அந்த மரத்தடியில் ஒரு நாள் காற்றடித்து மாம்பழங்கள் விழுந்திருக்கின்றன. அன்று உச்சிவேளையில் இந்தப் பெண் அங்கே சென்று அவற்றைப் பொறுக்கிக்கொண் டிருந்திருக்கிறாள். அப்போது புலி திடீரென்று தோன்றியிருக்கிறது. பக்கத்தில் வேலை செய்துகொண் டிருந்த ஆட்கள் வந்து எவ்வித உதவியும் செய்வதற்குள், சிறுமியைப் புலி தூக்கிக்கொண்டு போயிருக்கிறது. புலியைப் பின் தொடர்ந்து செல்ல யாரும் முயலவில்லை. சிறுமியைப் புலி இழுத்துச் சென்ற சின்னங்களும் ரத்தக்கறைத் தடமும் அடியோடு அழிந்து போய்விட்டன. நான் போய்ச் சேர்வதற்கு முன்பே, அவற்றை மழை நீர் கழுவி விட்டது. சிறுமியைப் புலி எந்த இடத்துக்குக் கொண்டு சென்றது என்பதை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை.

காட்கின்றி கிராமத்துக்கு, சூகா என்ற இடத்திலிருந்து தென் மேற்கே சுமார் நான்கு மைல் தூரம்; தக் என்ற இடத்திலிருந்து நேர் மேற்கே மூன்று மைல் தூரம். போன வருஷம் ஏப்ரல் மாதம் சூகா ஆட்கொல்லி என்ற மற்றெரு புலியை, இந்தக் காட்கின்றி, தக் இரண்டுக்கும் இடையிலே உள்ள பள்ளத் தாக்கில்தான் நான் சுட்டுக் கொன்றேன்.

இந்தப் பிரதேசத்தில் உள்ள எல்லா மரங்களையும் வெட்டி விடவேண்டும் என்று காட்டிலாகா அதிகாரிகள் 1938 கோடையில் குறித்திருந்தார்கள். நவம்பர் மாதத்தில் மரம் வெட்டும் வேலை தொடங்க வேண்டும். அதற்குள்ளே புலியைக் கொல்லாவிட்டால், ஒப்பந்தக்காரர்களுக்குக் கூலியாட்கள் கிடைக்கமாட்டார்கள். இதனல் ஒப்பந்தப்படி நடக்க அவர்கள் மறுத்துவிடுவார்கள். சிறுமியைப் புலி கொன்றவுடனே, இதற்கு அஞ்சித்தான் டொனல்டு ஸ்டூவர்ட் எனக்கு எழுதினர். ஆனல், அவர் கேட்டுக் கொண்டபடி நான் செல்ல இசைந்தது ஒப்பந்தக்காரர்களின் சௌகரியத்தை எண்ணி அல்ல; பிரதேசவாசிகளின் நன்மையை எண்ணித்தான்.

நான் புறப்படத் தயார் செய்துகொண்டிருக்கும் போதே, நைனிதாலுக்கு மற்றெரு விபத்தைப்பற்றிய செய்தி எட்டியது. சூகாவுக்கு அரை மைல் தூரத்தில் லாத்யா நதியின் இடது கரையில் உள்ள ஸெம் என்ற சிறிய கிராமத்தில் ஒரு பெண்ணைப் புலி கொன்றுவிட்டதாம்.

புலிக்குப் பலியான இந்தப் பெண் மிகவும் வயதானவள்; ஸெம் கிராமத்துப் பெரியதனக்காரரின் தாயார். ஒரு வயலும் அதற்குச் சற்று உயரத்தில் இன்னெரு வயலுமாக அடுத்துள்ள இரண்டு வயல்களின் இடையே இருந்த செங்குத்தான வரப்பில் நின்ற சுள்ளிகளை அவள் ஒடித்துக்கொண்டிருந்தபோது, புலி அவளைக் கொன்றிருக்கிறது. அவளுடைய குடிசையிலிருந்து ஐம்பது கஜ தூரம் நீண்டிருந்தது அந்த வரப்பு. அதன் மறுகோடியிலிருந்து அவள் சுள்ளி ஒடித்துக்கொண்டே தன் குடிசைப் பக்கம் ஒரு கஜ தூரத்துக்குள் வந்து சேர்ந்திருக்கிருள். மேலே இருந்த வயலிலிருந்து புலி அப்போது அவள் மீது பாய்ந்திருக்கிறது. எதிர்பாராதவிதமாகத் திடீரென்று புலி தாக்கியதால், அவள் வீரிட்டு ஒரே ஒரு முறைதான் கத்தியிருக்கிருள். அதற்குள்ளே புலி அவளைக் கொன்றிருக்கிறது. பிறகு, பன்னிரண்டு அடி உயரம் உள்ள வரப்பு மேட்டுக்கு அவள் உடலைத் தூக்கிச் சென்று, மேலே இருந்த வயலைக் கடந்து, அதற்கப்பால் இருந்த அடர்ந்த காட்டுக்குள் புகுந்து மறைந்துவிட்டது. அவளுடைய இருபது வயது வாலிப மகன், சில கஜ தூரத்துக்கு அப்பால் இருந்த ஒரு நெல் வயலில் அப்போது வேலை செய்துகொண்டிருந்திருக்கிருன். இந்த விபத்து நிகழ்ந்த விதத்தை முற்றும் அவன் பார்த்துக்கொண்டிருந்திருக்கிருன். ஆயினும், அவன் ஒரேயடியாய்ப் பயந்து நடுங்கியதால், அவனல் எவ்வித உதவியும் செய்ய முடியவில்லை. கிராமத்துக்கு உடனே வரும்படி கணக்குப் பிள்ளையைக் கூப்பிட்டிருக்கிருன். அவர் இரண்டு நாளைக்கெல்லாம் எண்பது ஆட்களைத் திரட்டிக் கொண்டு ஸெம் கிராமத்துக்கு வந்துசேர்ந்திருக்கிருர். புலி போன திசையில் கணக்குப் பிள்ளை தொடர்ந்து சென்றிருக்கிருர். பலியான பெண்ணின் துணியில் சில துண்டுகளையும் சில எலும்புத் துண்டுகளையும் அவர் கண்டு பிடித்தாராம். நன்ருக வெயில் காய்ந்துகொண்டிருந்தபோதே, பெண்ணின் குடி

சைக்கு ஐம்பது கஜ தூரத்திலேயே அவளைப் புலி கொன்று தின்றிருக்கிறது என்று இந்த விவரங்களி லிருந்து புலனாயிற்று.

இந்த இரண்டாவது விபத்தைப் பற்றிய செய்தி எட்டியதும், புலியை வேட்டையாடுவது பற்றி இபட்ஸ னும் நானும் கலந்து ஆலோசித்தோம். அதன் விளை வாகத் தாமும் என்னுடன் ஸெம் கிராமத்துக்கு வர இபட்ஸன் தீர்மானித்தார். ஸெம் கிராமத்துக்கு வந்து சேர்ந்த மறுநாள், அண்டை அயல் கிராமங்களின் கணக்குப் பிள்ளைகள், காட்டிலாகாக் காவலர்கள், பெரியதனக்காரர்கள் இவர்களை யெல்லாம் இபட்ஸன் கண்டு பேசிக்கொண் டிருந்தார்; நான் புலியின் அடிச்சுவடுகளைத் தேடிக் கண்டு பிடிப்பதற்காக வெளியே சென்றேன். எங்கள் முகாமிலிருந்து, லாத்யா, சர்தா நதிகள் கூடும் இடம் வரையிலும், லாத்யா நதியின் இரு கரைகளிலும் நீண்ட மணல் திடல்கள் இருந்தன. இந்த மணலில் ஒரு பெண் புலி, ஓர் இளம் ஆண் புலி இரண்டின் சுவடுகளையும் நான் கண்டேன். சென்ற சில தினங்களில் லாத்யா நதி யைப் பெண் புலி பல தடவை கடந்து வந்து திரும்பிச் சென்றிருந்தது. எங்கள் முகாமுக்கு முன்புறமிருந்த மணல் திடலிலேயே முந்தின நாள் இரவு அது நடந் திருந்தது. இந்தப் பெண் புலிதான் ஆட்கொல்லி என்று கிராமவாசிகள் சந்தேகப்பட்டார்கள். பெரிய தனக்காரரின் தாய் பலியான நாளிலிருந்து ஸெம் கிராமத்துக்கு இது திரும்பத் திரும்ப வந்திருப்ப தால், கிராமவாசிகளின் ஊகம் சரியா யிருக்கலாம் என்றே தோன்றியது.

பெண் புலியின் அடிச்சுவடுகளைக் கவனித்துப் பார்த்ததில், 'நடுத்தர உருவம் உடையது; மிடுக்கான



இளமைப் பருவத்தில் இருப்பது' என்று தெரிந்தது. இது ஏன் ஆட்கொல்லிப் புலியாக மாறியது என் பதைப் பின்னால்தான் கண்டு பிடிக்க வேண்டும். ஆனால், ஒரு காரணம் இப்போது தோன்றியது. நான் கொன்ற சூகா புலியோடு முந்திய பருவக் காலத்தில் இது கூடி வாழ்ந்திருக்கிறது. அப்போது அந்தப் புலி கொன்ற ஆட்களை யெல்லாம் இதுவும் சேர்ந்து தின்றிருக்கிறது. அதிலிருந்து மனித மாமிசத்தில் இதற்கு ஓர் உருசி உண்டாகியிருக்கிறது. ஆனால், ஆளைக் கொன்றுதர, இப்போது அந்தத் துணைப் புலி இல்லை. ஆகவே, தானே ஆட்கொல்லியாக இந்தப் பெண்புலி மாறிவிட்டது. இப்படி நான் ஊகித்தேன். ஆனால், இது தவறென்று பின்னால் புலப்பட்டது.

நைனிதாலை விட்டு நான் புறப்படுமுன், தணக்பூர் தாசில்தாருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தேன். இளமையான நான்கு ஆண் எருமைகளை வாங்கி ஸெம் கிராமத்துக்கு அனுப்பும்படி அதில் கேட்டுக் கொண் டிருந்தேன். இந்த எருமைகளில் ஒன்று நடு வழியிலேயே இறந்து விட்டது. மீதி மூன்று எருமை களும் 24-ஆம் தேதி வந்து சேர்ந்தன. இன்னோர் எருமையைக் கிராமத்திலேயே யாரோ கொடுத்தார் கள். அதையும் இந்த மூன்று எருமைகளையும் 24-ஆம் தேதி மாலையிலேயே வெளியே கொண்டுபோய் ஓர் இடத்தில் சேர்ந்தாற்போல் கட்டினோம். அடுத்த நாள் காலையில் இந்த எருமைகளைப் பார்ப்பதற்காக நான் வெளியே போனேன். அப்போது சூகா மக்க ளெல்லாம் பெரும் பரபரப்பு அடைந்திருப்பதைக் கண் டேன். கிராமத்தைச் சுற்றிலும் புலங்களைச் சில நாளைக்கு முன்புதான் உழுதிருந்தார்கள். தங்கள் ஆடு மாடுகளைக் கிடை போட்டுவிட்டு மூன்று குடும்பத்தினர்

தங்கள் புலங்களிலே படுத்துத் தூங்கியிருக்கிறார்கள். அந்த மூன்று குடும்பத்தினருக்கும் மிகச் சமீபத்திலே முந்தின நாள் இரவில் புலி வந்து விட்டுப் போயிருக்கிறது. நல்ல வேளையாக ஆடுமாடுகள் புலியைக் கண்டு, அந்தக் குடும்பத்தினரை எச்சரித்திருக்கின்றன. பயிர்ப் புலங்களைக் கடந்து, பாதை வழியே காட்டின்றியை நோக்கிப் புலி சென்றிருக்கிறது. அப்போது எங்கள் எருமைகளில் இரண்டை மிக நெருங்கி வந்தும், அவற்றில் ஒன்றைக்கூடத் தொடாமலே அது போயிருக்கிறது.

நாங்கள் ஸெம் கிராமத்துக்கு வந்தவுடனேயே, கணக்குப் பிள்ளை, காட்டிலாகாக் காவலர்கள், கிராம வாசிகள் ஆகிய எல்லாருமே, 'இளம் எருமைகளைக் கட்டுவதில் ஒரு பயனும் இல்லை; உங்கள் நேரந்தான் வீணாகும். புலி அவற்றைக் கொல்லவே கொல்லாது. இது எங்களுக்கு நிச்சயமாய்த் தெரியும்' என்று எங்களிடம் சொன்னார்கள். மேலும் தொடர்ந்து, 'மற்றவர்களும் இந்த மாதிரி எருமைகளைக் கட்டித்தான் ஆட்கொல்லியைச் சுட முயன்றார்கள். பலிக்கவில்லை. தவிர, புலிக்கு வேண்டும் என்றால், இந்த எருமைகளையா தேடி வரவேண்டும்? காட்டிலே மேயும் எத்தனையோ எருமைகளில் ஒன்றைப் பார்த்துக் கொள்கிறது' என்று காரணமும் காட்டினார்கள். அவர்கள் இப்படிச் சொன்னாலும், நாங்கள் எருமைகளைக் கட்டிக்கொண்டே வந்தோம். அடுத்த இரண்டு நாட்களிலும் இரவில் புலி அந்த எருமைகளில் ஏதாவது ஒன்றின் அருகிலே வந்தும் தொடாமலே சென்றுவிட்டது.

27-ஆம் தேதி காலையில் நாங்கள் உணவருந்திக் கொண் டிருந்தோம். தக் கிராமத்தின் பெரியதனக்



காரருடைய தம்பி திவாரி என்பவன், மற்றும் சில ஆட்களை அழைத்துக்கொண்டு எங்கள் முகாமுக்கு வந்து சேர்ந்தான். தங்கள் கிராமத்து ஆள் ஒருவன் காணுமல் போய்விட்டதாக அவர்கள் முறையிட்டார்கள். 'நேற்றுப் பகல் உச்சிப்போது இருக்கும். ஆள் தன் மனைவியிடம், "ஆடுமாடுகள் கிராம எல்லையை விட்டு வழி தவறிப் போய்விடாதபடி பார்த்துவிட்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறான். பிறகு திரும்பிவரவே யில்லை. புலி கொன்றிருக்குமோ என்று அஞ்சுகிறோம்' என்றார்கள்.

நாங்கள் புலியைத் தேட மிக விரைவில் தயாரானோம். இபட்ஸனும் அவர் மனைவியும் நானும் பகல் பத்து மணிக்கெல்லாம் தக் கிராமத்தை நோக்கிப் புறப்பட்டோம். திவாரியும் அவனோடு வந்தவர்களும் எங்களுடனேயே திரும்பினார்கள். தூரம் இரண்டே மைல்தான். ஆனால், ஏற்றமான பாதை. மிகவும் சிரமப்பட்டுத்தான் ஏறவேண்டி யிருந்தது. காலந் தாழ்த்திவிடக் கூடாதே என்று, வேகமாகவே ஏறினோம். தக் கிராம எல்லைக்கு நாங்கள் போய்ச் சேர்ந்த போது, எங்களுக்கு மூச்சு வாங்கியது; உடம்பெல்லாம் வேர்த்துக் கொட்டியது.

புதர்கள் அடர்ந்து சமதளமா யிருந்த ஒரு துண்டு நிலத்தைக் கடந்தோம். இந்த நிலத்தைப் பற்றிப் பின்னால் நான் சொல்ல வேண்டிவரும். கிராமத்தை அடைந்தபோது, அங்கே ஒரு பெண் அழும் குரல் கேட்டது. கேட்டவுடனேயே, ஒப்பாரி வைத்துப் புலம்புகிறாள் என்று தெரிந்துவிட்டது. காணுமல் போன ஆளின் மனைவிதான் அவள். நாங்கள் காட்டை விட்டு வெளியே வந்தவுடனே, அவளையும் எங்கள் வருகைக்காகப் புலத்தின் ஓரத்தில் காத்திருந்த

பத்துப் பதினைந்து ஆட்களையும் கண்டோம். தங்கள் வீடுகளிலிருந்து அண்ணுந்து பார்த்தபோது மேலே ஒரு புலத்தில் ஏதோ வெள்ளையாய்த் தெரிந்ததாகவும், அது காணுமல் போன ஆள் உடுத்திருந்த துணியில் ஒரு துண்டாயிருக்கலாம் என்றும் இந்த ஆட்கள் சொன்னுர்கள். நாங்கள் இப்போது நின்று கொண்டிருந்த புதர் அடர்ந்த நிலத்துக்கு மேலே முப்பது கஜ தூரத்தில் இருந்த அந்தப் புலத்தையும் சுட்டிக் காட்டினுர்கள். இபட்ஸன், திவாரி, நான் மூவரும் அந்த வெண்மையான பொருளை ஆராய்வதற்காகச் சென்ருேம். இபட்ஸனின் மனைவி அந்தப் பெண்ணையும் மற்ற ஆட்களையும் கிராமத்துக்கு அழைத்துச் சென்ருள்.

அந்தப் புலத்தில் சில ஆண்டுகளாகப் பயிரிடவேயில்லையாம். சாமந்திச் செடி போல் தோன்றிய ஏதோ புதர் அடர்ந்திருந்தது. வெண்மையான அந்தப் பொருள் கிடந்த இடத்துக்கே நாங்கள் போய்ச் சேர்ந்ததும், அது காணுமல் போன ஆளின் இடுப்புத் துணி என்று திவாரி கண்டு பிடித்தான். அதற்கு அருகே ஆளின் குல்லாய் கிடந்தது. இங்கே புலியுடன் ஆள் மல்லுக்கட்டியிருக்கிருன். ஆனுல், ரத்தக்கறை யில்லை. ஆளைப் புலி தாக்கிய இந்த இடத்தில் மட்டும் அல்ல, அவனை அது இழுத்துச் சென்ற தடத்தில் கொஞ்ச தூரம் வரையிலுமே ரத்தக்கறையில்லை. எனவே, புலி முதலில் பிடித்த பிடியைக் கொஞ்ச தூரம் வரையில் விடவில்லை என்று புலப்பட்டது. முதல் பிடியைப் புலி மாற்ருதிருந்தால் இப்படித்தான் ரத்தக்கறை இராது.

குன்றில் எங்களுக்கு மேலே முப்பது கஜ தூரத்தில், நாலைந்து புதர்கள் இருந்தன. அவற்றின் மேல்



பந்தல் போட்டது போல் சில கொடிகள் படர்ந்திருந்தன. ஆளைப் புலி இழுத்துச் சென்ற சுவட்டை இனித் தொடர்ந்து செல்வதற்குமுன், இந்தப் புதர்களை நன்ருய்க் கவனிக்க வேண்டும். ஏனென்ருல், புலியை எங்கள் பின் பக்கத்தில் விட்டுவிட்டு நான் முன்னே செல்லுவது உசிதம் அல்ல. புதர்களுக்கடியில் இருந்த மிருதுவான மண்ணில் புலியின் அடிச்சுவடுகளை நாங்கள் கண்டோம். ஆள்மீது பாய்வதற்கு முன், புலி இங்கேதான் பதுங்கியிருந் திருக்கிறது.

நாங்கள் புறப்பட்ட ஆரம்ப இடத்துக்குத் திரும்பிப் போய்ச் சேர்ந்து, இதோ இந்த மாதிரி வேலை செய்வதென்று திட்டம்போட்டோம்: புலியை ஒளிந்து தொடர்ந்து செல்லவேண்டும்; அது தன் பலியைத் தின்று கொண்டிருக்கும்போது அதைக் கொன்றுவிட வேண்டும் – இதுவே எங்களுடைய முக்கிய நோக்கம். இது நிறைவேற, எல்லாருக்கும் முன்னே புலியின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நான் செல்லவேண்டும். எனக்கு ஒரு கஜம் பின்னுல், இடமும் வலமும் கூர்மையாகப் பார்த்துக்கொண்டு திவாரி வரவேண்டும். ஆனுல், திவாரியிடம் ஆயுதம் இல்லை. திவாரிக்குப் பின்னுல் ஒரு கஜ தூரத்தில் இபட்ஸன் வரவேண்டும். புலி பின்பக்கத்திலிருந்து எங்களைத் தாக்கி விடாதபடி அவர் பாதுகாக்க வேண்டும். என் கண்ணிலோ இபட்ஸன் கண்ணிலோ, புலியின் உடல் ரோமம் துளித் தென்பட்டாலும் சரிதான்; உடனே நாங்கள் சுட்டுவிட வேண்டும். இப்படி ஏற்பாடு செய்து கொண்டோம்.

முந்திய நாள் இந்தப் பிரதேசத்தில் ஆடுமாடுகள் மேய்ந்து, தரையைத் துவைத்திருந்தன. ரத்தக் கறையே இல்லை. எங்கேயோ ஒரிடத்தில் ஓர் இலை

மல்லாந்திருக்கும்; அல்லது ஒரு புல் நுனி நசுங்கிக் கிடக்கும். இதைக் கொண்டே புலியின் சுவட்டைக் கண்டுபிடிக்க வேண்டியதா யிருந்தது. எனவே, மெல்ல மெல்லத்தான் நாங்கள் செல்ல முடிந்தது. ஆளைப் புலி இரு நூறு கஜ தூரம் தூக்கிச் சென்று, அங்கேயே கொன்று போட்டு விட்டுப் போயிருக்கிறது. பல மணி நேரத்துக்குப் பின்னே திரும்பிவந்து பிணத்தைத் தூக்கிச் சென்றிருக்கிறது. இந்தச் சமயத்தில் குட்டை மான்கள் பல இந்தத் திசையில் கத்தியதை, தக் மக்கள் பலர் கேட்டிருக்கிறார்கள். ஆளைப் புலி தாக்கியதை அவனுடைய மாடுகள் கண்டு, அதை முட்டித் துரத்தியிருக்கலாம். புலி அவனைக் கொன்ற பிறகு தூக்கிச் செல்லாததற்கு ஒருவேளை இதுவே காரணமா யிருக்கலாம்.

ஆளைப் புலி கிடத்திய இடத்தில், ரத்தம் ஒரு குட்டை போல் தேங்கி யிருந்தது. அவன் குரல்வளைக் காயத்தி லிருந்து ரத்தம் வெளியே பாய்வது நின்றுவிட்ட பிறகே, புலி மீண்டும் வந்து அவனைத் தூக்கிச் சென் றிருக்கிறது. முதல் தடவை கழுத்தைப் பிடித்து இழுத் துச் சென்றிருக்கிறது. அதை விட்டு இந்தத் தடவை நடு முதுகைப் பிடித்துத் தூக்கிச் சென்றிருக்கிறது. இதனால் புலியின் சுவட்டைக் கண்டு பிடித்துச் செல்வது முன்னைவிடக் கஷ்டமாய்ப் போயிற்று. குன்றின் மேலேயே புலி சென்றிருக்கிறது. இங்கே புல்லும் செடியும் மிக அடர்த்தியாய் வளர்ந்திருந்தன. சில கஜ தூரத்துக்கு அப்பால் இருக்கும் பொருள்களே கண்ணுக்குத் தெரியவில்லை. நாங்கள் மெதுவாகத்தான் முன்னேறிச் செல்ல முடிந்தது. அரை மைல் தூரத் தைக் கடக்க இரண்டு மணி நேரம் ஆயிற்று. முகட்டை அடைந்தோம். இந்த முகட்டுக்கு மறுபுறம்



ஒரு பள்ளத்தாக்கு இருக்கிறது. ஆறு மாதத்துக்கு முன் சுகா புலியின் சுவட்டைப் பின்பற்றி, அதைக் கண்டுபிடித்து, இந்தப் பள்ளத்தாக்கில்தான் சுட்டுக் கொன்றோம். இந்த முகட்டில் பலகை போல் தட்டை யான பெரும் பாறை ஒன்று இருந்தது. அது நாங்கள் வந்த திசைக்கு எதிர்த் திசையில் மேல் நோக்கிச் சரிவாகச் சாய்ந்திருந்தது. இந்தப் பாறையின் வலது பக்கமாகப் புலியின் அடிச்சுவடு சென்றது. ஆகவே, இந்தப் பாறைப் பலகை கவிந்திருக்கும் இடத்தின் அடியிலேயோ, அதற்கு அண்டை அயலி லேயோதான் புலி படுத்துக்கொண் டிருக்கிறது என்று எனக்கு நிச்சயமாய்த் தோன்றிற்று.

இபட்ஸனும் நானும் அடிப்பக்கம் ரப்பர் பொருத்திய ஜோடு அணிந்திருந்தோம். திவாரி வெறுங் காலோடு வந்தான். எனவே, சந்தடி செய்யாமல், நாங்கள் மூவரும் பாறையை அடைந்தோம். அசையாமல் நின்று சுற்றிலும் ஜாக்கிரதையாய்க் கவனித்துக் கொண்டிருக்கும்படி என் துணைவர்களுக்கு எச்சரித்து விட்டு, நான் பாறைமீது தொற்றி, அங்குலம் அங்குல மாக நகர்ந்து, மேலே ஏறினேன். பாறைக்கு அப்பால் சம தரையாகச் சிறு திட்டு ஒன்று இருந்தது. அது வரவர நன்றாகப் புலப்பட்டது; பாறைக்குக் கீழேதான் புலி படுத்திருக்கிறது என்ற என் சந்தேகம் இதி லிருந்து உறுதிப்பட்டது. நான் ஏறுவதற்கு இன்னும் ஒன்று அல்லது இரண்டடி தூரம் பாக்கியிருந்த சம யத்தில், என் முன்னே வலது பக்கத்தில் ஏதோ அசைவது தென்பட்டது. கிருஸாந்திமம் என்ற மஞ்சள் பூச்செடி ஒன்று அமுங்கி, பிறகு நிமிர்ந்து நின்றது. ஒரு கணம் சென்றதும், அதற்கப்பால் இருந்த புதர்கள் மெல்ல அசைந்தன. புதர்களுக்கு



மேலே இருந்த வயலிலிருந்து புலி அப்போது அவள்மீது பாய்ந்திருக்கிறது. (பார்க்க: பக். 11)

மறுபுறத்தில் நின்ற மரத்தின்மேல் இருந்த ஒரு குரங்கு 'கீ-கீ' என்று கத்தியது.

உணவுகொண்ட களைப்புத் தீரத் தூங்குவதற்கு, புலி வெகு ஜாக்கிரதையாக இந்த இடத்தைப் பார்த்துப் பிடித்திருக்கிறது. ஆனால், எங்கள் துரதிருஷ்டம், இன்னும் அது தூங்கவில்லை. இப்போது நான் தொப்பியை எடுத்துவிட்டு வெறுந் தலையோடு இருந்தேன். பாறைக்கு மேலே என் உச்சந்தலை புலிக்குத் தென்பட்டிருக்கிறது. உடனே அது எழுந்து, பல புதர்கள் அடர்த்தியாகச் சூழ்ந்திருந்த ஓரிடத்திலே புகுந்து ஒளிந்து கொண்டது. அந்த இடத்தை விட்டு அது வேறு எங்கேயாவது படுத்திருக்குமானால்-அது என்னதான் வேகமாகக் கிளம்பிச் செல்ல முயன்றிருந்தாலும்-என் துப்பாக்கிக் குண்டுக்கு இலக்காகாமல் தப்பி ஓடியிருக்க முடியாது. நாங்கள் எவ்வளவோ ஜாக்கிரதையாகப் பதுங்கிப் பதுங்கித் தொடர்ந்து வந்தும், கடைசி நேரத்திலே எங்கள் முயற்சி பலிக்காமல் போயிற்று. புலிக்குப் பலியான ஆளின் சவத்தைக் கண்டுபிடிப்பதைத் தவிர, இப்போது வேறு ஒன்றும் செய்வதற்கில்லை. ஆளின் உடம்பில் ஏதாவது மிஞ்சியிருக்கிறதா என்று பார்க்கலாம். அப்படி மிஞ்சியிருந்தால், அதற்கு அருகே உட்கார்ந்து, காத்திருக்கலாம். புலி பதுங்கியிருக்கும் புதர்க் கூட்டத்துக்குள்ளே அதைத் தொடர்ந்து செல்வது பயனில்லை. அப்படிச் சென்றிருந்தால், பின்னால் எங்களுக்குப் புலியைச் சுடக் கிடைத்த ஒரு வாய்ப்புக்கூட ஒரு வேளை கிடைத்திராமற் போயிருக்கலாம்.

தான் படுத்திருந்த இடத்துக்கு அருகிலேயே, தன் இரையைப் புலி தின்றிருக்கிறது. இந்த இடம் திறந்த வெளியாக இருந்தது. மேலே பறக்கும் கழுகு

களின் கூர்மையான கண்ணுக்குத் தட்டுப்படக் கூடியது. இதனுல், ஆகாயத்திலிருந்து கண்ணுக்குத் தெரியாத பத்திரமான மற்ருேர் இடத்துக்கு இரையை அது கொண்டுபோய் வைத்திருக்கிறது. இப்போது அந்தச் சுவட்டைக் கண்டுபிடித்துச் செல்வது எனக்கு எளிதாயிருந்தது. ஏனென்ருல், ரத்தக்கறை வழி நெடுக இருந்தது. ரத்தக்கறைச் சுவட்டைத் தொடர்ந்து சென்றதில், அது பெரிய பாறைகளின் முகட்டுக்கு மேலே போயிற்று. இந்தப் பாறைகளுக்கு ஐம்பது கஜ தூரத்துக்கு அப்பால், ஆளின் சவம் கிடந்தது.

சில மணி நேரத்துக்கு முன்புதான் மனிதனுய்-இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையாய்-இதோ விதவைக் கோலத்தை எதிர்பார்த்து அழுது புலம்பிக் கொண்டிருக்கும் பெண்ணுக்கு உணவுதேடி அளிக்கும் போஷகனுய்-இருந்தது அந்த உடல். இப்போது சிதைந்து சின்ன பின்னமாய் அது கிடந்த நிலையை எல்லாம் வர்ணித்து, உங்கள் உள்ளத்துக்கு நான் வேதனை தரப் போவதில்லை. முப்பத்திரண்டு வருஷ காலம் ஆட்கொல்லிப் புலிகளை நான் வேட்டையாடி வந்திருக்கிறேன். அந்தக் காலத்தில் இந்தமாதிரி எத்தனையோ காட்சிகளைக் கண்டிருக்கிறேன். ஒவ்வொன்றும் முந்தியதைவிட அதிக பயங்கரமாய்த் தான் இருக்கும். சிதைந்து உருக்குலைந்த மாமிசப் பிண்டத்தை மீட்டுக்கொண்டு வந்தால், அதைப் பார்த்தவரெல்லாம் பின்னுல் என்றென்றும் தீய கனுக் கண்டு இரவிலே தூக்கம் இழந்து போவார்கள். அப்படி மீட்பதைவிட, கொன்ற புலியிடமே சவத்தை விட்டுவிடுவது மேல் என்றுதான் ஒவ்வொரு தடவையும் எனக்குத் தோன்றுவது வழக்கம். ஆனுல்,



'ரத்தத்துக்கு ரத்தம் சிந்திப் பழிவாங்க வேண்டும்; நாட்டுப்புற மக்களைப் பேரபாயத்திலிருந்து விடுவிக்க வேண்டும்' என்ற ஆசை மிகக் கடுமையாய் என்னை விடாது பற்றிக்கொள்ளும். தவிர, 'புலி தாக்கிய ஆள், ஏதாவது அற்புதம் நடந்து, இன்னமும் உயிருடன் இருக்க மாட்டானு? அப்படியிருந்தால், அவனுக்கு உதவி அளிக்கலாமே' என்ற நம்பிக்கையும் ஏற்படும். இது மிகவும் அசட்டுத்தனமான நம்பிக்கை என்று எவ்வளவுதான் தெரிந்திருந்தும், எனக்கு ஏற்படாமல் போவதில்லை.

பலிகொண்ட இரையைத் தின்றுகொண்டிருந்த போது யாரோ சுட்டதால் ஆட்கொல்லியாக மாறியிருக்கக்கூடிய ஒரு புலியை, அது மீண்டும் பலிகொண்ட இரையைத் தின்று கொண்டிருக்கும்போது சுட்டுக் கொல்லும் முயற்சி அநேகமாய்ப் பலிக்காது. தவிர, பின்னுல் எந்தக் காரணத்தினுலாவது இதே போல் பலிக்காமல்போன நம்முடைய ஒவ்வொரு முயற்சிக்குப் பிறகும், புலி மேலும் மேலும் ஜாக்கிரதையாகி விடுகிறது. கடைசியில் மிகுந்த எச்சரிக்கை கொள்கிறது. அப்போது, பலிகொண்ட ஓர் இரையை ஒரே தடவை சிறிது சாப்பிட்டதோடு கைவிட்டுப் போய் விடும். தவறி, மீண்டும் அந்த இரையிடம் வருவதனுல், துளியும் சந்தடியில்லாமல் மெல்ல மெல்ல நிழல்போல் தான் வரும். தன்னைக் கொல்ல யாராவது வந்திருப்பார்களோ என்று ஒவ்வோர் இலையின் ஆட்டத்தையும் குச்சியின் அசைவையும் ஆராய்ந்து பார்க்கும். வந்திருப்பவர் எவ்வளவுதான் ஜாக்கிரதையாகவும் சந்தடியில்லாமலும் ஒளிந்திருந்தால்கூட, அவரைக் கண்டு பிடித்துவிடும். இந்த நிலையில் அதைச் சுட முயல்வது கோடியில் ஒரு தடவையே பலிக்கும். என்ருலும்

அப்படிப் பலிக்கும் வாய்ப்புக் கிட்டாதா என்ற ஆவலை யார் தான் கை விடுவார்கள் ?

பெண் புலி பதுங்கிய புதர்க்கூட்டம் நாற்பதடி சதுரம் இருந்தது. குரங்கின் கண்ணில் படாமல் அது வெளியே வரமுடியாது. அப்போது குரங்கு எங்களுக்கு எச்சரிக்கை செய்யும். நாங்கள் இல்லாத சமயத்தில் இரையைப் புலி வேறிடத்துக்குத் தூக்கிக்கொண்டு போய்விடுவது நிச்சயம். ஆளின் முழு உடம்பையும் அது தூக்கிச் சென்றபோதே, அதன் சுவட்டைக் கண்டு பிடித்துத் தொடர்வது கஷ்டமாயிருந்தது. இப்போது புலியின் சுமை மிகவும் இலேசாகிவிட்டது. புலிக்குக் கலவரமும் ஏற்பட்டு விட்டது. அது அநேக மாய்ப் பல மைல் தூரம் சென்றுவிடும். பலியான ஆளின் சவத்துண்டை மீண்டும் நாங்கள் பார்க்கவே முடியாது போகலாம். ஆகவே, எங்களில் ஒருவர் இந்த இடத்திலேயே இருப்பது அவசியம். மற்ற இரண்டு பேரும் மட்டும் சில கயிறுகள் எடுத்துவரக் கிராமத்துக்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்று முடிவு செய்தோம்.

அபாயத்தைப் பற்றி இபட்ஸன் சட்டைசெய்வதே யில்லை. ஆகவே, அவர் திரும்பிச் செல்ல முன் வந்தார். சமீபத்தில் நாங்கள் வந்த வழி சிரமமான தாக இருந்ததால், அதைவிட்டு ஒதுங்கிச் செல்வதற் காக இபட்ஸனும் திவாரியும் குன்றிலிருந்து கீழே இறங்கினார்கள். சவம் கிடந்த இடத்துக்கு அருகே இருந்த சிறிய மரம் ஒன்றில் நான் ஏறிக்கொண்டேன். தரையிலிருந்து நான்கடி உயரத்தில் மரம் இரண்டு கிளைகளாகப் பிரிந்திருந்தது. ஒரு கிளையில் சாய்ந்து கொண்டு மறு கிளையில் காலைப் படியவைத்துக் கொண் டேன். ஆபத்தான இந்த ஆசனத்தில் எப்படியோ



சமாளித்து அமர்ந்திருந்தேன். புலி தன் இரையைத் தின்ன மீண்டும் நெருங்கி வருமானால், அதைக் காண்ப தற்கு வசதியான உயரம் இது. தவிர, என்னைத் தாக்கப் புலி முயன்றால், அது என்னை அடிக்கக்கூடிய தூரத்துக்குள் வருவதற்கு முன், இந்த உயரத்தி லிருந்து நான் அதைக் கண்டு கொள்ளலாம்.

இபட்ஸன் போய்ப் பதினைந்து அல்லது இருபது நிமிஷம் சென்றிருக்கும். அப்போது ஒரு பாறை சிறிது முன்புறமாகச் சாய்ந்து பிறகு நிமிர்ந்த சப்தம் கேட்டது. தலையாட்டிப் பொம்மை மாதிரி, பாறை தளுக்காக நின்றுகொண் டிருந்திருக்கிறது. புலி காலை வைத்ததும் அதன் பாரம் தாங்காமல் சாய்ந் திருக்கிறது. அது காலை எடுத்ததும், பாறை பழைய படி நிமிர்ந்து விட்டது. இந்தச் சப்தம் என் முன் புறத்தில் வலது பக்கமாகச் சுமார் இருபது கஜ தூரத்திலிருந்து வந்தது. புலி என்னை மரத்திலிருந்து அடித்துத் தள்ளமுடியாத நிலையில் அமர்ந்து கொண்டு, இந்த ஒரு திசையில் இருந்துதான் அதை நான் சுடுவது சாத்தியம்.

என் நம்பிக்கை உச்ச நிலையை அடைந்தது. நிமி ஷங்கள் சென்றன. அந்த ஒவ்வொரு நிமிஷமும் செல்லச் செல்ல, என் நம்பிக்கையும் படிப்படியாக இறங்கிக் குறைந்துகொண்டே வந்தது. என் நாடி நரம்புகளை யெல்லாம் முடுக்கிவிட்டது போல உடம்பு ஒரேயடியாய்ப் பரபரப்புற்றது. பாரமான துப்பாக்கி வைத்திருந்தேன். அதன் சுமையைத் தாங்க முடிய வில்லை. இந்தச் சமயத்தில் புதர்க்கூட்டத்தின் மேலே ஒரு குச்சி ஒடிந்த சப்தம் கேட்டது. காட்டிலே ஒரு புலி எப்படி நகர்கிறது என்பதற்கு இது ஓர் உதா ரணம். இந்தப் புலி எழுப்பிய சப்தங்களைக் கொண்டு,

இதன் இருப்பிடத்தைத் திட்டமாக நான் அறிந்து கொண்டேன். அந்த இடத்தின் மீதே என் கண்கள் பதிந்திருந்தன. ஆயினும், இது வந்து என்னைப் பார்த்து, சற்று நேரம் என்னையே கவனித்துக் கொண்டிருந்துவிட்டு, பிறகு ஓடிப்போய்விட்டது. அப்போது ஓர் இலை அல்லது புல்லிதழ்கூட அசைந்ததாக என் கண்ணுக்குத் தட்டுப் படவில்லை.

நரம்புகள் நிதானப்பட்டுப் பரபரப்புத் தணியும் போது, ஏற்கனவே வலி தாங்காமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் தசைகளைச் சௌகரியமாக நீட்டி மடக்குவது அவசியம். ஆனால், இங்கே நானே என் துப்பாக்கியை மட்டுந்தான் இறக்கி என் முழங்கால் மீது வைத்துக்கொள்ள முடிந்தது. என் கையும் தோளும் பட்ட அவதி மட்டுமே இதனால் சற்றுக் குறைந்தது. ஆயினும், இதுவே என் உடம்பு முழுவதற்கும் ஆறுதலளித்ததுபோல் எனக்குக் களிப்பு ஏற்பட்டது. புலியிடமிருந்து இதற்கு மேல் எந்த விதமான சப்தமும் வரவில்லை. ஒன்று அல்லது இரண்டு மணி நேரத்துக்கெல்லாம் இபட்ஸன் திரும்பி வந்து கொண்டிருக்கும் காலடிச் சப்தம் கேட்டது.

நான் வேட்டையாடச் சென்ற சமயங்களில் எனக்குத் துணையாக வந்த சகல மனிதர்களுக்குள்ளும் மிகச் சிறந்தவர் இபட்ஸன்தான். அவர் சிங்கத்தைப் போல் அஞ்சா நெஞ்சம் படைத்தவர். எதையும் நன்றாகச் சிந்திக்கக் கூடியவர். துப்பாக்கி தாங்கிய மனிதர்களுக்குள்ளே துளியும் தன்னலம் கருதாதவர். கயிறு கொண்டு வரவே அவர் சென்றார். ஆனால், திரும்பி வரும்போது, கம்பளி, மெத்தை, நான்கூடக் குடிக்க முடியாத அவ்வளவு சூடான தேநீர், நிறையச் சிற்றுண்டி இவற்றையும் கொண்டு வந்தார்.



சற்று ஒதுக்குப்புறமாக நான் சிற்றுண்டி அருந்த உட்கார்ந்தேன். இந்தச் சமயத்தில் புலியின் கவனத்தை வேறு பக்கம் இழுப்பதற்காக, ஓர் ஆளை இபட்ஸன் நாற்பது கஜ தூரத்துக்கு அப்பால் இருந்த ஒரு மரத்தின்மீது ஏறி உட்கார்ந்திருக்கச் சொன்னார். சவத்துக்கு மேலே கவிந்திருந்த ஒரு மரத்தின் மீது கயிற்றுப் பரண் கட்டுவதற்காக, தாம் தொற்றி ஏறினார்.

பரண் கட்டி முடிந்ததும், அருவருப்பு அடையாமல் ஆளின் சவத்தைச் சில அடி தூரம் இழுத்துச் சென்றார். அதைப் புலி தூக்கிக்கொண்டு போய்விடாதபடி தடுப்பதற்காக, ஒரு மரக்கன்றின் அடிக்கட்டையில் கட்டி வைத்தார். ஏனென்றால், அப்போது தேய்பிறைக் காலம்; புதர் அடர்ந்த இந்தக் காட்டில் இரவின் முதல் இரண்டு மணி நேரமும் கும்மிருட்டாயிருக்கும். சிற்றுண்டிக்குப் பின் கடைசியாக ஒரு சிகரெட் குடித்து, பரண்மீது நான் தொற்றி ஏறிக் கொண்டேன். புலியின் கவனத்தை வேறு திசையில் இழுப்பதற்காக மரத்தில் உட்கார்ந்திருந்த மனிதனை இபட்ஸன் இறக்கி விட்டார். தம்முடைய மனைவியை ஸெம் கிராம முகாமுக்கு அழைத்துக் கொண்டு போவதற்காக, தக் கிராமம் இருக்கும் திசையில் ஆட்களுடன் அவர் புறப்பட்டார்.

அவர்கள் என் கண்ணுக்குத் தெரியாதபடி மறைந்து விட்டார்கள்; ஆனால், அவர்களுடைய சந்தடி இன்னும் என் காதில் விழுந்து கொண்டிருந்தது. இந்தச் சமயத்தில் இலைகளின் மீது ஏதோ பலமாய் உராயும் சப்தம் கேட்டது. இவ்வளவு நாழிகையும் ஒரு புதரின் மறு பக்கத்தில் வாய்மூடி உட்கார்ந்திருந்த குரங்கு, இதே சமயம்

கூச்சலிடத் தொடங்கியது. நான் எதிர்பார்த்ததை விட அதிக அதிருஷ்டம் எனக்குக் கிட்டியதாகத் தோன்றியது. புலியின் கவனத்தை வேறு பக்கம் இழுப்பதற்காக நாங்கள் செய்த தந்திரம் பலித்த தென்று எண்ணினேன். ஒரே பரபரப்பாக ஒன்று, இரண்டு, மூன்று நிமிஷ நேரம் கழிந்தது. பிறகு, நான் எங்கேயிருந்து பாறைப் பலகை மீது தொற்றி ஏறினேனோ அந்த முகட்டிலிருந்து காட்டாடு ஒன்று கத்திக்கொண்டே என்னை நோக்கிப் பாய்ந்தோடி வந்தது. புலி சவத்தைத் தின்ன வரவில்லை; இபட்ஸனைத்தான் தொடர்ந்து சென்றுவிட்டது. எனக்கு இப்போது பெருங் கவலையாய்ப் போயிற்று. ஏனென்றால், புலி தான் கொன்ற இரையை விட்டுவிட்டு மற்றோர் ஆளைப் பலிகொள்ளக் கிளம்பியிருக்கிறது!

தாம் சகல முன்னெச்சரிக்கையும் எடுத்துக்கொள்வதாக என்னிடம் வாக்களித்து விட்டே இபட்ஸன் புறப்பட்டார். ஆயினும், முகட்டுக்கு அருகே நான் இருக்கும் பக்கத்தில் காட்டாடு கத்திய சப்தத்தைக் கேட்ட அவர், ஆளின் சவத்துக்கு அண்டையிலேயே புலி நடமாடுவதாக நினைத்துவிடுவது இயல்பு. அப்படி நினைத்து, அவர் சற்று அஜாக்கிரதையா யிருந்து விட்டால், புலியின் பாடு கொண்டாட்ட மாகிவிடும். மிகுந்த மனக்கவலையுடன் பத்து நிமிஷ நேரம் கழித்தேன். அப்போது இரண்டாவது காட்டாடு ஒன்று, தக் கிராமத்துக்குச் செல்லும் திசையில் கத்துவது கேட்டது. புலி இன்னும் அவர்களைத் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனால், அங்கே இடம் கொஞ்சம் திறப்பான வெளி. திறந்த வெளியில் அவர்களை அது தாக்குமோ என்ற பயம் சற்றுக் குறைவு. ஆயினும், இபட்ஸனுக்கும் அவருடைய துணைவர்



களுக்கும் நேரிட்டிருக்கும் அபாயம் அடியோடு விலகிவிடவில்லை. ஏனென்றால், அவர்கள் முகாமுக்குப் போய்ச்சேர, மிக அடர்த்தியான காட்டு வழியிலே இன்னும் இரண்டு மைல் தூரம் நடந்தாக வேண்டும். நான் துப்பாக்கி சுடும் சப்தத்தைக் கேட்பதற்காகச் சூரியாஸ்தமனம் வரையில் தக் கிராமத்திலேயே அவர்கள் தங்கியிருப்பார்களானால், அவர்களுக்குப் பெருத்த அபாயம் விளையும். நான் அஞ்சிய படியே அவர்கள் அங்கேதான் தங்கியிருந் திருக்கிறார்கள். ஆயினும் அதிருஷ்டவசமாக அபாயத்தை இபட்ஸன் அறிந்துகொண் டிருக்கிறார். தம் ஆட்களையெல்லாம் ஒன்றாகச் சேர்ந்தேயிருக்கும்படி செய்து, பத்திரமாய் முகாமுக்கு அழைத்துச் சென்றிருக்கிறார். வழி நெடுகப் புலி அவர்களைத் தொடர்ந்து சென்றிருக்கிறது. அடுத்த நாள் காலையில் புலியின் அடிச்சுவடுகளைப் பார்த்தபோது இது புலப்பட்டது.

காட்டாடும் குட்டை மானும் கத்திய சப்தங்களைக் கொண்டு புலியின் நடமாட்டத்தை நான் ஊகிக்க முடிந்தது. சூரியாஸ்தமனமாகி ஒரு மணி நேரத்துக்கெல்லாம், கீழே இரண்டு மைல் தூரத்துக்கு அப்பால் உள்ள பள்ளத்தாக்குக்குப் புலி போய்விட்டது. தான் கொன்ற ஆளின் சவத்தைத் தேடிப் புலி திரும்பிவரும் வாய்ப்பு, கோடியில் ஒன்றுதான். ஆயினும், அந்த வாய்ப்பையும் நான் நழுவவிடத் தயாரில்லை. இரவிலே கடுங் குளிரா யிருந்ததால், கம்பளியை எடுத்து நன்றாகப் போர்த்துக் கொண்டேன். பல மணி நேரம் அசையாமலே சௌகரியமாக இருக்கக்கூடிய ஒரு நிலையில் உட்கார்ந்து கொண்டேன்.

மாலை 4 மணிக்கெல்லாம் பரணில் நான் உட்கார்ந்தேன். இரவு பத்து மணிக்கு இரண்டு விலங்குகள்

குன்றிலிருந்து நான் இருக்கும் பக்கமாக இறங்கி வரும் சப்தம் கேட்டது. மரத்துக்குக் கீழே இருட்டா யிருந்ததால் அவற்றைப் பார்க்க முடியவில்லை. ஆனால், ஆளின் சவம் கிடக்கும் இடத்தின் அருகே அவை வந்தபோது, முள்ளம் பன்றிகள் என்று ஊகித்து விட்டேன். தங்கள் முட்களை உலுப்பிக்கொண்டும், தங்களுக்கே உரிய ஒருவித உறுமல் சப்தத்தைச் செய்து கொண்டும் சவத்தை நெருங்கி, பல முறை அதைச் சுற்றிச்சுற்றி வலம் வந்து, பிறகு தங்கள் வழியைப் பார்த்துக்கொண்டு அவை போய்விட்டன. இன்னும் ஒரு மணி நேரம் சென்ற பின், கீழே பள்ளத்தாக்கி லிருந்து ஏதோ ஒரு விலங்கின் சப்தம் கேட்டது. அப்போது நிலவு புறப்பட்டுச் சிறிது நேரம் ஆகி யிருந்தது. விலங்கு கிழக்கேயிருந்து மேற்கே போய்க் கொண்டிருந்தது. ஆளின் சவம் கிடந்த இடத்தின் வழியாகக் கீழ்நோக்கிப் பள்ளத்தாக்கில் வீசிய காற்றுக்கு இடையில் அது வந்தபோது, வெகு நேரம் அங்கேயே தயங்கி நின்றது. பிறகு, ஜாக்கிரதை யாகக் குன்றின் மேலே ஏறி வந்தது. சவத்துக்குச் சிறிது தூரத்தில் வந்ததும், மூக்கை உறிஞ்சி உறிஞ்சி மோப்பம் பிடித்தது. அது ஒரு கரடி என்று நான் அறிந்து கொண்டேன். ரத்த வாசனை அதைக் கவர்ந் திருக்கிறது. ஆனால், மனித ரத்த வாசனையா யிருந் தது அதற்குச் சற்றுப் பிடிக்கவில்லை. இருந்தாலும் எதற்கும் பார்த்து விடலாம் என்று, சவத்தின் அருகே வெகு ஜாக்கிரதையாகப் பதுங்கிப்பதுங்கி வந்தது. காட்டு விலங்குகளுக்குள்ளே மிகவும் கூர்மையான மூக்கு உடையது கரடிதான். பள்ளத்தாக்கில் வரும் போதே கரடிக்கு இந்த ஆளின் சவம் ஒரு புலியின் சொத்து என்பது தெரிந்துவிட்டது. ஹிமாலயத்துக்



கரடி, எதற்கும் அஞ்சாது. ஒரு புலி கொன்ற இரையை அந்தப் புலியே கைவிட்டு ஓடும்படி ஹிமாலயத்துக் கரடி விரட்டிவிடும். இதைப் பலமுறை என் கண்ணாரக் கண்டிருக்கிறேன். ஆகவே, புலியின் சொத்து என்ப தற்காக இந்தக் கரடி தயங்கவில்லை. மனித வாசனை யோடு, ரத்த வாசனையும் புலி வாசனையும் கலந்திருந் ததுதான் அதற்குப் பிடிக்கவில்லை. சமதரையான திட்டுக்கு வந்ததும், சவத்துக்குச் சில கஜ தூரத்தில் பின் னங்கால்கள்மீது கரடி குந்தி அமர்ந்திருந்தது. வெறுக் கத்தக்க இந்த மனித வாசனை தனக்கொன்றும் அபாயம் விளைவிப்பதல்ல என்று திருப்தி ஏற்பட்டதும், கரடி நிமிர்ந்து நின்று தலையைத் திருப்பி, நீண்ட தொரு குரல் கொடுத்தது. அது பள்ளத்தாக்கிலே எதிரொலி எழுப்பிக்கொண்டு போயிற்று. கரடி தன் துணைவிக்குச் செய்தி அறிவிக்கிறது என்று இதற்கு நான் பொருள் செய்து கொண்டேன். பிறகு அது சற்றும் தயங்காமல் துணிச்சலாகச் சவத்தின் அருகே சென்று, மோந்து பார்க்கத் தொடங்கியது. உடனே அதன் மீது என் துப்பாக்கியைக் குறிவைத்தேன். ஹிமாலயத்துக் கரடி மனித உடலைத் தின்றதை ஒரே ஒரு சமயம்தான் நான் கண்டிருக்கிறேன். புல் அறுத் துக்கொண்டிருந்த ஒரு பெண் ஒரு குன்றிலிருந்து கீழே விழுந்து மாண்டுவிட்டாள். சிதைந்த அவள் உடலைக் கண்ட கரடி, அதைத் தூக்கிக் கொண்டுபோய்த் தின்றுவிட்டது. ஆனால், என் துப்பாக்கிக்கு இலக் காகத் தோளைக் காட்டிக்கொண்டிருக்கும் இந்தக் கரடியோ, மனித மாமிசத்தை வெறுப்பதாகத் தோன் றியது. சவத்தைப் பார்த்தது; மோந்தது. பிறகு மேற் குத் திசையிலே போய்விட்டது. அதன் காலடிச் சப் தம் அடியோடு மங்கியதும், பழையபடி காட்டிலே

நிச்சப்தம் நிலவியது. சூரியோதயமாகிச் சற்று நேரம் செல்லும் வரையில், இந்த நிச்சப்தம் குலையவில்லை. அப்போது தான் இபட்ஸன் திரும்பி வந்தார். அவர் வருகை எனக்கு மகிழ்ச்சி யளித்தது.

இறந்த ஆளின் தம்பியும் பிற உறவினர்களும் இபட்ஸனேடு வந்தார்கள். மிஞ்சிக் கிடந்த சவத் துண்டைப் பயபக்தியுடன் சுத்தமான ஒரு வெள்ளைத் துணியிலே அவர்கள் சுருட்டினுர்கள். இபட்ஸன் கொடுத்த ஒரு கயிற்றை இரண்டு மரக்கன்றுகளில் ஓர் ஏணையாகக் கட்டி அதிலே அந்தத் துணிச் சுருளை வைத்தார்கள். சர்தா நதிக்கரையில் உள்ள மயானத் துக்கு அதைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டார்கள்.

குளிரிலே பதினைன்கு மணிநேரம் இருந்ததால், எனக்கு மிகுந்த அசதியா யிருந்தது. ஆனல், இபட் ஸன் அளித்த சூடான பானத்தையும் உணவையும் அருந்தியதும், என் அசதியெல்லாம் பறந்து போயிற்று.



# 2. புலியைத் தேடியது

இருபத்தேழாந் தேதி மாலை இபட்ஸனையும் ஆட்களை யும் சூகா வரைக்கும் புலி பின்பற்றிக் கீழேசென்று விட்டு, பிறகு இரவிலே எப்போதோ லாத்யா நதியைக் கடந்து, எங்கள் முகாமுக்குப் பின்புறமுள்ள புதர்க் காட்டுக்குள் திரும்பவும் நுழைந்திருக்கிறது. இந்தப் புதர்க் காட்டினூடே ஒற்றையடிப் பாதை ஒன்று செல் கிறது. ஆட்கொல்லிப் புலி வந்து இந்தப் பாதையை அபாயமானதாகச் செய்யும் வரையில், லாத்யாப் பள் ளத்தாக்கின் கிராம மக்களெல்லாம் சாதாரணமாக இதை உபயோகித்து வந்திருக்கிறுர்கள். இருபத்தெட் டாந் தேதி இரண்டு அஞ்சல் சிப்பந்திகள் இபட் ஸனின் தபால்களை எடுத்துக்கொண்டு முதலில் தணக் புர் முகாமுக்கு வந்தபோது, அங்கே ஏதோ தாமதம் ஏற்பட்டு விட்டது. அந்த நேரத்தைச் சரிக்கட்டுவதற் காக, இந்தப் புதர்க் காட்டுக்குள்ளே புகுந்து குறுக்கு வழியில் வரக் கிளம்பி யிருக்கிறுர்கள். முன்னுல் வந்த சிப்பந்தி நல்ல வேளையாக அப்போது எச்சரிக்கையா யிருந்திருக்கிறுன். புதர்க்கூட்டத்திலே புலி மெல்ல மெல்ல நடந்து இவர்களுக்கு முன்னே பாதைக்கு அருகில் வந்து படுப்பது அவன் கண்ணுக்குத் தட்டுப் பட்டிருக்கிறது.

இபட்ஸன் அப்போதுதான் தணக்புரி லிருந்து திரும்பி வந்து சேர்ந்தார். அந்தச் சமயும் இரண்டு சிப்பந்திகளும் எங்கள் முகாமுக்குள் பாய்ந்தோடி வந்து இந்தச் செய்தியைச் சொன்னுர்கள். உடனே நாங்கள் எங்கள் சிறு துப்பாக்கிகளை எடுத்துக்

கொண்டு இதை ஆராய விரைந்தோம். பாதைக்குத் திரும்பிவந்து இந்தச் சிப்பந்திகளைக் கொஞ்ச தூரம் வரைக்கும் புலி பின்தொடர்ந் திருப்பதை அதன் காலடிச் சுவடுகளிலிருந்து கண்டுகொண்டோம். ஆனால், புலி எங்கள் கண்ணுக்குத் தென்படவில்லை. என்றாலும், புதர் மிகவும் அடர்த்தியா யிருந்த ஓரிடத்தில் செடிகள் அசையவே, ஏதோ ஒரு விலங்கு நகர்ந்து எட்டிப் போவதாக மட்டும் புலப்பட்டது.

இருபத்தொன்பதாந் தேதி ஒரு கூட்டம் ஆட்கள் தணக்புரிலிருந்து வந்து, முந்தின நாள் இரவு தங்கள் மாட்டுக் கொட்டகையிலிருந்து ஒரு காளை காணாமல் போய்விட்டதாகச் சொன்னார்கள். அதைத் தேடிப் பார்த்தார்களாம். மாட்டை யாரோ கடைசியாகப் பார்த்த இடத்தில் சிறிது ரத்தம் சிந்தியிருந்ததாம். பிற்பகல் இரண்டு மணிக்கு இபட்ஸன் தம்பதிகளும் நானும் இந்த இடத்துக்குப் போய்ச் சேர்ந்தோம். இடத்தை ஒரு கண்ணோட்டம் விட்டவுடனேயே, மாட்டைப் பெண் புலி இங்கேயே கொன்று தூக்கிக் கொண்டுபோயிருக்கிறது என்று எங்களுக்கு நிச்சயமாயிற்று. அவசரம் அவசரமாய்ச் சிற்றுண்டி அருந்தி விட்டு, இபட்ஸனும் நானும் மாட்டைப் புலி இழுத்துச் சென்ற சுவட்டைப் பின்பற்றிச் சென்றோம். பரண் அமைப்பதற்காகக் கயிறுகளைச் சுமந்து கொண்டு இரண்டு ஆட்கள் எங்களோடு வந்தார்கள். காட்டிலே ஒரு மூலையிலிருந்து எதிர் மூலைக்குக் குறுக்குவாட்டில் புலியின் சுவடு சென்றது. அங்கே நேரே ஒரு மலையிடுக்கில் புகுந்தது. போன ஏப்ரலில் பெரிய சூகா புலியை நான் சுட்டகுறி தப்பிப்போனது இந்த மலை இடுக்கில் தான். இந்த இடுக்கில் இருநூறு முந்நூறு அடி கீழே இரண்டு பாறைகளின் நடுவே காளை சிக்கிக்



கொண்டு கிடந்தது. அது பிரமாண்டமான காளை. காளையை நகர்த்தப் புலியால் முடியவில்லை போலிருக்கிறது. காளையின் பின்னங்கால் சப்பைப் பகுதியை மாத்திரம் தின்றுவிட்டு, அப்படியே போட்டுச் சென்று விட்டது.

புலி பெரும் சுமையைத் தூக்கிச் சென்றதால், அதன் பாதங்கள் பரவலாய்ப் பதிந்திருந்தன. எனவே, அது ஆட்கொல்லி தானா வேறு புலியா என்று சொல்ல முடியவில்லை. ஆனால், இந்தப் பிரதேசத்தில் உள்ள எந்தப் புலியையுமே நம்பமுடியாது. ஆகவே, புலிக்குப் பலியான மாட்டைக் காவல் புரிந்து உட்கார்ந்திருப்பது என்று தீர்மானித்தேன். மாடு கிடந்த இடத்துக்கு ஏதோ ஓரளவு கிட்ட இருந்தது ஒரே ஒரு மரந்தான். கூடவந்த ஆட்கள் அதில் ஏறிப் பரண் அமைக்கத் தொடங்கினார்கள். அந்தச் சமயத்தில் கீழே பள்ளத்தாக்கிலிருந்து புலி உறும ஆரம்பித்தது. ஆட்கள் கிடுகிடு என்று சில புரிகளை இரண்டு கிளைகளுக்கிடையிலே கட்டிவிட்டார்கள். இபட்ஸன் தம் சிறு துப்பாக்கியைக் கையில் ஏந்திக் காவல் புரிந்து கொண்டிருக்க, நான் மரத்தில் ஏறிப் பரணில் அமர்ந்தேன். இதைப் போன்ற மகா அசௌகரியமும் அபாயமுமான வேறொரு பரணில் இது வரைக்கும் நான் அமர்ந்ததே யில்லை. அடுத்த பதினான்கு மணி நேரமும் இதிலேயே அமர்ந்து அவதிப் பட்டேன். மரம் குன்றுக்கு வெளியே நீண்டு சாய்ந்திருந்தது. ஒன்றுக்கொன்று சமம் இல்லாத மூன்று கயிற்றுப்புரிகள் தான் என் பரண். சிறிது தவறினால் பாறையான மலையிடுக்கில் நூறடி பள்ளத்தில் விழ வேண்டியது தான்.

நான் மரத்தில் ஏறும்போதே புலி பல முறை உறு

மியது. மாலை மங்கிய பின்பும் சற்று நேரத்துக் கொருமுறை விட்டுவிட்டு உறுமியது. கடைசித் தடவை உறுமல் அரை மைல் தூரத்தில் உள்ள ஒரு மலை முகட்டி லிருந்து கேட்டது. இதிலிருந்து ஒரு விஷயம் புலனாயிற்று; புலி தன் இரைக்கு அருகிலேயே படுத் திருந் திருக்கிறது; மரத்தில் ஆட்கள் ஏறுவதைக் கண் டிருக்கிறது. தனக்கேற்பட்டிருக்கும் பழைய அநுப வத்திலிருந்து இதற்கு என்ன அர்த்தம் என்று அது ஊகித்து விட்டது. இப்படி நாங்கள் வந்து தொல்லை கொடுப்பதுபற்றித் தன் கண்டனத்தைத் தெரிவித்த படியே எட்டிச்சென்று விட்டது. ஏனென்றால், அடுத்த நாள் காலையில் இபட்ஸன் திரும்பி வருகிற வரையில் அந்த மூன்று கயிற்றுப் புரிகளின் மீதே நான் உட்கார்ந்திருந்தும், இரவு முழுவதும் நான் எதையும் பார்க்கவில்லை; எந்த ஒலியும் என் காதில் விழவில்லை.

காளையின் உடல் அநேகமாய்க் கழுகுகளுக்குத் தென்படாது என்று எண்ணினோம். ஏனென்றால், மலை இடுக்கு மிகவும் ஆழமாயிருந்தது. அதற்கு மேலே மரங்கள் கவிந்து மறைத்துக்கொண் டிருந்தன. காளையோ மிகப் பெரியது; புலிக்குப் பல வேளை உண வாக வரக்கூடியது. புலி அதை வேறு வசதியான இடத்துக்குக் கொண்டு செல்லும் என்றும், அந்த இடத்தில் புலியைச் சுடுவது சௌகரியமா யிருக்கும் என்றும் நாங்கள் நம்பினோம். ஆகவே, இந்த இடத் தில் உட்கார்ந்து காத்திருக்க வேண்டியிராது என்று தீர்மானித்தோம். ஆனால், நாங்கள் ஏமாந்தோம். புலி இங்கே திரும்பி வரவே யில்லை.

இரண்டு நாட்கள் சென்றன. மூன்றாம் நாள் இர வில் எங்கள் ஸெம் முகாமுக்குப் பின்புறம் நாங்கள்



கட்டியிருந்த எருமையைப் புலி கொன்று விட்டது. ஆனால் நான் சற்றுக் கவனக்குறைவா யிருந்து விட்டேன். அதனால் ஆட்கொல்லியைச் சுட்டிருக்கக் கூடிய இந்தப் பெரிய வாய்ப்பை இழந்து விட்டேன்.

எருமையைப் புலி கொன்றுவிட்ட செய்தியைச் சில ஆட்கள் வந்து சொன்னார்கள். மாட்டைக் கட்டி யிருந்த கயிற்றைப் புலி அறுத்துவிட்டதாம். கீழ்க் கோடியிலே உள்ள மலை இடுக்கில் எருமையைக் கட்டி யிருந்தோம். அந்த இடுக்கிலிருந்து மாட்டைப் புலி மேலே இழுத்துக்கொண்டு ஏறிச் சென்றுவிட்டதாம். மக்டானல்டு என்பவரும் நானும் இதே மலை இடுக்கில் தான் சென்ற ஏப்ரலில் மற்றொரு புலியைத் துரத்தி னோம். அந்தத் தடவை மலை இடுக்கிலிருந்து சிறிது தூரம் மட்டுமே மாட்டைப் புலி இழுத்துச் சென்றிருந் தது. இப்போது இந்தப் புலியும் அதே மாதிரிதான் செய்திருக்கும் என்று மிகவும் முட்டாள்தனமாக நான் முடிவு செய்து கொண்டேன்.

காலை உணவு முடிந்ததும் இபட்ஸனும் நானும் எருமையின் உடலைக் கண்டுபிடிக்கக் கிளம்பினோம். மாலையில் காவல் புரிந்து உட்கார ஏதாவது வழியிருக் கிறதா என்று பார்க்க எண்ணினோம்.

மலையிடுக்கு ஐம்பது கஜ அகலமிருந்தது; குன்றின் அடியில் மிக ஆழமாக ஓடியிருந்தது. இரு நூறு கஜம் வரைக்கும் நேராகச் சென்றது. அப்புறம் இடது பக்க மாக வளைந்திருந்தது. இந்த வளைவுக்கு அப்பால் இதற்கும் இடது பக்கத்தில் மரக் கன்றுகள் அடர்த்தி யாக முளைத்திருந்தன. அவற்றுக்குப் பின் பக்கத்தில் நூறடி உயரமுள்ள சிறு முகடு ஒன்று இருந்தது. அதில் நெருக்கமாகப் புல் வளர்ந்திருந்தது. மரக் கன்றுகளுக்கு மிகவும் அருகிலேயே மலை இடுக்கில்

சிறிய நீர்க்குட்டை ஒன்று இருந்தது. ஏப்ரலில் பல முறை இந்த மலை இடுக்கிலே நான் ஏறிச் சென்றிருக்கிறேன். இந்த மரக்கன்றுகளுக் கிடையிலே ஒரு புலி படுத்திருக்க முடியும் என்று அப்போதெல்லாம் எனக்குத் தோன்றவில்லை. எனவே, இந்த வளைவில் திரும்பும்போது நான் போதிய எச்சரிக்கை எடுத்துக் கொள்ளவில்லை. அதனால், குட்டையில் தண்ணீர் குடித்துக்கொண் டிருந்த புலி, முன்னால் எங்களைப் பார்த்து விட்டது. அது பத்திரமாய்ப் பின்வாங்கிச் செல்ல ஒரே ஒரு வழிதான் இருந்தது. அந்த வழியாக அது திரும்பி விட்டது. குன்றின்மீது செங்குத்தாக மேலே ஏறி, முகட்டைக் கடந்து, அப்பால் உள்ள சாலமரக் காட்டில் புகுந்துவிட்டது.

குன்று மிகவும் செங்குத்தாக இருந்ததால், அதில் எங்களால் ஏற முடியவில்லை. மலையிடுக்கு வழியாகவே சிறிது தூரம் சென்றோம். ஓரிடத்தில் குட்டைமான் சுவடு ஒன்று குறுக்கிட்டது. அந்தச் சுவட்டையே பின்பற்றி மலை முகட்டை அடைந்தோம். ஒரு பக்கம் மலை முகடு, ஒரு பக்கம் லாத்யா நதி, ஒரு பக்கம் எந்த விலங்கும் கீழே இறங்க முடியாத ஒரு குன்று. இப்படி மூன்று புறமும் அடைப்பான முக்கோண உருவக் காட்டுக்குள்ளே புலி இப்போது இருந்தது. காட்டின் பரப்பு ஒன்றும் அப்படி அதிகமில்லை. அதில் பல மான்கள் இருந்தன. அவை சற்று நேரத்துக் கொருதரம் எங்களுக்குப் புலியின் இருப்பிடத்தைத் தெரிவித்துக்கொண் டிருந்தன. ஆனால், எங்கள் துரதிருஷ்டம், தரையில் மழை நீர் அறுத்தோடிய ஆழமான பல வாய்க்கால் பள்ளங்கள் இருந்தன. இவற்றில் புலியின் சுவடு தப்பிப்போனதால், இறுதியில் நாங்கள் அதைப் பின்பற்ற முடியாமல் போய்விட்டது.



புலிக்குப் பலியான எருமையின் உடல் இதுவரைக்கும் எங்கள் கண்ணில் தென்படவில்லை. ஆகவே, குட்டைமானின் சுவட்டைப் பின்பற்றித் திரும்பவும் மலை இடுக்குக்குள் புகுந்தோம். அங்கே மரக்கன்றுகளுக் கிடையிலே எருமையின் உடலைப் புலி ஒளித்து வைத்திருக்கக் கண்டோம். இந்த மரக் கன்றுகள் ஆறு அங்குலம் முதல் ஓரடிவரைக்கும் சுற்றளவில் பருத்திருந்தன. ஒரு பரணைத் தாங்கக்கூடிய உரம் இவற்றுக்கு இல்லை. எனவே, பரண் கட்டலாம் என்ற ஆசையைக் கைவிட்டோம். கட்டபாறையைக் கொண்டு குன்றின் முகத்தில் ஒரு பாறைக் கல்லை நெம்பியெடுத்து நாங்கள் உட்கார ஒரு புரை செய்து கொள்ளலாம். ஆனால், ஓர் ஆட்கொல்லியோடு பழகும் போது இது உசிதம் அல்ல.

ஆயினும், புலியைச் சுடக் கிட்டக்கூடிய ஒரு வாய்ப்பை இழக்க எங்களுக்கு மனமேயில்லை. எருமையின் உடல் கிடக்கும் இடத்தருகே புல்லுக்குள் நாங்கள் ஒளிந்திருக்கலாம்; இருட்டுவதற்கு முன்னே, புலி திரும்பி வரக்கூடும்; அப்போது அது எங்களைப் பார்ப்பதற்கு முன்னே, அதை நாங்கள் பார்த்து விடலாம். இப்படி ஒரு யோசனை செய்தோம். இதற்கு இரண்டு ஆட்சேபங்கள்: (1) நாங்கள் சுடமுடியாமல் போய், புலி எங்களைத் தன் இரைக்கருகே கண்டுவிடுமானால், முன்னே அது வேறு இரண்டு இரைகளைக் கைவிட்டு ஓடியது போலவே இதையும் துறந்து ஓடிவிடும்; (2) புலியின் இரை கிடக்கும் இடத்துக்கும் எங்கள் முகாமுக்கும் இடையிலே மிக அடர்ந்த புதர்க்காடு ஒன்று இருக்கிறது; இருளில் அந்தக் காட்டிலே நாங்கள் புகுந்து சென்றோமானால், புலி எங்களை என்ன வேண்டுமானாலும் செய்துவிட

முடியும். எனவே, சற்றும் மனமில்லாமலே, அன்றிரவு எருமையின் உடலைக் காவல் செய்யாது விட்டுச்செல்ல முடிவு செய்தோம். மறுநாள் பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணினோம்.

மறுநாள் காலையில் திரும்பவும் நாங்கள் அங்கே போய்ப் பார்த்தபோது, எருமையின் உடலைப் புலி தூக்கிச் சென்று விட்டதைக் கண்டோம். பாறைக் கற்கள்மீது ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குத் தாண்டித்தாண்டி, மலை இடுக்கின் அடித் தரையிலேயே முந்நூறு கஜ தூரம் எதிர்ப்புறமாகப் புலி சென்றிருந்தது. மாட்டை இழுத்துச்சென்ற சுவடே தரையில் பதியவில்லை. இந்த இடத்தில்-மாடுகிடந்த இடத்திலிருந்து முந்நூறு கஜ தூரத்தில்-சென்றபின் எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. இங்கே ஈரத்தரையாக ஒரு திட்டு இருந்தது. அதில் புலியின் சுவடுகள் பல இருந்தன. ஒன்றாவது அது இரையைத் தூக்கிச் சென்றபோது ஏற்பட்டதாக இல்லை. நாங்கள் சுற்றிச் சுற்றி ஆராய்ந்தோம். புலி எந்த இடத்திலே மலையிடுக்கை விட்டு அகன்று, இடது பக்கக் குன்றின் மீதேறிச் சென்றிருந்ததோ அந்த இடத்தைக் கடைசியாகக் கண்டு பிடித்தோம்.

எருமையைப் புலி இழுத்துச்சென்ற குன்றின்மீது பரணிகளும் மஞ்சள் பூச்செடிகளும் ஏராளமாய் வளர்ந்து மூடிக்கொண் டிருந்தன. புலியின் சுவட்டைக் கண்டு பிடித்துத் தொடர்வது கஷ்டமாயில்லை. ஆனால், குன்றின் மீது ஏறிச் செல்வதுதான் கஷ்டமாயிருந்தது. ஏனென்றால், குன்று ஒரே செங்குத்தாக இருந்தது. சில இடங்களில் புலியின் தடத்தைவிட்டு விலகிச் சுற்றி வளைத்துக்கொண்டு சென்று சிறிது தூரத்துக்கப்பால் மீண்டும் அதை வந்துபிடிக்க



வேண்டியிருந்தது. இப்படி ஆயிரம் அடி உயரம் மிகவும் சிரமப்பட்டு ஏறி, ஒரு சிறிய பீடபூமிக்கு வந்து சேர்ந்தோம். அதன் இடது பக்கத்தில் ஒரு மைல் அகலமுள்ள குன்று ஒன்று இருந்தது. குன்றின் பக்கமாகப் பீடபூமியில் பல அறுத்தோடிகளும் வெடிப்புக்களும் இருந்தன. இந்த வெடிப்புக்களில் இரண்டு அடி முதல் ஆறு அடி வரை உயரமுள்ள சாலமரக் கன்றுகள் அடர்த்தியாக வளர்ந்திருந்தன. இந்த மறைவிடத்துக்குள்ளேதான் புலி தன் இரையைக் கொண்டு சென்றிருக்கிறது. அந்த இரையையே போய் மிதித்து விட்டோம். அப்போது தான் புலியின் இருப்பிடம் எங்களுக்குத் தெரியவந்தது.

எருமையின் உடலில் மிஞ்சிக்கிடந்த பகுதியைப் பார்த்துக்கொண்டு நாங்கள் சற்று நின்றபோது, எங்களுக்கு வலது பக்கத்தில் தாழ்ந்த உறுமல் ஒலி ஒன்று கேட்டது. எங்கள் சிறு துப்பாக்கிகளைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு, ஒரு நிமிஷம் அப்படியே காத்திருந்தோம். உறுமல் ஒலி எங்கிருந்து கேட்டதோ அதற்குச் சற்று அப்பால் செடிகள் சிறிது இயங்கும் சந்தடி கேட்டது. சாலமரக் கன்றுகளை விலக்கி வழி செய்துகொண்டு பத்து கஜ தூரம் சென்றோம். அங்கே திறப்பாகச் சிறிது இடம் இருந்தது. அதில் மெத்தென்று வளர்ந்திருந்த புல்லின்மீது புலி படுத்திருந்ததாகத் தோன்றியது. இந்தப் புல் தரைக்கு எதிர்ப் பக்கத்தில் குன்றின் சரிவு இருபதடி உயரம் மேல் நோக்கிச் சென்றது. அங்கே மற்றொரு பீடபூமி இருந்தது. எங்கள் காதில் விழுந்த ஒலி இந்தச் சரிவிலிருந்து தான் வந்தது. எங்களால் முடிந்தமட்டும் சந்தடியின்றி, இந்தச் சரிவிலே ஏறி நடந்து தட்டையான பீட பூமியை அடைந்தோம். அது சுமார் ஐம்பது கஜ

அகலம் இருந்தது. அங்கே நாங்கள் போய்ச் சேர்ந்த சமயத்தில், கீழே உள்ள மலையிடுக்கில் புலி இறங்கிச் சென்றது. அப்போது சில காட்டுக் கோழிகளும் ஒரு காட்டாடும் கலவர மடைந்தன. இனிப் புலியைப் பின்பற்றிச் செல்வது பயனில்லை. ஆகவே, எருமை கிடந்த இடத்துக்கே திரும்பினோம். புலிக்கு நல்ல உணவாகப் போதிய அளவு எருமையின் உடலில் இன்னும் ஒரு பகுதி மிஞ்சியிருந்தது. நாங்கள் உட்கார்ந்து காவல் புரிய அங்கே இரண்டு மரங்களைக் குறித்துக்கொண்டோம். பிறகு முகாமுக்குத் திரும்பினோம்.

பகல் சாப்பாட்டைச் சற்று முன்னதாகவே உண்டோம். எருமை கிடந்த இடத்துக்கு மீண்டும் சென்றோம். எங்கள் துப்பாக்கிகள் இடையூறாக இருந்தமையால் சிறிது சிரமப்பட்டே அந்த மரங்களில் ஏறினோம். ஐந்து மணி நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தோம். ஒன்றும் தென்படவில்லை; ஓர் ஒலியும் கேட்கவில்லை. மாலை மங்கியபோது, எங்கள் மரங்களிலிருந்து இறங்கினோம். வெடிப்புக்களும் மேடு பள்ளங்களும் நிறைந்திருந்த தரையிலே இடறித் தடுமாறிக்கொண்டு, மலையிடுக்கை நாங்கள் அடைந்தபோது நன்றாக இருட்டிவிட்டது. ஏதோ விலங்கு பின் தொடர்ந்து வருவது போல எங்கள் இரண்டுபேர் உள்ளத்திலுமே என்னவோ ஒரு பரபரப்பு ஏற்பட்டது. ஆனால், இரண்டு பேரும் மிக நெருங்கியிருந்தபடியே நடந்து, எவ்வித ஆபத்துமில்லாமல் இரவு ஒன்பது மணிக்கு முகாமுக்குப் போய்ச் சேர்ந்தோம்.

இந்தத் தடவை தங்களுக்கு எவ்வளவு நாள் முடியுமோ அவ்வளவு நாளும் இபட்ஸன் தம்பதிகள் ஸெம் கிராமத்தில் தங்கினார்கள். பிறகு அவர்கள் என்னிடம் விடைபெற்றுச் சென்றார்கள். அப்போது இபட்ஸன்



என்னிடம் ஒரு வாக்கு வாங்கிக்கொண்டார். புலிக்குப் பலியான இரைகளைத் தன்னந்தனியே நான் பின் தொடர்வதில்லை என்றும், ஒன்றிரண்டு நாளைக்குமேல் ஸெம் கிராமத்தில் தங்கி என் உயிருக்கு அபாயம் தேடிக்கொள்வதில்லையென்றும் அவருக்கு நான் வாக்களித்தேன்.

இபட்ஸன் தம்பதிகளும் அவர்களுடைய ஐம்பது ஆட்களும் போன பிறகு, முகாமில் நானும் என்னுடைய இரண்டு வேலையாட்களுந்தான் மிச்சம். என் கூலியாட்கள் பெரியதனக்காரரின் வீட்டு அறை ஒன்றில் வசித்துக்கொண்டிருந்தார்கள். முகாமைச் சுற்றிலும் அடர்த்தியான காடு வளைத்துக் கொண்டிருந்தது. ஆகவே பகலெல்லாம் எல்லா ஆட்களையும் சுள்ளி பொறுக்கச் சொன்னேன். இங்கே சுள்ளி மாரிவாரியாய்க் கிடந்தது. சுள்ளியைக் கொண்டு இரவு முழுவதும் தீமூட்டி வைத்திருக்க வேண்டும். அந்தத் தீயைக் கண்டு புலி மிரண்டு ஓடிவிடாது. ஆனால், இரவில் எங்கள் கூடாரங்களுக்கு அக்கம் பக்கத்திலே புலி பதுங்கி நடக்குமானால், அதை நாங்கள் கண்டுகொள்ளத் தீயின் ஒளி உதவியா யிருக்கும். இரவிலே நல்ல குளிர் எடுத்தது. ஆகவே, இரவெல்லாம் பெருந்தீ எரிந்துகொண்டிருப்பது இயற்கை என்றே புலிக்குத் தோன்றும்.

மாலையில் என் ஆட்களெல்லாம் பத்திரமாய்த் திரும்பி வந்தார்கள். லாத்யா நதியைப் புலி கடந்திருக்கிறதா என்று பார்ப்பதற்காக, சிறு துப்பாக்கியை எடுத்துக்கொண்டு நான் புறப்பட்டு, நதிக்கரையோரமாக நடந்தேன். மணலிலே பல அடிச்சுவடுகள் தென்பட்டன. ஆனால் புதிய சுவடு ஒன்றையும் காணவில்லை. அந்தி மயங்கியதும் நான் திரும்பி விட்டேன்.

நாங்கள் இருக்கும் ஆற்றின் இக்கரையில்தான் புலி இன்னும் இருந்து வருகிறது என்று எனக்கு நிச்சய மாயிற்று. ஒரு மணி நேரத்துக்கெல்லாம் ஒரேயடியாய் இருட்டிப்போயிருந்தது. அப்போது எங்கள் கூடாரங் களுக்கு அண்டையில் ஒரு காட்டாடு கத்தியது. அது அரை மணி நேரம் இடைவிடாமல் கத்தியது.

எருமைகளை வெளியே கொண்டுபோய்க் கட்டும் வேலையை இதற்கு முன் இபட்ஸனின் ஆட்கள் செய்து வந்தார்கள். இப்போது என் ஆட்களே அதை ஏற்றுக் கொண்டார்கள். எருமைகளைப் பிடித்துவர அடுத்த நாள் காலையில் அவர்கள் புறப்பட்டபோது, நானும் அவர்களுக்குத் துணை சென்றேன். நாங்கள் பல மைல் தூரம் நடந்துவிட்டோம். அப்படியும் புலியின் சுவடே எனக்குத் தென்படவில்லை. காலைச் சாப்பாடு முடிந் ததும், தூண்டிலை எடுத்துக்கொண்டு நதிக்கரைக்குப் புறப்பட்டேன். என்றையும்விட அன்று ஏராளமான மீன்கள் எனக்குக் கிடைத்தன. அங்கே பெரிய மீன்கள் நிறைந்திருந்தன. என் தூண்டில் கயிறு மிகவும் லேசு. அது பல முறை அறுந்தது என்றாலும், முகாமில் உள்ளவர்களுக்குப் போதிய அளவு மீன் களைப் பிடித்து விட்டேன்.

மீண்டும் முந்திய நாள் மாலையில் போலவே, லாத்யா நதியைக் கடந்தேன். நதியின் வலது கரையில் உள்ள திறந்த வெளி தெரியக் கூடியபடி ஒரு பாதையில் அமர்ந்து புலிக்காகக் காத்துக்கொண் டிருக்கலாம் என்பது என் நோக்கம். மலை முகடும் குன்றும் நதியும் கூடிய இந்தச் சந்தியில் 'ஓ' என்று ஆற்று நீர் இரைந்துகொண்டு பாய்ந்தது. அந்த இரைச்சலை விட்டுச் சிறிது தூரம் சென்றதும், என் இடது பக்கக் குன்றில் ஒரு காட்டாடும் ஒரு குரங்கும் கத்திய சப்தங்



களைக் கேட்டேன். பாறையை நெருங்கியதும், புலியின் புதிய சுவடுகளைக் கண்டேன். அவற்றைத் தொடர்ந்து திரும்பிச் சென்றேன். ஆற்றைப் புலி கடந்த இடத்தில் கற்கள் இன்னும் காயவில்லை. என் முகாமுக்குச் சென்று தூண்டிலைக் காய வைத்துவிட்டு, ஒரு கோப்பை தேநீர் குடித்தேன். இப்படிச் சில நிமிஷம் நான் தாமதித்ததால், ஓர் ஆளின் உயிரே கொள்ளை போய்விட்டது; பல்லாயிரம் மக்கள் வாரக் கணக்காய்த் திகிலுடன் வாழவேண்டிய தாயிற்று. நானும் பல நாள் பெருஞ் சிரமப் பட நேர்ந்தது. ஏனென்றால், மேலும் மூன்று நாள் ஸெம் கிராமத் திலேயே நான் தங்கியும், புலியைச் சுட மற்றொரு வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை.

ஏழாந் தேதி காலை முகாமைக் கலைத்துவிட்டு, இருபது மைல் தூரம் நடந்து தணக்புருக்குச் செல்ல நான் ஆயத்தமானபோது, அக்கம்பக்கத்துக் கிராமங் களில் இருந்து ஏராளமான ஆட்கள் ஒரு பெரிய கூட் டமாய் வந்து விட்டார்கள். 'எங்களைக் கொடும் புலி யிடம் விட்டுவிட்டுப் போகாதீர்கள்' என்று அவர்கள் என்னைக் கெஞ்சிக்கேட்டுக் கொண்டார்கள். அந்த மாதிரி நிலையில் உள்ள மக்களுக்கு என்ன யோசனை சொல்வது? ஏதோ எனக்குத் தோன்றியதைச் சொல்லி, 'என்னால் இயன்றமட்டும் கூடிய சீக்கிரம் திரும்பி வருகிறேன்' என்று வாக்களித்தேன்.

அடுத்த நாள் காலையில் தணக்புரில் ரெயில் ஏறி, நவம்பர் மாதம் ஒன்பதாந் தேதி, அதாவது நைனி தாலை விட்டுக் கிளம்பிய ஒரு மாத காலத்துக்குப் பிறகு, மீண்டும் அந்த நகரை அடைந்தேன்.

# 3. புலியின் அட்டூழியம்

நவம்பர் மாதம் ஏழாந் தேதி நான் ஸெம் கிராமத்தை விட்டு அகன்றேன். பன்னிரண்டாந் தேதி தக் கிராமத்தில் ஒரு மனிதனைப் புலி கொன்று விட்டது. குன்றுகளின் அடிவாரத்தில் உள்ள எங்கள் குளிர் காலத் தலைமைக் காரியாலயத்துக்கு நாங்கள் போய்ச்சேர்ந்த சில நாளைக்கெல்லாம் ஜில்லாக் காட்டிலாகா அதிகாரி ஹல்ட்வானியிடமிருந்து இந்தக் கொலை பற்றிய செய்தி எனக்குக் கிடைத்தது. பெருஞ் சிரமத்துடன் நடந்து நடந்து, இருபத்துநாலாந் தேதி காலையில் பொழுது புலர்ந்த சிறிது நேரத்துக்குள் சூகா கிராமத்துக்கு நான் போய்ச் சேர்ந்தேன்.

சூகாவில் காலை உணவை முடித்துக்கொண்டு, பிறகு தக் கிராமத்துக்குச் சென்று அதையே என் தலைமை முகாமாக வைத்துக்கொள்வதென்று எண்ணியிருந்தேன். ஆனால், தக் கிராமத்துப் பெரியதனக்காரரே சூகாவுக்கு வந்து தங்கியிருக்கக் கண்டேன். 12-ஆம் தேதி ஆளைப் புலி கொன்றதும், தக் கிராமத்து ஆண், பெண், குழந்தை குட்டிகள் அடங்கலும் அதை விட்டு வெளியேறிவிட்டார்கள் என்று அவர் எனக்குத் தெரிவித்தார். மேலும், 'உங்கள் நோக்கப்படி தக் கிராமத்தில் முகாம் போட்டீர்களோ, உங்கள் உயிரை வேண்டுமானால் நீங்கள் காப்பாற்றிக்கொள்ள முடியலாம்; உங்கள் சிப்பந்திகளின் உயிரை உங்களால் காப்பாற்ற முடியாது' என்று சொன்னார். அவர் சொன்னது முற்றும் உண்மை என்று என் மனத்தில் பட்டது. என் சிப்பந்திகள் வருகிறவரைக்கும்



அங்கேயே காத்திருந்தேன். சிப்பந்திகள் கூடிய மட்டும் பத்திரமாயிருக்கத் தக்க ஓர் இடத்தைச் சூகாவில் என் முகாமுக்குக் கண்டுபிடிக்க அவர் உதவி செய்தார். காட்டு மரங்களையெல்லாம் வெட்ட ஆயிரக்கணக்கான கூலியாட்கள் வேறு இப்போது வந்து கொண்டிருந்தார்கள். அவர்களிடமிருந்து கொஞ்சம் ஒதுக்கமாகவும் என் முகாமை அமைக்க வேண்டியிருந்தது.

ஆளைப் புலி கொன்ற செய்தியை ஜில்லாக் காட்டிலாகா அதிகாரி எனக்குத் தந்தி மூலம் தெரிவித்த உடனே, 'மூன்று இளம் எருமைகளைச் சூகாவில் என்னிடம் வந்து சேரும்படி அனுப்புங்கள்' என்று தணக்புர் தாசில்தாருக்கு நான் ஒரு தந்தி அடித்தேன். அவர் உடனே என் வேண்டுகோளை நிறைவேற்றியிருக்கிறார். முந்தின நாள் மாலையே மூன்று எருமைகளும் சூகாவுக்கு வந்து சேர்ந்திருந்தன.

காலைச் சாப்பாடு முடிந்ததும், எருமைகளில் ஒன்றைப் பிடித்து இழுத்துக்கொண்டு தக் கிராமத்துக்குப் புறப்பட்டேன். ஆளைப் புலி 12-ஆம் தேதி கொன்ற இடத்தில் அதைக் கொண்டுபோய்க் கட்ட எண்ணினேன். அன்று நிகழ்ந்த நிகழ்ச்சிகளையெல்லாம் மிக விரிவாக வர்ணித்துப் பெரியதனக்காரர் எனக்குச் சொன்னார். ஏனென்றால், அவரையே புலி அடித்துத் தின்னப் பார்த்ததாம். ஏதோ தப்பித்துக் கொண்டார். பிற்பகலில் தம்முடைய பத்து வயதுப் பேர்த்தியுடன் வீட்டுக்கு அறுபது கஜ தூரத்தில் உள்ள தமது புலத்தில் இஞ்சி தோண்டுவதற்காக அவர் சென்றிருக்கிறார். புலத்தின் பரப்புச் சுமார் அரை ஏக்கர். அதன் மூன்று பக்கமும் காடு சூழ்ந்திருந்தது. புலம் ஏறக்குறையச் செங்குத்தான ஒரு குன்றின் சரிவில் இருந்தது. பெரியதனக்காரரின் வீட்டில் இருந்து

பார்த்தாலே அது தெரியும். கிழவரும் பேர்த்தியும் கொஞ்ச நேரம் வேலை செய்திருப்பார்கள். அப்போது வீட்டிலே நெல்லுக் குத்திக்கொண் டிருந்த கிழவரின் மனைவி, மிகவும் கலவரம் அடைந்த குரலில், 'என்ன, உங்கள் தலைக்கு மேலே காட்டுக் கோழிகளும் மற்றப் பறவைகளும் காச்சுமூச்சென்று கத்துவது கேட்க வில்லையா?' என்று கூவியிருக்கிறாள். மேலும், சிவந்த விலங்கு ஒன்று புலத்தின் மேல் பக்கத்திலே புதர் களில் தன் கண்ணுக்குத் தெரிவதாகக் கத்தியிருக் கிறாள். அதைக் கேட்டு, நல்ல வேளையாக, அவர் சட் டென்று கிளம்பியிருக்கிறார். களைக் கொட்டைக் கீழே போட்டு விட்டு, குழந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு புறப்பட் டிருக்கிறார். இருவருமாக வீட்டுக்கு ஓடியிருக்கிறார்கள். அரை மணி நேரத்துக்கெல்லாம் வேறு ஓர் ஆளைப் புலி கொன்றுவிட்டது. பெரியதனக் காரரின் வீட்டுக்கு முந்நூறு கஜ தூரத்தில் இருந்த புலம் ஒன்றில் ஒரு மரத்தின் கிளைகளை அந்த ஆள் வெட்டிக்கொண் டிருந்திருக்கிறான்.

பெரியதனக்காரர் சொன்ன விவரங்களில் இருந்து, அந்த மரத்தை நான் எளிதில் கண்டுபிடித்தேன். கணுக்கள் நிறைந்து முறுக்கிக்கொண் டிருந்த சிறிய மரம். ஒன்றுக்கு மேல் ஒன்று அடுக்காக இருந்த இரண்டு புலங்களுக்கு இடைப்பட்ட மூன்றடி உயரக் கரையிலே அது வளர்ந்திருந்தது. ஆடுமாடுகளின் தீவனத்துக்காக ஒவ்வொரு வருஷமும் அதன் கிளை களைத் தறித்து வந்திருக்கிறார்கள். கொலையுண்ட மனிதன், அடிமரத்தில் நின்று ஒரு கிளையைக் கையால் பிடித்துக்கொண்டு மற்றொரு கிளையை வெட்டியிருக் கிறான். அப்போது புலி பின்புறமாக வந்து, அவன் கிளையைப் பிடித்த பிடியிலிருந்து பிய்த்திழுத்துக்





O111, 3MCO,N4
N50

கொன்றிருக்கிறது. பிறகு, புலத்தின் ஓரம் வரை நீண்டிருக்கும் அடர்த்தியான புதர்களுக்குள் அவன் உடலைத் தூக்கிச் சென்றிருக்கிறது.

குமாவும் பிரதேசத்தின் வேறு எல்லாக் கிராமங்களையும் போலவே தக் கிராமமும் நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக எத்தனையோ ஏற்றத் தாழ்வுகளை அடைந்திருக்கிறது. ஆயினும், அதன் நீண்டகாலச் சரித்திரத்திலேயே இப்போதைப்போல் மக்களெல்லாம் அதைப் பாழ் போட்டு ஓடியதில்லை. நான் அங்கே சென்ற முந்திய தடவைகளில் தேனடையில் உள்ள ஈக்கள் மாதிரி மக்கள் அதில் சுறுசுறுப்பாய்க் கைத்தொழில்கள் புரிந்து வந்ததைக் கண்டிருக்கிறேன். ஆனால் இளம் எருமையை நான் அங்கே இழுத்துச் சென்ற இன்று பிற்பகலிலோ, அந்தக் கிராமம் எங்கும் நிச்சப்தம் நிலவியது. நூறோ நூற்றுக்கு மேலோ இருந்த அந்தக் கிராமத்து மக்களில் ஒருவர் கூடப் பாக்கியில்லாமல் அத்தனை பேரும் ஓடிவிட்டார்கள். ஓடும்போது தங்கள் ஆடுமாடுகளையும் ஓட்டிச் சென்றுவிட்டார்கள். கிராமத்திலே நான் கண்ட ஒரே ஒரு விலங்கு, ஒரு பூனை மட்டுந்தான். அது என்னை அன்போடு வரவேற்றது. திறந்துகிடந்த வீட்டுக் கதவுகளைக் கூடச் சார்த்தாமல், அவ்வளவு பறந்துகொண்டு ஊரைக் காலி செய்திருக்கிறார்கள். கிராமத்தின் ஒவ்வொரு தடத்திலும் ஒவ்வொரு வீட்டு முற்றத்திலும் ஒவ்வொரு கதவுக்கும் முன்னே கிடந்த புழுதியிலும் புலியின் காலடிச் சுவடுகள் பதிந்திருந்ததை நான் கண்டேன். திறந்து கிடந்த ஒவ்வொரு வீட்டு வாயிற்படியும் அபாயமானது. ஏனென்றால், கிராமத்துக்குள்ளே புகுந்து வளைந்த் பாதை, அந்த வாயிற்படிகளுக்கு மிக அருகிலேயே சென்றது. அந்த வீடு



களில் எதற்குள்ளே வேண்டுமானாலும் புலி பதுங்கிக் கிடக்கக் கூடும்.

கிராமத்துக்கு மேலே முப்பது கஜ உயரத்தில் குன்றின்மீது பல மாட்டுக் கொட்டில்கள் இருந்தன. அவற்றின்மீது சிறு காட்டுச் சேவல்கள், சிவப்புக் காட்டுக் கோழிகள், வெள்ளைக் கொண்டைக் குருவிகள் இவற்றை யெல்லாம் கண்டேன். இதற்கு முன் ஒரு போதும் இத்தனை பறவைகளை நான் கண்டதேயில்லை. அவற்றுக் கிடையிலே நான் நடந்தபோது, அவை துளியும் பயந்தோடவில்லை. இதைப் பார்த்தபோது, தக் கிராம மக்கள் உயிர்க் கொலையே செய்வதில்லை என்ற விரதத்தை மதக் கொள்கையாகக் கடைப்பிடிப்பவர்கள் என்று புலனாயிற்று.

மாட்டுக் கொட்டில்களுக்கு மேலே ஒன்றுக்கு மேல் ஒன்று அடுக்காக இருந்த புலங்களில் இருந்தபடி கிராமம் முழுவதையும் ஒரு கண்ணோட்டம் விட முடிந்தது. கடைசி ஆளைப் புலி எந்த மரத்தில் கொன்றதோ அந்த மரத்தை, பெரியதனக்காரரின் வர்ணனையைக் கொண்டு நான் எளிதில் கண்டு பிடித்தேன். மரத்துக்குக் கீழே இருந்த மிருதுவான மண்ணில், போராட்டம் நடந்த குறிகள் இருந்தன; காய்ந்து கட்டி தட்டிய சில ரத்தக் கறைகளும் இருந்தன. உழுது கிடந்த ஒரு புலத்தின் வழியாக இங்கிருந்து நூறு கஜ தூரம் ஆளின் உடலைப் புலி தூக்கிச் சென்றிருக்கிறது. பிறகு, கனத்த் வேலி [illegible]ண்டி, அடர்ந்த புதர்க் காட்டுக்கு[illegible] கொண்டு [illegible]ருக்கிறது. கிராமத்திலிருந்து வ[illegible], வந்த வழியே திரு[illegible]பியும் சென்றிருக்கும் காலடி[illegible] [illegible]யெல்லாம் நோக்கியபோது, கிராம மக்[illegible] அடங்கலுமே இ[illegible] இடத்தைவந்து பார்த்துச் சென்றிருக்கிறார்கள் என்[illegible]



[illegible] MARU. A[illegible]
EGMORE MADRAS
111636

புலப்பட்டது. ஆனால், மரத்திலிருந்து வேலியின் பக்கம் ஒரே ஒரு காலடிச் சுவடுதான் இருந்தது. அது ஆளின் உடலைத் தூக்கிச் சென்ற புலியின் காலடிச் சுவடு. புலியைத் தொடர்ந்து சென்று ஆளின் உடலை மீட்டுக் கொண்டு வர யாரும் முயன்றதாய்த் தெரியவில்லை.

மரத்தின் வேர் தெரியும்படி அதற்குக் கீழே சற்றுக் கல்லினேன். வேரிலே என் எருமையைக் கட்டினேன். அருகே இருந்த போரிலிருந்து நிறைய வைக்கோலைப் பிடுங்கி, அதற்கு நல்ல படுக்கையாகப் பரப்பி வைத்தேன்.

குன்றின் வடக்கு முகத்தில் இருந்த கிராமத்தில் இப்போது ஒளி மங்கி நிழல் சூழ்ந்தது. இருட்டுக்கு முன் முகாமுக்கு நான் திரும்பிப் போய்ச் சேர வேண்டுமானல், இப்போதே நான் புறப்பட வேண்டும். திறந்த வீட்டுக் கதவுகளை விட்டு விலகிச் செல்வதற்காகக் கிராமத்தையே சுற்றி வளைத்துக் கொண்டு, வீடுகளுக்குக் கீழ்ப்பக்கம் உள்ள பாதைக்குப் போய்ச் சேர்ந்தேன்.

இந்தப் பாதை கிராமத்தை விட்டு அகன்றதும், ஒரு மாமரத்துக்கு அடியில் சென்றது. அந்த மரத்தின் வேர்களில் இருந்து தெளிந்த நீர் ஊற்று ஒன்று கிளம்பியது. பிரம்மாண்டமான பாறை ஒன்றில் அமைந்த ஓர் அறுத்தோடி வழியே சிறிது தூரம் அது ஓடியது. அங்கே கிராமத்து ஆட்கள் கட்டிய கரடு முரடான ஒரு கல் தொட்டியில் அந்த ஊற்று நீர் போய் விழுந்து, அதிலிருந்து பரவலாகச் சுற்றிலும் உள்ள தரையில் பாய்ந்தது. இதனல் அங்கே மண் மிக மிருதுவாகவும் சகதியாகவும் இருந்தது. நான் மேலே ஏறி வந்தபோது, இந்த ஊற்றில் கொஞ்சம்



தண்ணீர் குடித்தேன். அப்போது இந்தச் சகதியில் என் காலடிச் சுவடுகள் பதிந்து போயிருக்கின்றன. இப்போது இரண்டாவது தடவை தண்ணீர் குடிக்க ஊற்றை நான் நெருங்குகையில், முந்திப் பதிந்த என் காலடிச் சுவடுகளுக்கு மேலே புலியின் காலடிச் சுவடுகள் பதிந்திருந்ததைக் கண்டேன். புலியும் தாகத்துக்குத் தண்ணீர் குடித்திருக்கிறது. பிறகு, பாதையை விட்டு விலகிச் சென்றிருக்கிறது. முசு முசுக்கைச் செடிகள் மூடிய செங்குத்தான ஒரு மேட்டில் தொற்றி ஏறிக் கிராமத்துக்குள் புகுந்திருக்கிறது. அங்கே ஏதோ ஒரு வீட்டில் வசதியாக ஒளிந்துகொண்டிருக்கிறது. எருமையை நான் கட்டும்போது, என்னை அது அநேகமாய்க் கவனித்துக் கொண்டேதான் இருந்திருக்க வேண்டும். போன வழியிலேயே நான் திரும்பி வருவேன் என்று புலி எதிர்பார்த்திருந்திருக்கும். என்னவோ என்னுடைய நல்ல வேளை, அந்தத் திறந்த வீட்டு வாயில்கள் வழியாக இரண்டாவது முறை வருவது அபாயம் என்று நான் கண்டு, சுற்றி வளைத்துக் கொண்டு நீண்ட மற்றொரு பாதை வழியாக வந்து விட்டேன்.

சூகா கிராமத்திலிருந்து நான் மேலே ஏறி வந்தபோது, புலி என்னைத் திடீரென்று தாக்கிவிடாதிருப்பதற்கு வேண்டிய சகல முன்னெச்சரிக்கைகளையும் எடுத்துக்கொண்டேன். அப்படிச் செய்தது நல்லதாய்ப் போயிற்று. ஏனென்றல், இப்போது புலியின் காலடிச் சுவடுகளைப் பார்க்கையில், அது என்னை என் முகாமில் இருந்தே தொடர்ந்து வந்திருப்பது தெரிந்தது. அடுத்த நாள் காலையில் தக் கிராமத்துக்குத் திரும்பிச் சென்ற போது, அங்கே வீடுகளுக்குக் கீழ்ப் பக்கம் உள்ள பாதையிலே தொடங்கி, சூகாவில் உள்ள

பயிர்ப் புலங்கள் வரைக்கும் புலி என்னைப் பின் தொடர்ந்து வந்திருக்கிறது.

நான் கொண்டுவந்திருந்த விளக்கு வெளிச்சத்திலே படிப்பது சாத்தியம் இல்லை. எனவே, இரவுச் சாப்பாடு முடிந்ததும் கணப்புக்கு அருகே உட்கார்ந்தேன். அது இன்பமா யிருந்தது; உடலுக்குக் கதகதப்பா யிருந்ததோடு, பத்திரமாயிருக்கிறோம் என்ற உணர்ச்சியையும் நல்கியது. நிலைமையை முற்றும் மனத்திலே ஆராய்ந்து பார்த்தேன். புலியைத் தந்திரமாய் மடக்க ஒரு திட்டம் வகுத்துக் கொள்ள முயன்றேன்.

வீட்டை விட்டு இருபத்திரண்டாந் தேதி புறப்பட்டபோது, பத்தே நாளில் திரும்பிவிடுவதாகவும், இதுவே என் கடைசி ஆட்கொல்லி வேட்டைப் பிரயாணம் என்றும் வாக்களித்துவிட்டு வந்தேன். வருஷக் கணக்காய் அபாயத்துக்கு இலக்காகி உடலை வாட்டிக் கொண்டேன்; பல முறை நீண்ட நாட்கள் வீட்டை விட்டு வெளியேறி அலைந்து திரிந்தேன். இதனால் என் உடலும் தளரத் தொடங்கியது; வீட்டில் உள்ளவருக்கும் கவலை அதிகரித்தது. நவம்பர் மாதம் முப்பதாந் தேதிக்குள் நான் இந்த ஆட்கொல்லிப் புலியைக் கொன்று வெற்றி பெரு விட்டால், வேறு யாராவது ஒருவரைத்தான் அந்தப் பிரதேச மக்கள் இந்த வேலைக்குப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணிக் கொண்டேன்.

இது இருபத்து நாலாந் தேதி இரவு. ஆகவே, இன்னும் முழுமையாக ஆறு நாள் அவகாசம் எனக்கு இருந்தது. இன்று மாலை புலி நடந்துகொண்ட விதத்தைப் பார்த்தபோது, அது இன்னொரு மனித உயிரைப் பலிகொள்ள ஆவலா யிருந்தது என்று புலனாயிற்று. ஆகவே, எனக்கு உள்ள அவகாச காலத்துக்குள் நான் புலியைச் சந்திப்பது கஷ்டம் அல்ல. இதற்குப் பல வழிகள் உண்டு. எல்லா வழிகளையும் ஒன்றுக்குப்பின் ஒன்ருகக் கைக்கொண்டு பார்த்துவிட வேண்டியதுதான். புலி கொன்று போட்டிருக்கும் ஓர் இரைக்கு அருகே உள்ள ஏதாவது ஒரு மரத்தின் மீது உட்கார்ந்து காவல் புரிய வேண்டும். குன்றுகளில் ஒரு புலியைச் சுட்டு வெற்றிகாண வாய்ப்பு அளிக்கக் கூடிய மிகச் சிறந்த வழி இதுவே. தக் கிராமத்தில் நான் கட்டிவைத்திருக்கும் எருமையை இன்றிரவு புலி கொல்லாவிட்டால், நாளை இரவும் அதற்கு அடுத்த நாள் இரவும் என்னுடைய மற்ற இரண்டு எருமைகளையும் ஏற்கனவே நான் தேர்ந்து எடுத்திருக்கும் இடங்களில் கொண்டுபோய்க் கட்டிப் போடவேண்டும். மனித உயிர் அகப்படாவிட்டால் புலி என் எருமைகளில் ஒன்றைக் கொல்லக்கூடும். முந்திய தடவை ஏப்ரல் மாதத்தில் ஸெம் கிராமத்தில் இபட்ஸன் தம்பதிகளும் நானும் முகாம் போட்டபோது, அது இப்படித்தானே செய்தது? இரவு முழுவதும் எரிந்து கொண் டிருக்கக் கூடியபடி கணப்பில் விறகுகளை அடுக்கிவிட்டு, உள்ளே படுக்கப் போனேன். என் கூடாரத்துக்குப் பின்னே வனத்தில் ஒரு காட்டாடு கத்தியதைக் கேட்டுக்கொண்டே தூங்கிவிட்டேன்.

மறுநாள் விடிந்தது. காலை உணவு தயாராகிக் கொண் டிருக்கையில், நான் ஒரு துப்பாக்கியைக் கையில் எடுத்துக்கொண்டு வெளியே கிளம்பினேன். சூகா, ஸெம் இரண்டு கிராமங்களுக்கும் இடையிலே நதியின் வலது கரையில் நீண்டு கிடந்த மணல் பரப்பில் பதிந்துள்ள அடிச்சுவடுகளை ஆராயத் தொடங்கினேன். பயிர்ப் புலங்களை விட்டு அகன்ற

பிறகு, புதர் அடர்ந்த காட்டில் பாதை சிறிது தூரம் சென்றது. இங்கே பெரிய ஆண் சிறுத்தை ஒன்றின் அடிச்சுவடுகளைக் கண்டேன். இந்தச் சுவடுகளே முந்திய நாள் இரவு காட்டாட்டுக்குத் திகில்மூட்டி யிருக்கவேண்டும். சிறிய ஆண் புலி ஒன்று முந்திய வாரத்தில் பல தடவை லாத்யா நதியைக் கடந்து திரும்பிச் சென்றிருந்தது. அதே ஒரு வார காலத்தில் ஆட்கொல்லிப் புலி மட்டும் நதியை ஒரே ஒரு முறை தான் கடந்திருந்தது. ஸெம் கிராமம் இருந்த திசையி லிருந்து அப்போது அது வந்திருந்தது. நான் இந்த இடத்துக்கு வந்து சேரச் சிறிது நேரத்துக்கு முன்பு மணல் பரப்பில் பெருங் கரடி ஒன்று நடமாடி யிருந்தது. முகாமுக்கு நான் திரும்பிச் சென்ற போது, மரம் வெட்டும் குத்தகைக்காரர்கள் இதைப் பற்றிப் புகார் செய்தார்கள். ‘காலையில் எங்கள் தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்துக்கொண் டிருந் தோம். அப்போது ஒரு கரடி வந்து சேர்ந்தது. அது மகா பயங்கரமாய் ஆர்ப்பாட்டம் செய்தது. “கரடி வந்த பிரதேசத்தில் நாங்கள் வேலைசெய்ய மாட்டோம்” என்று கூலியாட்கள் மறுத்துவிட்டார் கள்’ என்று அவர்கள் சொன்னார்கள்.

பல்லாயிரம் தொழிலாளர் – குத்தகைக்காரர்களின் கணக்குப்படி ஐயாயிரம் பேர் – சூகா, குமய சக் இரண்டு கிராமங்களிலும் கூடியிருந்தார்கள். மரங் களை அறுத்துத் தள்ளி, கீழே மோட்டார் ரஸ்தா வுக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பது அவர்கள் வேலை. அந்த ரஸ்தாவை அப்போதுதான் போட்டுக்கொண் டிருந்தார்கள். தொழிலாளர் அத்தனை பேரும் வேலை செய்யும் நேரமெல்லாம் தங்கள் தைரியம் தளராது காத்துக்கொள்வதற்காகத் தங்களால் முடிந்தமட்டும்



பலத்த குரலில் கூச்சல் போட்டுக்கொண்டே யிருந் தார்கள். கோடரி வெட்டும் சப்தம், ரம்பம் அறுக்கும் சந்தடி, செங்குத்தான குன்றுகளிலிருந்து ‘தொபீர்’ என்று மரங்கள் விழும் ஒலி, பாறைகளைப் பிளக்கும் சம்மட்டி அடிகளின் ஓசை இவை அனைத்தோடும் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர் போடும் கூச்ச லும் கூடிக்கொண்டால், அதைச் சொல்லத் தரமில்லை; நீங்கள் கற்பனைதான் செய்துகொள்ள வேண்டும். எப்போதும் பரபரப்போடு இருந்த இந்த மக்க ளிடையே திகிலூட்டும் செய்திகள் அடிக்கடி பரவின. இது இயற்கை. அடுத்த சில தினங்களில் யார் யாரையோ புலி அடித்துக் கொன்று விட்டதாகக் கிளம்பிய வதந்திகளையெல்லாம் ஆராய்ந்து ஆராய்ந்து என் நேரம் பெரிதும் வீணாயிற்று. புலி யிடம் ஏற்பட்ட பயம், லாத்யாப் பள்ளத்தாக்கோடு நின்றுவிட வில்லை; கீழே சர்தா வரைக்கும் அங் கிருந்து கால்துங்கா தொடங்கி மலையருவி பாயும் பள்ளத்தாக்கு வரைக்கும், சுமார் ஐம்பது சதுரமைல் பிரதேசமெங்கும் பரவிவிட்டது. அங்கே இன்னும் ஒரு பத்தாயிரம் தொழிலாளர்கள் வேலை செய்து கொண் டிருந்தார்கள்.

ஆயிரமாயிரக் கணக்கான தொழிலாளர்கள், அக் கம்பக்கத்துக் கிராமங்களின் மக்கள், தொழிலாள ருக்கு உணவு கொண்டுவரும் நூற்றுக் கணக்கான ஆட்கள், குன்றுகளில் விளைந்த ஆரஞ்சுப்பழம் (இவை பன்னிரண்டணாவுக்கு நூறு வாங்கலாம்) அக்ரோட் டுப்பழம் மிளகாய் இவற்றைத் தூக்கிக்கொண்டு பள் ளத்தாக்கைக் கடந்து தணக்பூர்ச் சந்தைக்குச் செல் லும் ஜனங்கள் இத்தனை பேரையும் ஒரே ஒரு விலங்கு கதிகலங்கச் செய்துகொண் டிருந்தது என்றால், நம்பத்

தகாத சங்கதியாய்த் தோன்றும். இதேமாதிரி மத்திய ஆப்பிரிக்காவில் ஸாவோ என்ற இடத்தில் ஆட் கொல்லி விலங்குகள் புரிந்த சரித்திரப் பிரசித்தமான அட்டூழியத்தைப் பற்றிக் கேட்டிராவிட்டால், நானே இதை நம்பமுடியாமல் பிரமித்துப்போ யிருப்பேன். அங்கே இரண்டு சிங்கங்கள் எப்போதும் இரவிலே தான் வந்து தாக்குமாம். உகாண்டா ரெயில் பாதை யில் பல மாத காலம் ஒரு வேலேயும் நடக்காமல் அவை தடுத்து விட்டனவாம்.

அது கிடக்கட்டும்; என் கதையைச் சொல்லு கிறேன். இருபத்தைந்தாந் தேதி காலேச் சாப்பாடு முடிந்ததும், இரண்டாவது எருமையை ஓட்டிக் கொண்டு தக் கிராமத்துக்குச் செல்லப் புறப்பட்டேன். வயல் வெளியை விட்டு அகன்றதும், குன்றின் அடி வாரத்திலே அரை மைல் தூரம் பாதை செல்கிறது. அங்கே இரண்டாகப் பிரிகிறது. ஒரு கிளே நேரே மலேமுகட்டில் ஏறித் தக் கிராமத்துக்குப் போகிறது. மறு கிளே குன்றின் அடிவாரத்திலே இன்னும் ஓர் அரை மைல் சென்று வளேந்து வளேந்து குமய சக் வழியாகக் காட்கின்றிக்குப் போய்ச் சேருகிறது.

பாதை பிரியும் இடத்தில் புலியின் சுவடுகளேக் கண்டேன். தக் கிராமத்துக்குத் திரும்பிப் போகிற வரைக்கும் அந்தச் சுவடுகளேப் பார்த்துக் கொண்டு சென்றேன். முந்திய நாள் மாலேயில் புலி என்னேப் பின் தொடர்ந்து வந்திருப்பதே, எருமையை அது கொல்லவில்லே என்பதற்கு ருசுவாகும். இது எனக்கு ஏமாற்றமாய்த்தான் இருந்தது; என்ருலும், அசா தாரண நிகழ்ச்சி அல்ல. ஏனென்ருல், கட்டிப்போட்ட ஒரு பிராணியிடம் புலிகள் பல நாள் இரவு தொடர்ந்து வந்து விட்டுப்போய், கடைசியாக ஒரு நாள் கொன்று



விடுவ துண்டு. பசி இல்லாவிட்டால் எதையும் புலிகள் கொல்வதில்லே; இதுதான் காரணம்.

மாமரத்தடியில் ஏராளமாய்ப் பசும்புல் வளர்ந் திருந்தது. இரண்டாவது எருமையை அங்கே கட்டி னேன். பிறகு வீடுகளே விட்டு விலகிச் சுற்றிச் சென்று பார்த்தபோது, முதல் எருமை வயிருரத் தீனி தின்று விட்டுத் தூங்கிக்கொண் டிருந்தது. இரவு முழுவதும் அதற்குத் தூக்கமில்லே போல் இருக்கிறது. கிராமம் உள்ள திசையில் இருந்து புலி வந்து, எருமைக்குச் சில அடி தூரம் வரைக்கும் நெருங்கி யிருக்கிறது. பிறகு, அது வந்த வழியே திரும்பிப்போ யிருக்கிறது. இதை அதன் அடிச்சுவடுகள் காட்டின. எருமையை அவிழ்த்துக் கீழே யிருந்த ஊற்றுக்கு ஓட்டிச் சென்றேன். அங்கே ஒன்றிரண்டு மணி நேரம் மேய விட்டேன். பிறகு, திருப்பி இழுத்துப்போய், முந்திய இரவு கட்டியிருந்த அதே இடத்திலேயே மீண்டும் கட்டினேன்.

மாமரத்துக்கு ஐம்பது கஜ தூரத்தில் இரண்டாவது எருமையைக் கட்டினேன். ஆளேப் புலி கொன்றதை ஆராய இபட்ஸன் தம்பதிகளும் நானும் போன அன்று, அழுத பெண்ணும் கிராம மக்களும் எங்களேச் சந்தித்தது இந்த இடத்தில்தான். இங்கே பாதையைச் சில அடி ஆழம் உள்ள ஒரு மலே இடுக்குக் குறுக் கிடுகிறது. அதன் ஒரு பக்கத்தில் ஒரு மரத்தின் காய்ந்த அடிக்கட்டை ஒன்று நின்றது; மறு பக்கத் தில் பரண் அமைக்க ஏற்ற ஒரு வாதுமை மரம் இருந்தது. அடிக்கட்டையில் இரண்டாவது எருமை யைக் கட்டிவிட்டு, அதற்குக் கீழே பல நாளேக்கு வரக் கூடிய வைக்கோலேப் படுக்கையாகப் பரப்பி வைத் தேன். தக் கிராமத்தில் இனிச் செய்யவேண்டிய

வேலை ஒன்றும் இல்லை. எனவே, முகாமுக்குத் திரும்பினேன். மூன்ருவது எருமையை ஓட்டிக் கொண்டு லாத்யா நதியைக் கடந்தேன். ஸெம் கிரா மத்துக்குப் பின்னே எங்கள் எருமைகளில் ஒன்றை ஏப்ரல் மாதத்தில் புலி கொன்ற இடத்தில் அதைக் கட்டினேன்.

தணக்புர்த் தாசில்தாரை நான் வேண்டிக்கொண்ட தன் பேரில், தம்மால் முடிந்தமட்டும் மிகக் கொழுத் தவையாகப் பார்த்து மூன்று இளம் எருமைக் கடாக் களை வாங்கி, எனக்கு அவற்றை அவர் அனுப்பிஞர். புலி அடிக்கடி வந்துபோய்க்கொண் டிருக்கும் இடங் களில் அந்த மூன்றையும் இப்போது கட்டிப்போட் டாயிற்று. இருபத்தாருந் தேதி காலை அவற்றைப் போய்ப் பார்க்க நான் புறப்படும்போது, 'புலி அவற் றில் ஒன்றைக் கொன்றுபோட் டிருக்கும்; அதற்கு அருகே காத்திருந்தால், புலியைச் சுட எனக்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கும்' என்று பெருத்த நம்பிக்கை யோடேயே கிளம்பினேன். லாத்யா நதிக்கு அக்கரை யில் கட்டிக்கிடந்த எருமையை முதலில் போய்ப் பார்த்தேன். அப்புறம் மற்ற இரண்டையும் பார்த் தேன். மூன்றில் எதையும் புலி தொடவே யில்லை. மீண்டும் முந்திய நாள் காலையில் போலவே, புலியின் அடிச்சுவடுகளைத் தக் கிராமத்துக்குச் செல்லும் திசையில் கண்டேன். ஆனல், இந்தத் தடவை இரு வகை அடிச்சுவடுகள் இருந்தன. ஒன்று, வந்த அடிச் சுவடு; மற்றது, போன அடிச்சுவடு. வந்த போதும் சரி, போனபோதும் சரி, பாதையை விட்டு விலகாமலே புலி நடந்திருக்கிறது; மாமரத்துக்கு ஐம்பதடி எட்டி அடிக்கட்டையில் கட்டிய எருமைக்குச் சில அடி தூரத் துக்குள் நெருங்கி வந்துவிட்டுச் சென்றிருக்கிறது.



நான் சூகா கிராமத்துக்குத் திரும்பியதும், தக் கிராம மக்கள் சிலரை அழைத்துக் கொண்டு, அதன் பெரியதனக்காரர் என் கூடாரத்துக்கு வந்தார். 'எங்கள் உணவுப் பண்டங்கள் தீர்ந்து விட்டன. எங் கள் கிராமத்துக்குப் போய் மீண்டும் கொஞ்சம் திரட்டி வர வேண்டும். அதற்குத் தாங்களும் எங்களுக்குத் துணை வர வேண்டும்' என்று அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். எனவே, உச்சி வேளையில் தக் கிரா மத்துக்குப் புறப்பட்டேன். என்னேடு பெரியதனக் காரரும் கிராம மக்களும் வந்தார்கள். எனக்குச் சாப்பாடும் பரண் அமைக்கக் கயிறுகளும் எடுத்துக் கொண்டு என்னுடைய நாலு ஆட்களும் கூட வந்தார் கள். தக் கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்ததும், நான் ஓரிடத்தில் அமர்ந்து காவல் புரிந்தேன். கிராம மக்கள் அவசரம் அவசரமாகத் தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களைத் திரட்டிக் கொண்டார்கள்.

இரண்டு எருமைகளையும் அவிழ்த்துக் கொஞ்சம் மேய விட்டுத் தண்ணீர் காட்டினேன். பிறகு, இரண்டா வது எருமையைப் பழைய இடத்திலேயே கொண்டு போய்க் கட்டினேன். முதல் எருமையை மட்டும் குன்றிலே கீழ் நோக்கி அரை மைல் தூரம் இழுத்துச் சென்று, பாதைக்கு அருகே இருந்த ஒரு மரக்கன்றில் கட்டினேன். பிறகு, கிராம மக்களைச் சூகாவுக்குக் கொண்டு போய் விட்டு விட்டு, குன்றுக்குத் திரும்பி னேன். என் ஆட்கள் பரண் கட்டினுர்கள். குன்றிலே சில கஜ தூரம் உயர ஏறி, நான் ஏதோ சிறிது உணவு உட்கொண்டேன்.

என்னுடைய கொழுத்த எருமைகளிடம் புலிக்கு மோகம் இல்லை என்பது இப்போது முற்றும் தெளிவாகி விட்டது. தக் கிராமத்துக்குச் செல்லும் பாதையிலேயே

புலியின் அடிச்சுவடுகள் சென்றிருந்ததை மூன்று நாளும் கண்டேனுதலால், அந்தப் பாதைக்கு மேல் அமர்ந்து காத்திருந்துதான் புலியைச் சுட முயல வேண்டும் என்று நான் தீர்மானித்துக் கொண்டேன். புலி நெருங்கி வருவதை எனக்கு எச்சரிக்கை செய்வதற்காக ஒரு வெள்ளாட்டின் கழுத்தில் மணி ஒன்றைக் கட்டி, அந்த ஆட்டைப் பாதையில் நிறுத்தி வைத்தேன். மாலை நான்கு மணிக்கு நான் ஒரு மரத்தில் ஏறிக் கொண்டேன். 'நாளைக் காலை எட்டு மணிக்குத் திரும்பி வாருங்கள்' என்று சொல்லி என் ஆட்களை அனுப்பிவிட்டு, காவல் வேலையைத் தொடங்கினேன்.

சூரியன் மலை வாயில் விழுந்ததும், குளிர் காற்று வீச ஆரம்பித்தது. மேல் சட்டை ஒன்றை என் தோள்களில் இழுத்து மாட்டிக் கொள்ள முயன்றபோது, பரணின் ஒரு பக்கத்துக் கயிறு நழுவிப் போயிற்று. இதனுல், பரணில் உட்கார்ந்திருப்பது எனக்கு மிகவும் அசௌகரிய மாகிவிட்டது. ஒரு மணி நேரத்துக்கெல்லாம் பெருங் காற்று ஒன்று வீசிச் சிறிது நேரம் மழை பெய்தது. நெடு நேரம் அது பெய்யவில்லை என்றுலும், என் உடைகள் முற்றும் நனைந்து உடம்பிலே ஈரம் ஊறியது. இதனுல் வேறே அசௌகரியம் ஏற்பட்டது. பதினுறு மணி நேரம் மரத்தில் அமர்ந்து காத்திருந்தேன். அவ்வளவு நேரமும் எதுவும் என் கண்ணுக்குத் தென்படவில்லை; எதுவும் என் காதில் கேட்கவில்லை. காலை எட்டு மணிக்கு என் ஆட்கள் வந்து சேர்ந்தார்கள். நான் முகாமுக்குத் திரும்பி வெந்நீரில் ஸ்நானம் செய்து, நல்ல சாப்பாடு சாப்பிட்டேன். பிறகு, என் ஆட்களில் ஆறு பேரை அழைத்துக் கொண்டு, தக் கிராமத்துக்குப் புறப்பட்டேன்.

இரவு பெய்த மழையால் புலியின் பழைய சுவடுகளெல்லாம் அழிந்து விட்டன. நான் அமர்ந்து காத்திருந்த மரத்துக்கு இருநூறு கஜம் மேலே புலியின் புதிய சுவடுகள் பதிந்திருக்கக் கண்டேன். புலி அங்கே தான் காட்டிலிருந்து வெளிப்பட்டு, பாதையில் மேல் பக்கம் ஏறி, தக் கிராமத்தை நோக்கிச் சென்றிருந்தது. மிக எச்சரிக்கையாகப் பதுங்கிப் பதுங்கி, முதல் எருமையை நெருங்கினேன். அது பாதையில் சுகமாய்த் தூங்கிக்கொண் டிருந்ததைக் கண்டேன். புலி அதை விட்டு ஒதுங்கிச் சென்று, சில கஜ தூரத்துக்கு அப்பால் மீண்டும் பாதைக்கு வந்து சேர்ந்து, தொடர்ந்து குன்றின் மேலே ஏறிச் சென்றிருந்தது. மேலும் புலியின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நான் நடந்தேன். இரண்டாவது எருமையைக் கட்டியிருந்த இடத்துக்குச் சமீபமாகப் போனேன். அப்போது இரண்டு இமாலய நீலக் குருவிகள் தரையை விட்டு விர்ரென்று மேலே கிளம்பிக் கீச்சிட்டுக் கொண்டு, குன்றுகளின் கீழ்ப்புறம் நோக்கிப் பறந்து சென்றன.

இந்தப் பறவைகள் இங்கே இருந்தது மூன்று விஷயங்களைக் காட்டியது: (1) எருமை செத்து விட்டது; (2) அதைப் புலி பாதி தின்றிருக்கிறது; தூக்கிச் செல்லவில்லை; (3) புலி அக்கம்பக்கத்தில் மிக அருகே இல்லை.

எருமையைக் கட்டியிருந்த அடிக்கட்டைக்குச் சமீபத்தில் சென்றேன். புலி அதைப் பாதையை விட்டுச் சற்று அப்பால் இழுத்துப் போட்டுப் பாதி தின்றிருந்தது. எருமையைக் கவனித்துப் பார்த்தேன். அதைக் கொன்றது புலி அல்ல என்று கண்டேன். ஏதோ பாம்பு கடித்து அது மாண்டிருக்க வேண்டும். வழியிலே செத்துக்கிடந்த எருமையைக் கண்டதும், புலி அதில் கொஞ்சம் தின்றிருக்கிறது. பிறகு இழுத்துச்

செல்ல முயன்றிருக்கிறது. கயிற்றை அறுக்க அதனல் முடியவில்லை. காய்ந்த சருகையும் சுள்ளிகளையும் போட்டு அதைக் கொஞ்சம் மூடிவைத்துவிட்டு, புலி தன் வழியே நடந்து தக் கிராமத்தை நோக்கிச் சென்றிருக்கிறது.

புலிகள் தாங்களே கொல்லாத பிராணிகளின் பிணங்களைப் பொதுவாகத் தின்பதில்லை. ஆனல் சில சமயம் தின்பதுண்டு. உதாரணமாக, ஒரு சமயம் சிறுத்தை ஒன்றைச் சுட்டு, சுட்ட இடத்திலேயே அதன் உடலை நான் போட்டு வந்தேன். மறந்து போய்க் கைவிட்டு வந்த ஒரு பேனக் கத்தியை எடுத்துவருவதற்காக அடுத்த நாள் காலையில் நான் அங்கே சென்றேன். சிறுத்தையின் பிணத்தை நூறு கஜ தூரத்துக்கு அப்பால் இழுத்துத் தள்ளி, அதில் மூன்றில் இரண்டு பகுதியை ஒரு புலி தின்றிருந்ததைக் கண்டேன்.

முந்திய நாள் இரவு உட்கார்ந்து காத்திருந்த பரணை, நான் சூகாவில் இருந்து மேலே ஏறிவந்த போது கலைத்துவிட்டேன். என் ஆட்களில் இரண்டு பேர் வாதுமை மரத்தில் ஏறி, எனக்கு ஏதோ ஒருவாறு ஆசனம் அமைக்கத் தொடங்கினர்கள். ஏனென்ருல், அது பரண் அமைப்பதற்கு ஏற்ற அளவு பெரிய மரமாக இல்லை. மீதி நாலு ஆட்களும் தேயிலைப் பானத்துக்கு வெந்நீர் கொதிக்க வைப்பதற்காக, இருப்புக் கெண்டியில் தண்ணீர் எடுத்துவர, ஊற்றுக்குச் சென்ருர்கள். மாலை நாலு மணி இருக்கும். சில பிஸ்கோத்துக்களைத் தின்று, தேநீர் குடித்து, லேசாக உணவு செய்துகொண்டேன். அடுத்த நாள் வரைக்கும் தாங்கவேண்டுமே, அதற்காகத்தான். ‘தக் கிராமத்திலேயே ஏதாவது ஒரு வீட்டில் இன்றிரவு நாங்கள்



தங்கியிருக்கிருேம்; அநுமதி கொடுங்கள்’ என்று ஆட்கள் கேட்டார்கள். ‘கூடாது’ என்று மறுத்துவிட்டு, அவர்களை முகாமுக்குத் திருப்பி அனுப்பினேன். இதில் ஓரளவு அபாயம் இருக்கத்தான் இருந்தது. ஆயினும், தக் கிராமத்திலேயே இரவில் அவர்கள் தங்குவதால் ஏற்படக்கூடிய அபாயத்தை எண்ணும்போது, இது ஒன்றும் பிரமாதம் இல்லை.

நிமிர்ந்து செங்குத்தாயிருந்த மரக்கிளைகள் இரண்டுக்கு இடையே ஒரு கயிற்றைப் பல சுற்றுக்கள் சுற்றி என் ஆட்கள் கட்டியிருந்தார்கள். இதுதான் என் ஆசனம். என் கால்களை வைத்துக்கொள்வதற்காக அதற்குக் கீழே சில கயிற்றுப் புரிகளைப் பின்னிவிட்டிருந்தார்கள். நான் அந்த ஆசனத்தில் ஏறிச் சௌகரியமாக உட்கார்ந்து கொண்டதும், கிளைகளை இழுத்து என்னைச் சுற்றி மூடியிருக்கும்படி வைத்து, அப்படியே மெல்லிய கயிறு ஒன்ருல் கட்டிவிட்டேன். புலியைப் பார்த்துச் சுடுவதற்கு வசதியாகச் சிறு துவாரம் ஒன்று மட்டும் விட்டு வைத்தேன். நான் சரியாக ஒளிந்திருக்கிறேன் என்று சீக்கிரமே ருசுவாயிற்று. என் ஆட்கள் சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம் அந்த இரண்டு நீலக் குருவிகளும் திரும்பி வந்தன. அவற்றைப் பார்த்து மேலும் ஒன்பது குருவிகள் வந்தன. எல்லாக் குருவிகளும் சேர்ந்து கொண்டு, மாலை மயங்கி இருள் சூழ்கிற வரையில் எருமையின் உடலைக் கொத்தித் தின்றுகொண்டிருந்தன. இந்தப் பறவைகள் இப்படித் தங்கியிருந்த போது நான் சற்றுத் தூங்க முடிந்தது. ஏனென்ருல், அருகே புலி வந்தால் இவை எனக்கு எச்சரிக்கை செய்யும். இவை போனதும், இரவு முழுவதும் தூங்காமல் காத்திருக்கும் என் கண்விழிப்புத் தொடங்கியது.

புலியைச் சுடப் போதிய பகல் வெளிச்சம் இன்னமும் இருந்தது. அன்று பூர்ணிமைக்கு மறு நாள். எனக்குப் பின்புறம் நேபாளக் குன்றுகளுக்கு மேலே சந்திரன் எழுந்து குன்றுகளையெல்லாம் பளீர் என்ற ஒளி வெள்ளத்தில் ஆழ்த்தியது. முதல் நாள் இரவு பெய்த மழையால் ஆகாயம் நிர்மலமாய் நிலவியது. துளியும் தூசியோ புகையோ இல்லாமல் துப்புரவாயிருந்தது. சந்திரன் எழுந்த சிறிது நேரத்துக்கெல்லாம் நன்றாய்த் துலங்கிய ஒளியில், நூற்றைம்பது கஜ தூரத்துக்கு அப்பால் உள்ள ஒரு கோதுமை வயலில் குட்டை மான் ஒன்று மேய்ந்துகொண்டிருப்பதை நான் பார்க்க முடிந்தது.

செத்த எருமையின் உடல் எனக்கு நேர் எதிரே சுமார் இருபது கஜ தூரத்தில் கிடந்தது. புலி வரும் என்று நான் எதிர்பார்த்த பாதை, அதைவிட இரண்டு மூன்று கஜம் குறைவான தூரத்தில் இருந்தது. புலி வந்தால், இவ்வளவு கிட்ட இருந்து கொண்டு நான் சுடும்போது குறி தவறவே தவறாது. புலி வராதிருக்கவும் நியாயமில்லை.

சந்திரன் உதித்து இரண்டு மணி நேரம் ஆகியிருக்கும். குட்டை மான் என் மரத்துக்கு ஐம்பது கஜ தூரத்துக்குள் வந்தது. கிராமத்துக்கு மேலே குன்றில் ஒரு காட்டாடு சில நிமிஷ நேரம் கத்திக்கொண்டேயிருந்த சப்தம் கேட்டது. அப்போது திடீரென்று வீரிட்ட அலறல் ஒன்று கிளம்பியது. அதை எப்படிப் பட்ட சப்தம் என்று என்னால் சரியாக வர்ணிக்க முடியவில்லை. 'அர்-அர்-அர்' என்பது போன்ற ஓலம் என்று சொல்லலாம். இழுத்துக் கொண்டே சென்ற குரலில் அந்த ஓலம் மெல்ல மெல்ல மங்கியது. கிராமம் இருந்த திசையிலிருந்து அது வந்தது. எதிர்பாராத



விதமாகத் திடீரென்று அந்த ஓலக் குரல் கேட்டதால், என்னை அறியாமலே நான் துள்ளி எழுந்தேன். மரத்திலிருந்து கீழே இறங்கிக் கிராமத்துக்கு ஓட வேண்டும்போல் தோன்றியது. என் ஆட்களில் ஒருவனைத்தான் ஆட்கொல்லிப் புலி கொல்லுகிறதோ என்று நினைத்தேன். அடுத்தாற்போல் பளிச்சென்று மற்றோர் எண்ணம் என் மனத்தில் எழுந்தது. அவர்கள் என் மரத்தைக் கடந்தபோது அவர்களை ஒருவர் ஒருவராக நான் எண்ணினேன்; 'ஒன்றாகச் சேர்ந்தே செல்லுங்கள்' என்று நான் போட்ட கட்டளைக்குக் கீழ்ப் படிந்து அவர்கள் நடக்கிறார்களா என்று கவனிப்பதற்காக, அவர்களை என் கண்ணுக்கு எட்டிய மட்டும் நான் பார்த்துக்கொண்டேயிருந்தேன். இது எனக்கு ஞாபகம் வந்தது.

மரண வேதனையோடு நிர்க்கதியாய்க் கதறிய ஒரு மனிதனின் ஓலம் அது. மக்களெல்லாம் துறந்தோடியதால் பாழடைந்து கிடக்கும் கிராமத்திலிருந்து இந்த ஓலம் எப்படி வந்தது? இது என் கற்பனையாயிருக்குமோ என்று நினைக்க இடமில்லை. ஏனென்றால், காட்டாடும் இதைக் கேட்டிருக்கிறது; அதன் மேல் சட்டென்று தன் கத்தலை நிறுத்தி விட்டது. தவிர, குட்டை மானும், தன் கன்று மிக நெருங்கிப் பின் தொடர, வயல்களுக்குக் குறுக்கே பாய்ந்தோடியது. இரண்டு நாட்களுக்கு முன் கிராம வாசிகளைப் பந்தோபஸ்தாகக் கிராமத்துக்கு நான் அழைத்துச் சென்ற போது, 'வீட்டுக் கதவுகளை மூடாமலும் தாழிடாமலும், போட்டது போட்டபடி சாமான்களையெல்லாம் இப்படி விட்டுப் போய் விட்டீர்களே! அவ்வளவு நம்பிக்கையா?' என்று கிராமப் பெரியதனக்காரரைக் கேட்டேன். அவர் 'வருஷக் கணக்காய் எங்கள்

கிராமத்தில் மக்கள் வசிக்காது போகட்டுமே; அப்போதும் எங்கள் சாமான்களெல்லாம் மிகவும் பத்திரமாகவே இருக்கும். ஏனென்ருல், நாங்கள் புனகிரியின் குருமார்கள். எங்கள் சொத்தைத் திருட எவனும் கனவிலுங்கூட நினைக்க மாட்டான். தவிர, காவல் தேவையாகவே இருந்தாலும், புலி இங்கே உயிரோடிருக்கும் வரைக்கும் நூற்றுக் கணக்கான மனிதரைக் காட்டிலும் இந்தப் புலியே சிறந்த காவலா யிருக்கும். எங்களை அழைத்து வந்தது போலப் பந்தோபஸ்தாக நீங்கள் அழைத்து வந்தாலொழிய, சுற்றிலும் சூழ்ந்த அடர்த்தியான காட்டுக்குள் புகுந்து இந்தக் கிராமத்துக்கு வர எந்த மனிதனும் துணியமாட்டான்' என்று சொன்ருர்.

வீரிட்ட மனித ஓலம் மீண்டும் கேட்கவில்லை. நான் ஒன்றும் செய்வதற்கில்லை என்று தோன்றியது. எனவே, என் கயிற்ருசனத்தில் மறுபடியும் அமர்ந்தேன். இரவு பத்து மணி இருக்கும். வயல்களின் அடிப்புறத்தில் இளம் கோதுமைப் பயிரை மேய்ந்து கொண் டிருந்த காட்டாடு, கத்திக் கொண்டே எட்டிப் பாய்ந்தோடியது. ஒரு நிமிஷத்துக் கெல்லாம் புலி இரண்டு தடவை உறுமியது. அது இப்போது கிராமத்தை விட்டுக் கிளம்பி வெளியே வந்துகொண் டிருந்தது. எருமையை இன்ஞெரு வேளைத் தீனியாகக் கொள்ள அதற்கு மோக மில்லா திருக்கலாம். என்ருலுங்கூட, இந்தப் பாதை வழியே அது நிச்சயம் வரும் என்று நான் நம்பினேன். ஏனென்ருல், சென்ற சில நாட்களாக நாள் ஒன்றுக்கு இரண்டு தடவை புலி உபயோகித்து வரும் பாதை இதுவே. துப்பாக்கிக் கொக்கியில் விரல் வைத்தபடி, பாதையையே உற்றுப் பார்த்துக் கொண்டு, மணிக் கணக்காய் உட்கார்ந்



திருந்தேன். கடைசியாக, நிலவு சாய்ந்து, போது விடிந்து விட்டது. சூரியோதயமாகி ஒரு மணி நேரத்துக் கெல்லாம் என் ஆட்கள் திரும்பி வந்தார்கள். முன் யோசனையோடு ஒரு கட்டுக் காய்ந்த விறகை அவர்கள் கொண்டுவந் திருந்தார்கள். வியப்பூட்டும் அளவு வெகு விரைவில், சூடான தேநீர் எனக்குத் தயாராகி விட்டது. அதைப் பருகினேன். அப்போது புலி எங்களுக்கு மிக அருகிலே புதரில் பதுங்கியிருந்தாலும் இருக்கலாம்; அல்லது பல மைல் தூரத்துக்கு அப்பால் போயிருந்தாலும் போயிருக்கலாம். ஏனென்ருல் இரவு பத்து மணிக்கு அது உறுமிய பிறகு இது வரைக்கும் காட்டிலே நிச்சப்தமே நிலவியது.

முகாமுக்குத் திரும்பிச் சென்ற போது, என் கூடாரத்துக்கு அருகிலே பல ஆட்கள் உட்கார்ந் திருக்கக் கண்டேன். முந்திய நாள் இரவு என் அதிருஷ்டம் எப்படியிருந்தது என்று விசாரிப்பதற்காகச் சிலர் வந்திருந்தார்கள். நள்ளிரவி லிருந்து போது விடிகிற வரைக்கும் குன்றின் அடி வாரத்திலே புலி உறுமிக் கொண்டே யிருந்தது என்றும், புதிய ரஸ்தாவில் வேலை செய்த தொழிலாளரெல்லாம் வேலைக்குப் போக அஞ்சுகிருர்கள் என்றும் சொல்லுவதற்காக மற்றவர்கள் வந்திருந்தார்கள். ஏற்கனவே என் ஆட்களே புலியைப் பற்றி எனக்குச் சொல்லி விட்டார்கள். சூகாவைச் சுற்றி முகாம் போட்டிருந்த ஆயிரக் கணக்கான ஆட்களோடு தாங்களும் இரவு முழுவதும் பெருந் தீ மூட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்ததாக அவர்கள் தெரிவித்தார்கள்.

கூடாரத்துக்கு அருகே உட்கார்ந் திருந்தவர்களில் தக் கிராமத்துப் பெரியதனக்காரரும் இருந்தார். பன்னிரண்டாந் தேதி ஓர் ஆளைப் புலி கொன்றபோது,

புலிக்கு இரையாகாமல் நல்ல வேளையாக அவர் தப்பித்துக் கொண்டாரே, அந்த நிகழ்ச்சியைப் பற்றி அவரைக் கேட்டேன்.

மற்றுமொரு தடவை மிக விரிவாக அந்த விவரத்தை அவர் சொன்னார். தாம் இஞ்சி வெட்ட வயலுக்கு எப்படித் தம் பேர்த்தியையும் அழைத்துக் கொண்டு போனார், மனைவியின் கூப்பாடு கேட்டதும் குழந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு வீட்டுக்கு எப்படித் திரும்பி ஓடினார், அங்கே மனைவி 'காதைச் செவிடு மாதிரி வைத்துக் கொண்டு உங்கள் உயிருக்கும் குழந்தையின் உயிருக்கும் அபாயம் தேடிக் கொண்டீர்களே' என்று எப்படிக் கோபித்துக் கொண்டாள், சில நிமிஷ நேரத்துக்கெல்லாம் தம் வீட்டுக்கு மேலே உள்ள ஒரு மரத்தில் தழை அறுத்துக்கொண் டிருந்த ஒரு மனிதனைப் புலி எப்படிக் கொன்று விட்டது என்ற வரலாற்றை யெல்லாம் சொன்னார்.

இவ்வளவு கதையும் நான் ஏற்கனவே கேட்டது தான். இப்போது அவரை 'ஆமாம், அந்த ஆளைப் புலி கொல்லும் போது நீங்கள் நேரிலே பார்த்தீர்களா?' என்று ஒரு கேள்வி கேட்டேன். 'இல்லை' என்று அவர் பதிலளித்தார். தாம் நின்ற இடத்தி லிருந்து அந்த மரம் கண்ணுக்குத் தெரியாது என்றும் குறிப்பிட்டார். 'அப்படியானால் அந்த மனிதனைப் புலி கொன்றது என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?' என்று வினவினேன். 'அவன் கத்தியது காதில் விழுந்ததால் தெரிந்துகொண்டேன்' என்றார் அவர். 'ஒரே தட்வைதான் கத்தினானே?' என்று கேட்டதற்கு, 'இல்லை; மூன்று தடவை கத்தினான்' என்று அவர் கூறினார். 'எங்கே, அந்தமாதிரி கொஞ்சம் கத்திக் காட்டுங்கள், பார்க்கலாம்' என்றேன். அவர்



அப்படியே கத்திக் காட்டினார். முந்திய நாள் இரவு நான் கேட்ட அதே ஓலந்தான் இது. ஆனால் குரல் தான் மிகவும் மாறியிருந்தது.

பிறகு, நான் கேட்ட ஓலத்தை அவரிடம் சொல்லி, 'தற்செயலாகக் கிராமத்துக்கு யாராவது வந்திருப்பார்களோ?' என்று கேட்டேன். 'அப்படி வந்திருக்க மாட்டார்கள்' என்று கண்டிப்பாக அவர் சொன்னார். மேலும், 'தக் கிராமத்துக்கு இரண்டே இரண்டு பாதைகள்தான் போய்ச் சேருகின்றன. எந்தக் கிராமங்களின் வழியாக அவை செல்லுகின்றனவோ அந்தக் கிராமங்களில் உள்ள ஒவ்வோர் ஆணும் பெண்ணும் குழந்தையும் உள்பட அத்தனை பேரும் தக் கிராமம் பாழடைந்து கிடப்பதையும் அதன் காரணத்தையும் அறிவார்கள். பட்டப் பகலிலேயே தக் கிராமத்துக்கு அருகே செல்வது அபாயம் என்று இந்த ஜில்லா முழுவதிலும் தெரியும். ஆகவே, முந்திய நாள் இரவு எட்டு மணிக்கு அந்தக் கிராமத்துக்குள் எவரும் வந்திருப்பது சாத்தியம் இல்லை' என்று விளக்கினார்.

'உங்கள் சொல்படி பார்த்தால், அந்தக் கிராமத்துக்குள் யாருமே இருந்திருக்க முடியாது. அப்படியிருக்க அங்கே ஓலக் குரல் எழுந்ததே; அதற்கு ஏதாவது சமாதானம் நீங்கள் சொல்ல முடியுமா?' என்று கேட்டேன். 'எனக்கு ஒன்றும் சொல்லத்தெரியவில்லை' என்று அவர் பதிலளித்தார். அவருக்கே புரியாத போது, எனக்கு என்ன தெரியும்? எனக்கும் ஒரு சமாதானமும் தோன்றவில்லை. ஆகவே, காட்டாடோ, குட்டை மானோ, நானோ முழுக்க முழுக்க உண்மையான அந்த ஓலத்தை, மரண வேதனையோடு கூடிய அந்த மனித ஓலத்தைக் கேட்கவேயில்லை என்று தான் பாவித்துக் கொள்ள வேண்டியதாயிற்று.

# 4. வீண் முயற்சி

பெரியதனக்காரரும் மற்றவர்களும் போன பிறகு, என் காலைச் சாப்பாட்டை உட்கொண்டேன். அப்போது என் வேலையாள், முந்திய நாள் இரவு ஸெம் கிராமத்துப் பெரியதனக்காரர் என் முகாமுக்கு வந்தார் என்றும், ஒரு சேதி சொல்லிவிட்டுப் போனார் என்றும் அறிவித்தான். அவருடைய தாயைக் குடிசைக்கு அருகே புலி கொன்ற இடத்தில் அவருடைய மனைவி புல்லறுத்துக் கொண்டிருந்தாளாம். அப்போது ரத்தச் சுவடு ஒன்றைக் கண்டாளாம். எனக்கு அதைக் காட்டுவதற்காக, என் வருகையை எதிர்பார்த்துக்கொண்டு லாத்யா நதிக்கரையில் ஆழமில்லாத துறையில் இன்று காலையில் தாம் காத்துக்கொண்டிருப்பதாக அவர் சொல்லிவிட்டுப் போனாராம். எனவே, சாப்பிட்டு முடிந்ததும், அந்தச் சுவட்டை ஆராய்வதற்காக நான் புறப்பட்டேன்.

ஆழமில்லாத துறையில் இறங்கி ஆற்றை நான் கடந்துகொண்டிருக்கும்போது, நாலு ஆட்கள் என்னை நோக்கி விரைந்து வருவதைக் கண்டேன். மறு கரையில் காய்ந்த தரையில் நான் அடியெடுத்து வைத்தவுடனே, அவர்கள் என்னிடம் ஒரு செய்தி சொன்னார்கள். ஸெம் கிராமத்துக்கு மேலே உள்ள குன்றின் வழியாக அவர்கள் இறங்கிவரும்போது, பள்ளத்தாக்குக்குக் குறுக்கே புலியின் உறுமல் அவர்களுக்குக் கேட்டிருக்கிறது. ஸெம், சூகா இரண்டு கிராமங்களுக்கும் இடையிலே உள்ள குன்றிலிருந்து அந்த உறுமல் வந்திருக்கிறது. ஆற்று நீரின் சல



சலப்பில் அந்த உறுமல் என் காதில் விழவில்லை. நான் ஸெம் கிராமத்துக்குச் சென்றுகொண்டிருப்பதாகவும் விரைவில் சூகா கிராமத்துக்குத் திரும்புவதாகவும் அவர்களிடம் சொல்லிவிட்டு மேலே நடந்தேன்.

பெரியதனக்காரர் தம் வீட்டுக்கு அருகிலே எனக்காகக் காத்துக்கொண்டிருந்தார். தான் முந்தியநாள் ரத்தச் சுவட்டைக் கண்ட இடத்துக்கு அவருடைய மனைவி என்னை அழைத்துப் போனாள். சுவடு கொஞ்ச தூரம் வரைக்கும் ஒரு வயல் ஓரமாகச் சென்றது. பிறகு பெரிய பாறைகள் சிலவற்றின் குறுக்கே போயிற்று. அந்தப் பாறைகளுள் ஒன்றில் ஒரு காட்டாட்டின் சில ரோமங்கள் உதிர்ந்திருந்தன. இன்னும் சிறிது தூரத்தில் பெரிய ஆண் சிறுத்தை ஒன்றின் காலடிச் சுவடுகளைக் கண்டேன். அவற்றை நான் கவனித்துக்கொண்டிருக்கையில் ஒரு புலி உறுமுவது கேட்டது. சந்தடி செய்யாமல் தரையில் உட்கார்ந்திருக்கும்படி என் துணைவர்களுக்குச் சொன்னேன். புலியின் குரல் எங்கிருந்து வருகிறது என்று அறிவதற்காக, நான் சற்றுக் காதுகொடுத்துக் கேட்டேன். புலியின் உறுமல் மீண்டும் கேட்டது. இதற்கப்புறம் இரண்டு நிமிஷத்துக்கு ஒரு தடவை திரும்பத் திரும்ப அது கேட்டுக்கொண்டேயிருந்தது.

ஆட்கொல்லிப் பெண் புலியின் குரல் தான் அது. தக் கிராமத்துக்குக் கீழே ஐந்நூறு கஜ தூரத்தில் உள்ள மலையிடுக்கில் புலி இருப்பதாக நிதானித்துக் கொண்டேன். அந்த மலையிடுக்கு மாமரத்தடி ஊற்றில் ஆரம்பித்து, பாதைக்குச் சற்று அப்பால் அதோடு இணையாகவே கொஞ்ச தூரம் வரைக்கும் செல்கிறது. அப்புறம், குமய சக் பாதை சந்திக்கும் இடத்தில் பாதைக்குக் குறுக்கே ஓடுகிறது. இன்னும் கொஞ்சம்

சௌகரியமான மற்ருெரு சமயத்தில் தான் சிறுத்தை யைச் சுடவேண்டும் என்று பெரியதனக்காரரிடம் சொல்லிவிட்டு, எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவாக முகாமுக்குச் செல்லப் புறப்பட்டேன். சூகாவுக்குப் போக என் துணைக்காக ஆற்றங்கரைத் துறையில் காத்துக்கொண் டிருந்த நாலு ஆட்களையும் வழியிலே கண்டு அழைத்துக்கொண்டு நடந்தேன்.

முகாமுக்குப் போய்ச் சேர்ந்தபோது, என் கூடாரத்தைச் சுற்றிப் பல ஆட்களின் கூட்டம் ஒன்று கூடியிருந்தது. அவர்களில் பெரும்பாலோரும் டில்லியிலிருந்து வந்த வாட்காரரர்களே. ஆயினும், லாத்யா பள்ளத்தாக்கில் ரஸ்தா அமைக்கக் குத்தகை எடுத்திருந்த முதலாளியின் சிறு குத்தகைக்காரர்கள், காரியஸ்தர்கள், குமாஸ்தாக்கள் நேரக் கணக்கு வைத்துக் கொள்கிறவர்கள், கூலியாட்கள் ஆகியவர்களுந்தான் இருந்தார்கள். சூகாவில் நான் இன்னமும் தங்கியிருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதற்காகவே இந்த ஆட்கள் வந்திருந்தார்கள். மரங்களைச் சுமந்தும் ரஸ்தா அமைத்தும் வேலை செய்து வந்த மலைவாசிகளில் பல பேர் அன்று காலையில் தங்கள் வீடுகளுக்குப் போய்விட்டதாக இவர்கள் எனக்கு அறிவித்தார்கள். மேலும், டிசம்பர் முதல் தேதியன்று சூகாவை விட்டு நான் புறப்பட்டுப் போய்விடப்போவதாகத் தாங்கள் கேள்விப்பட்டதாகவும், அப்படி நான் போனுல் வேலையாட்கள் அத்தனை பேரும் தாங்களும் அன்றே இந்த இடத்தை விட்டுச் சென்றுவிடப் போவதாகவும் தெரிவித்தார்கள். ஏனென்றால், ஏற்கனவே, தாங்கள் அடைந்திருக்கும் கிலியில் ஊணுறக்கங்கூட இல்லாமல் போய்விட்டதாம்; நான் சென்றுவிட்டால், அப்புறம் இங்கே தங்கியிருக்க



எவரும் துணிய மாட்டார்களாம். அன்று நவம்பர் 29-ஆம் தேதி; காலை நேரம். இன்னும் இரண்டு பகல் இரண்டு இரவு அவகாசம் எனக்கு இருக்கிறதென்றும், அதற்குள் எவ்வளவோ நிகழ்ந்துவிடலாம் என்றும், எது எப்படியானுலும் முதல் தேதி காலைக்குப் பிறகு என்ஞல் இங்கே தங்கமுடியாது என்றும் இந்த ஆட்களுக்கு நான் சொன்னேன்.

ஆட்கொல்லிப் புலியின் உறுமல் இப்போது நின்றுவிட்டது. நான் உண்பதற்காக வேலைக்காரன் ஏதோ கொஞ்சம் உணவு கட்டிக்கொடுத்தான். அதை எடுத்துக்கொண்டு தக் கிராமத்துக்குப் புறப்பட்டேன். புலி மறுபடியும் குரல் கொடுக்குமானுல், அது இருக்கும் இடத்தை நிதானித்து, பதுங்கிப் பதுங்கி அதைப் பின் தொடரலாம் என்பது என் உத்தேசம். பாதையில் புலியின் சுவடுகளைக் கண்டுபிடித்தேன்; மலையிடுக்கில் அது புகுந்த இடத்தைப் பார்த்தேன். தக் கிராமத்துக்குப் போய்ச் சேர்கிறவரைக்கும் பல முறை நின்று நின்று உற்றுக் கேட்டும், புலியின் குரல் மறுபடியும் கேட்கவே யில்லை. சூரியன் மறையச் சிறிது நேரம் இருக்கும். நான் கொண்டுவந் திருந்த பிஸ்கோத்துகளைத் தின்று, சீசாவி லிருந்த தேநீரைக் குடித்தேன். பின்பு, வாதுமை மரத்தின் மீது ஏறினேன். ஏதோ சில கயிற்றுப் புரிகளைச் சுற்றி எனக்கு ஒரு பரண்போல என் ஆட்கள் கட்டியிருந்த ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டேன். இப்போது நீலக் குருவிகள் இல்லை. ஆகவே, முந்திய நாள் மாலையில் ஒன்றிரண்டு மணி நேரம் தூங்கியதுபோல் இப்போது நான் தூங்கமுடியவில்லை.

தான் கொன்ற இரைக்கு, முதல் நாள் இரவு ஒரு புலி திரும்பிவராததால், அந்த இரையை அது கை

விட்டுவிட்டது என்று அர்த்தம் இல்லை. மாமிசம் என்றே சொல்ல முடியாதபடி தன் இரை உருக் குலைந்த பத்தாம் நாள் இரவு கூடப் புலி அதைத் தின் னத் திரும்பிவந்த பல சமயங்களை எனக்குத் தெரியும். ஆயினும், இந்தத் தடவை புலி தானே கொன்ற ஓர் இரைக்கு அருகே உட்கார்ந்து நான் காத்திருக்க வில்லை. எப்படியோ செத்துக்கிடந்த ஒரு மிருகத் தின் உடலைக் கண்டு, அதில் கொஞ்சம் தின்றுவிட் டுப் புலி போயிருக்கிறது; அந்த உடலுக்கு அருகே தான் உட்கார்ந்து காத்திருக்கிறேன். இது மட்டும் ஓர் ஆட்கொல்லிப் புலியாக இராவிட்டால், இரண்டா வது நாள் இரவு இது திரும்பி வருவது சாத்தியம் என்று நான் நினைத்திருக்கமாட்டேன். செத்த எரு மையைச் சட்டை செய்து முதல் நாள் இரவு திரும்பி வராத சாதாரணப் புலிக்காக ஒரு நாள் இரவு முழுவ தும் ஒரு மரத்தின்மீது உட்கார்ந்து காத்திருந்து பய னில்லை. புலியைச் சுடலாம் என்று அவ்வளவாக நம் பிக்கை இல்லாமலே, மாலை முதல் மறு நாள் காலை வரைக்கும் மரத்தின்மீது நான் உட்கார்ந்திருந்தேன். முதல் நாள் இரவு உட்கார்ந்திருந்த அவ்வளவு நேரம் இன்று உட்கார்ந் திருக்கவில்லை. என்றாலும், எனக்கு இன்று அதிகச் சிரமமா யிருந்தது. கயிறுகள் என் உடம்பைச் சிராய்த்தன. சந்திரன் உதித்தவுடன் தொடங்கிய குளிர் காற்று இரவு முழுவதும் வீசியதால், எனக்குக் குளிர்ந்து நடுக்கியது. இந்த இரண்டாவது நாள் இரவில் காட்டு ஒலிகளோ வேறு ஒலிகளோ என் காதில் விழவில்லை; குட்டை மானும் அதன் குட்டி யும் வயல்களில் மேய வரவில்லை. நிலவு மங்கி வெயில் புறப்பட்ட சமயத்தில், சிறிது தூரத்தில் ஒரு புலி உறுமியதாகத் தோன்றியது. ஆனால், அதன் ஒலியைப்



பற்றியோ, அது இருந்த திசையைப் பற்றியோ எனக்கு நிச்சயப்பட வில்லை.

என் முகாமுக்குத் திரும்பியபோது, என் வேலையாள் நான் குடிக்கத் தேநீரும் குளிக்க வெந்நீரும் போட்டுத் தயாராய் வைத்திருந்தான். ஆனால், நாற்பதே ராத் தல் நிறையுள்ள என் கூடாரத்துக்குள் இருந்தபடி குளிக்கப் போதிய இடமில்லை. முந்திய நாள் தங்க ளுக்கு ஏற்பட்ட அநுபவங்களைச் சொல்வதற்காகக் கூச்சலிட்டுக்கொண்டு ஜனக் கும்பல் ஒன்று வாசலில் நின்றுகொண் டிருந்தது. அந்தக் கும்பலைப் போகச் செய்த பிறகே நான் குளிக்க முடிந்தது. சந்திரன் உதித்த சிறிது நேரத்துக்கெல்லாம் சூகாவுக்கு மிக அருகே புலி உறுமத் தொடங்கியதாம். இரண்டொரு மணி நேரம் சற்று நேரத்துக் கொரு தடவை அது உறுமி யிருக்கிறது. பிறகு, குமய சக் தொழிலாளர் முகாம்கள் இருந்த திசையில் போயிருக்கிறது. புலி வரும் செய்தியை அங்கிருந்த ஆட்கள் கேள்விப் பட்டதும், அதை மிரட்டி ஓட்டி விடுவதற்காகப் பெருங் கூச்சல் போட்டிருக்கிறார்கள். அந்தக் கூச் சலைக் கேட்டுப் புலி மிரளவில்லை; அதற்குக் கோபந் தான் மூண்டுவிட்டது. முகாம்களுக்கு நேர் எதிரே அது வந்து நின்றுகொண்டு, ஆட்கள் நடுநடுங்கி வாய் ஓயும் வரையில் அட்டகாசம் செய்திருக்கிறது. ஆட்களை வாயடக்கிய பிறகு, 'எங்கே, யார் வேண்டு மானாலும் என்னைப் பார்த்துக் கூச்சல்போடட்டும்; பார்க்கலாம்' என்பது போல, சூகாவுக்கும் தொழி லாளர் முகாம்களுக்கும் மத்தியிலே இரவைக் கழித் திருக்கிறது. காலையில் தக் கிராமத்தை நோக்கிச் சென்றிருக்கிறது. இந்தத் தகவலை யெல்லாம் எனக்குச் சொன்ன அந்த ஆட்கள், நான் புலியைச்

சந்திக்காததுபற்றி வியப்பும் ஏமாற்றமும் அடைந் தார்கள்.

என் புலி வேட்டையின் இறுதி நாள் இதுவே. ஓய்வும் தூக்கமும் எனக்கு மிகவும் தேவையாக இருந் தன. ஆயினும் புலியைச் சந்திக்கக் கடைசி முயற்சி புரிவதில் இன்று மீதி நேரத்தையெல்லாம் செலவழித்து விடுவதென்று தீர்மானித்துக் கொண்டேன்.

சூகா, ஸெம் இந்த இரண்டு கிராமத்து மக்கள் மட்டும் அல்ல; சுற்றுப்புறக் கிராம மக்கள் அனை வரும் – முக்கியமாக டல்லா டெஸ் மக்கள் – எனக்கு ஒரு யோசனை சொன்னார்கள். இந்த டல்லா டெஸ் பிரதேசத்தில் ஏற்கனவே சில வருஷங்களுக்கு முன் மூன்று ஆட்கொல்லிப் புலிகளை நான் சுட்டிருக் கிறேன். உயிரோடு ஒரு வெள்ளாட்டைக் கொண்டு போய் நான் கட்டிப்பார்க்கலாம் என்பது தான் அவர் கள் சொன்ன யோசனை. ஏனென்றால், 'மலைப் புலிக ளெல்லாம் வெள்ளாடு தின்கின்றன. நீங்கள் எருமை களைக் கட்டிப் பார்ப்பது பலிக்கவில்லை. வெள்ளாட்டை ஏன் கட்டிப் பார்க்கக் கூடாது?' என்று அவர்கள் கேட்டார்கள். புலியை அப்படிச் சுட்டுவிடலாம் என்று எனக்கு நம்பிக்கை இல்லை. ஆயினும் அவர் களைத் திருப்தி செய்வதற்காக, இந்தக் கடைசி நாளில் வெள்ளாட்டைக் கட்டி அதன் பக்கத்திலே இருந்து காவல் புரிவதாக நான் ஒப்புக்கொண்டேன். ஏற் கனவே வாங்கிய இரண்டு வெள்ளாடுகளும் என்னிடம் இருந்தன.

புலி எங்கெல்லாம் சுற்றித்திரிந்தாலும் இரவிலே அது வந்து தங்கும் தலைமை இடம் தக் கிராமந்தான் என்று எனக்கு நிச்சயப்பட்டு விட்டது. எனவே, பகல் உச்சிப்போதிலே, இரண்டு வெள்ளாடுகளையும் இழுத்



துக்கொண்டு, என் ஆட்களில் நாலு பேர் துணைவர நான் தக் கிராமத்துக்குப் புறப்பட்டேன்.

சூகா கிராமத்திலிருந்து தக் கிராமத்துக்குச் செல் லும் பாதை, நான் ஏற்கனவே சொல்லியபடி, மிகவும் செங்குத்தான ஒரு மலை முகட்டு வழியே செல்கிறது. இந்தப் பக்கத்திலே கால் மைல் தூரத்தில் மலை முகட்டை விட்டு நீங்கி, ஓரளவு தட்டையான நிலத் திட்டு ஒன்றை அது குறுக்கிடுகிறது. அந்த நிலத் திட்டு, மாமரம் வரைக்கும் நீண்டிருக்கிறது. இந்தத் தட்டை நிலத்தில் உள்ள பாதைப் பகுதி முழுவதையும் அடர்த்தியான புதர்கள் மூடியிருக்கின்றன. கிழக்கு முகமாக ஓடும் குறுகிய இரண்டு மலையிடுக்குகள் பாதையை இங்கே குறுக்கிட்டு, பிரதான மலை யிடுக் கிலே போய்ச் சேர்கின்றன. முந்திய இரண்டு நாட் களும் நான் உட்கார்ந்திருந்த மரத்துக்கு நூறு கஜ தூரத்தில், இந்தச் சிறு மலையிடுக்குகள் இரண்டுக்கும் இடையில் பிரம்மாண்டமான வாதுமை மரம் ஒன்று நிற்கிறது. நான் முகாமை விட்டுக் கிளம்பியபோது, என் காவலுக்கு இந்த மரந்தான் சரி என்று எண்ணி யிருந்தேன். பாதை இந்த மரத்துக்கு நேர் கீழே கடக் கிறது. இதில் பாதி உயரத்தில் ஏறி அமர்ந்து கொண் டால், 'இரண்டு வெள்ளாடுகளையும் பார்த்துக் கொள்ள லாம்; அதோடு எருமையின் உடலையும் பார்த்துக் கொள்ளலாம்' என்று நினைத்தேன். வெள்ளாடுகளில் ஒன்றைப் பிரதான மலையிடுக்கின் ஓரத்திலும் மற் றதை வலது பக்கக் குன்றின் அடிவாரத்திலும் கட்டி வைக்க உத்தேசித்திருந்தேன். இந்த மூன்று இடங் களும் வாதுமை மரத்துக்குச் சிறிது எட்டித்தான் இருந்தன. ஆகவே, மிகவும் கணக்காகக் குறிபார்க்கக் கூடிய ஒரு சிறு துப்பாக்கியை எடுத்துக் கொண்

டேன். அதோடுகூட, ஏதாவது அவசர நெருக்கடி ஏற்பட்டால் உதவ மற்றொரு பெரிய துப்பாக்கியையும் எடுத்துக் கொண்டேன்.

சூகா கிராமத்திலிருந்து குன்றின்மீது ஏறுவது இந்தக் கடைசி நாளில் எனக்கு மிகவும் சிரமமா யிருந்தது. பாதை மலை முகட்டை விட்டுத் தட்டையான நிலத்திட்டில் புகப் பிரியும் இடத்துக்கு நான் வந்து சேர்ந்தேனோ இல்லையோ, அந்த நிமிஷத்தில் எனக்கு இடது பக்கம் சுமார் நூற்றைம்பது கஜ தூரத்தில் புலி உறுமியது. இங்கே தரையில் செடிகள் முளைத்து மூடிக் கிடக்கின்றன; கொடிகள் சுற்றிய மரங்கள் நிற்கின்றன; குறுகலும் ஆழமுமான மலையிடுக்குகள் தரையைத் துண்டாடி யிருக்கின்றன; பெரிய பெரிய பாறைகள் சிதறிக் கிடக்கின்றன. ஆகவே, பதுங்கிப் பதுங்கிப் புலியைப் பின்தொடர இந்த இடம் சற்றும் ஏற்ற தல்ல. ஆயினும், நான் என்ன செய்வது என்பதைத் தீர்மானிக்கு முன், புலி படுத்திருக்கிறதா அல்லவா என்று கண்டுபிடிப்பது அவசியமாயிற்று. அநேகமாய் அது படுத்துக்கொண் டிருக்கலாம். ஏனென்றால் அப்போது பிற்பகல் மணி ஒன்று. படுத்திராமல் அது நடமாடிக்கொண் டிருக்குமானால், எந்தத் திசையில் செல்கிறது என்று கண்டுபிடிக்க வேண்டும். என் ஆட்களைக் கீழே உட்காரச் சொல்லி விட்டு, நான் உற்றுக் கேட்டேன். இப்போது மீண்டும் புலியின் உறுமல் வந்தது. புலி ஐம்பது கஜம் அப்பால் சென்றுவிட்டதாக அதிலிருந்து தெரிந்தது. தக் கிராமத்தை நோக்கிப் பிரதான மலையிடுக்கில் அது சென்றுகொண் டிருந்ததாகத் தோன்றியது.

இது மிகவும் நம்பிக்கையூட்டுவதா யிருந்தது. ஏனென்றால், நான் உட்கார்ந்திருக்கக் குறித்திருந்த



மரம், அந்த மலையிடுக்கில் இருந்து ஐம்பதே கஜ தூரத்தில் நின்றது. துளியும் சந்தடி செய்யாமல் என்னைப் பின்பற்றி வரும்படி என் ஆட்களுக்குச் சொன்னேன். பிறகு பாதையிலே வேகமாக நாங்கள் நடந்தோம். பாதி தூரத்தை நாங்கள் கடந்திருப்போம்; மரத்தடிக்குப் போய்ச் சேர, இன்னும் இருநூறு கஜ தூரம் இருக்கும். இரண்டு பக்கமும் அடர்த்தியான புதர்கள் வந்து கவிந்த ஓர் இடத்தை நாங்கள் நெருங்கினோம். அப்போது சில பறவைகள் ஒரு கூட்டமாகப் புதர்களிலிருந்து மேலே கிளம்பிக் கூச்சலிட்டுக் கொண்டு பறந்தோடின. நான் அப்படியே முழந்தாளிட்டு உட்கார்ந்து, சில நிமிஷ நேரம் வரைக்கும் பாதையைக் கவனித்தேன். ஒன்றும் நிகழாததால், நானும் என் ஆட்களும் மிக எச்சரிக்கையோடு மேலே நடந்து, மரத்தை அடைந்தோம். இடையில் வேறு சம்பவம் எதுவும் நிகழவில்லை. அதிவிரைவாகவும் முடிந்தமட்டில் சந்தடியில்லாமலும் ஒரு வெள்ளாட்டைப் பிரதான மலையிடுக்கிலும், மற்றதை வலது பக்கக் குன்றின் அடிவாரத்திலும் கட்டினோம். பிறகு, பயிர்ப்புலத்தின் ஓரத்துக்கு என் ஆட்களை அழைத்துச் சென்று, 'நான் வந்து உங்களைத் திரும்பவும் அழைக்கும் வரைக்கும், பெரியதனக்காரரின் வீட்டு மேல் வராந்தாவிலேயே தங்கியிருங்கள்' என்று அவர்களிடம் சொல்லிவிட்டு, மீண்டும் மரத்தடிக்கு ஓடினேன். மரத்தில் நாற்பதடி உயரம் ஏறினேன். நான் அதற்கென்றே கொண்டுவந்திருந்த ஒரு கயிற்றை என் துப்பாக்கியில் கட்டிவைத்து, அதை எனக்குப் பின்னால் மேலே இழுத்துக்கொண்டேன். நான் உட்கார்ந்த ஆசனத்திலிருந்து எழுபது கஜ தூரத்தில் ஒரு வெள்ளாடும் அறுபது கஜ தூரத்தில்

மற்றொரு வெள்ளாடுமாக இரண்டும் கண்ணுக்கு நன்ருய்த் தெரிந்தன. தவிர, எருமையின் உடலிலும் ஒரு பகுதி தெளிவாய்த் தெரிந்தது. என்னுடைய சிறு துப்பாக்கியோ துளியும் குறி பிசகாது. ஆகவே, என் கண்ணுக்குத் தென்படும் எந்த இடத்திலே புலி வந்தாலும் அதை நிச்சயமாகக் கொன்றுவிடலாம் என்று நம்பிக்கை உண்டாயிற்று.

முந்திய தடவை இந்த ஊர்களுக்கு நான் வந்த போது வாங்கியவை இந்த வெள்ளாடுகள். நான் வாங்கியது முதல் இவை இரண்டும் சேர்ந்தே வாழ்ந்து வந்திருக்கின்றன. இப்போது இவற்றைப் பிரித்ததும், இவை வாய் ஓயாமல் கத்தி ஒன்றை ஒன்று அழைத்துக்கொண்டேயிருந்தன. சாதாரணமாகவே அமைதியான சூழ் நிலையில் வெள்ளாட்டின் குரல் நானூறு கஜ தூரம் கேட்கும். இங்கே உள்ள நிலைமையோ சாதாரணமாக இல்லை. ஒரு குன்றுக்குப் பக்கத்திலே வெள்ளாடுகளைக் கட்டியிருந்தேன். அந்தக் குன்றின் மேலிருந்து கீழ் நோக்கிப் பலமான காற்று வீசிக் கொண்டிருந்தது. புலியின் உறுமலை நான் கேட்ட பிறகு அது நகர்ந்திருந்தால் கூட, புலி இந்த வெள்ளாடுகளின் கத்தலைக் கேட்பது சாத்தியந்தான். புலி மட்டும் பசியோடிருந்தால், அதைச் சுட நிச்சயமாய் எனக்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கும். பல காரணங்களையும் நோக்கும்போது புலி பசியோடுதான் இருக்க வேண்டும் என்று உறுதியாய் என் மனத்தில் பட்டது.

நான் மரத்தில் உட்கார்ந்து பத்து நிமிஷம் ஆகியிருக்கும். எங்கேயிருந்து பறவைகள் கிளம்பினவோ அந்த இடத்துக்கு அருகிலே ஒரு காட்டாடு கத்தியது. ஒன்றிரண்டு நிமிஷம் என் நம்பிக்கை வானளாவ உயர்ந்தெழுந்து விட்டு, பிறகு பொத்தென்று அடி



யோடு விழுந்துவிட்டது. ஏனென்றால், காட்டாடு மூன்றே மூன்று முறை கத்தியது. பிறகு, என்னவோ சந்தேகப்படுவதுபோல் ஒரு குரல் கொடுத்து அதோடு நின்று விட்டது. புதரில் ஏதோ பாம்பு இழைந்திருக்க வேண்டும். பாம்பைக் கண்டாலே, காட்டாடுகளுக்குப் பிடிப்பதில்லை; காட்டுக் கோழிகளுக்கும் பிடிப்பதில்லை.

என் ஆசனம் அவ்வளவு அசௌகரியமாக இல்லை. வெயிலும் கதகத என்று சுகமாய்க் காய்ந்து கொண்டிருந்தது. அடுத்த மூன்று மணி நேரமும் சௌகரியமாகவே உட்கார்ந்திருந்தேன். பிற்பகல் மணி நாலு இருக்கும். தக் கிராமத்துக்கு மேலே உள்ள குன்றுக்குப் பின்னே சூரியன் மறைந்துவிட்டது. அதற்குப் பிறகு வீசிய காற்று, தாங்கமுடியாதபடி குளிர்ந்தது. இந்த அசௌகரியத்தை ஒரு மணி நேரம் நான் தாங்கிக் கொண்டேன். அப்புறம் இந்த இடத்தைக் கைவிட்டுப் போய்விடத் தீர்மானித்தேன். ஏனென்ருல், இந்தக் குளிரால் என் உடம்பெல்லாம் வெடவெட என்று நடுங்கத் தொடங்கியது. இப்போது புலி வந்தால், என்ருல் அதைச் சுடமுடியாது. கயிற்றில் துப்பாக்கியைக் கட்டி அதைக் கீழே விட்டேன். நானும் இறங்கி, பயிர்ப் புலத்தின் ஓரத்துக்குப் போய் என் ஆட்களைக் கூப்பிட்டேன்.

# 5. மனச் சோர்வு

நாங்கள் செய்யத் தொடங்கிய காரியத்தைச் சாதிக்க முடியாமல் தோல்வியுற்றால் வருத்தப்படாமல் இருக்கக் கூடியவர் எவருமே இரார். ஒரு நாள் முழுவதும் ஒருவன் சிரமப்படுகிறான். வேட்டையாடிப் பை நிறைய மலைக் கௌதாரிகளைப் போட்டுக் கொண்டு முகாமுக்குத் திரும்புகிறான். அப்போது நீண்ட தூரங் கூட மிகக் குறுகியதாக அவனுக்குத் தோன்றும். இப்படி இல்லாமல், அவன் திரும்பும் போது பை காலியாக இருந்தால், குறுகிய தூரமே மாளாத வழியாகத் தோன்றும். சாதாரண மலைக் கௌதாரியை வேட்டையாடிய ஒரே ஒரு நாளின் இறுதியிலேயே இப்படி ஒருவனுக்குச் சோர்வு ஏற்படுமானால், அன்று மாலை என் ஆட்களை அழைத்துக் கொண்டு, வெள்ளாடுகளை அவிழ்த்து ஓட்டிக் கொண்டு, இரண்டு மைல் தூரம் உள்ள முகாமுக்கு நான் நடந்தபோது, எனக்கு ஏற்பட்ட களைப்பை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள். அதுவும் நான் செய்தது ஒரு நாள் முயற்சி அல்ல; நான் வேட்டையாடப் போன பிராணி மலைக் கௌதாரி அல்ல; என் தோல்வி எனக்கு மட்டுமே சம்பந்தப்பட்டதல்ல.

வீட்டிலிருந்து புறப்பட்டு வந்தது, வீட்டுக்குத் திரும்பிப் போனது இந்த இரண்டு பிரயாண காலங்களையும் தவிர மீதி நேரமெல்லாம், அக்டோபர் 23-ஆம் தேதி முதல் நவம்பர் 7-ஆம் தேதி வரையிலும் மறுபடி நவம்பர் 24-ஆம் தேதி முதல் 30-ஆம் தேதி வரையிலும் ஆட்கொல்லிப் புலியை தேடிக் கொண்டேதான் இருந்



தேன். உங்களிலே 'புலியின் பற்கள் எங்கே என் குரல்வளையைக் கௌவிவிடுமோ?' என்ற பயத்தோடு நடந்தவர்கள்தான், புலியை எதிர்பார்த்து எதிர்பார்த்துப் பல நாட்கள் – பல வார காலம் – செலவழித்த என் நாடி நரம்புகளின் வெலவெலப்பைப் புரிந்துகொள்ள முடியும்.

இன்னும் சொல்லப் போனால், நான் வேட்டையாடச் சென்றதோ ஓர் ஆட்கொல்லிப் புலி. அதை நான் சுட முடியாமல் தோல்வியுற்றது, அந்தப் பிரதேசத்திலே வேலை செய்துகொண்டிருந்த அத்தனை ஆட்களுக்கும் வாழ்ந்துகொண்டிருக்கும் அத்தனை மக்களுக்கும் பெருங் கவலை தந்து பாதிக்கக் கூடிய விஷயம். ஏற்கனவே காடுகளில் வேலையெல்லாம் நின்று போய் விட்டது. இந்த ஜில்லாவிலேயே மிகப் பெரிய ஒரு கிராமத்தின் மக்கள் அடங்கலும் தங்கள் குடியிருப்பு வீடுகளைக் கைவிட்டு ஓடி விட்டார்கள். இப்போதே நிலைமை இவ்வளவு மோசமாகி யிருக்கிறது. ஆட்கொல்லிப் புலியைக் கொல்லா விட்டால் அது இன்னும் மோசமாகி விடும். அதில் சற்றும் ஐயம் இல்லை. ஏனென்றால், தொழிலாளர் அத்தனை பேரும் நிரந்தரமாய் வேலையை நிறுத்திவிட்டு வாழ முடியாது; அதிகச் செழிப்புள்ள தக் கிராம வாசிகள் செய்தது போல, இங்கே சுற்றுப்புறத்தில் உள்ள கிராமங்களின் மக்களெல்லாம் தங்கள் வீடு வாசல்களையும் பயிர் நிலங்களையும் கைவிட்டு ஓட முடியாது.

புலிகளுக்கு மனிதர்களைக் கண்டு அஞ்சும் குணம் இயற்கையிலேயே உண்டு. அதை இந்தப் புலி வெகு நாட்களுக்கு முன்பே இழந்துவிட்டது என்று தெள்ளத்தெளியத் தெரிந்தது. அப்படி இது இழக்கா விட்டால், அநேக ஆட்கள் வேலை செய்துகொண்

டிருந்த ஒரு புலத்துக்கு மிக அருகே உள்ள மரத்தடியில் மாங்காய் பொறுக்கிக்கொண் டிருந்த ஒரு சிறுமியைத் தூக்கிச் சென்றிருக்குமா? தன் வீட்டுக் கதவடியிலே நின்ற பெரிய பெண் ஒருத்தியைக் கொன்றிருக்குமா? கிராமத்தின் நட்ட நடுவிலே ஒரு மரத்திலிருந்து ஓர் ஆளைப் பிடித்து இழுத்துச் சென்றிருக்குமா? முந்திய நாள் இரவில் செய்ததுபோல, ஆயிரக் கணக்கான ஆட்களை வாயடக்கி நடுநடுங்கச் செய்திருக்குமா? இந்தப் பிரதேசத்தில் நிரந்தரமாகப் பல மக்கள் வாழ்கிறுர்கள்; தாற்காலிகமாகப் பலர் வந்து வசிக்கிறுர்கள்; குன்றின் அடிவாரங்களில் நடக்கும் சந்தைகளுக்கோ புனகிரிக் கோயில்களுக்கோ செல்லும் இந்த ஜில்லாவின் மக்கள் பலர் இந்த வழியாகவே போகிறுர்கள். ஆட்கொல்லிப் புலி இங்கே இருப்பது எவ்வளவு பெரிய அபாயம் என்பதை அறிந்தவனை நான், இதோ என் முகாமுக்குத் திரும்பி நடந்துகொண் டிருக்கிறேன் — என் ஆட்கொல்லி வேட்டையின் கடைசி நாள் இதுவே என்று எந்த நாளைச் சொன்னேனே அந்த நாளிலே இப்படிக் கால்சோர நடந்துகொண் டிருக்கிறேன். இதனுல் இன்று என் மனத்திலே ஏற்பட்ட பெருந் துயரம் என்றென்றும் என்னை விட்டு அகலாது என்று எண்ணினேன். இந்தப் புலியைக் கண்டு அவசர அவசரமாக ஒரே ஒரு தடவை சுட்டு விட்டால் போதும்; அந்த வெற்றிக்காக, இந்த முப்பத்திரண்டு வருஷ காலத்தில் நான் ஈடுபட்டுப் பெற்ற ஆட்கொல்லி வேட்டை வெற்றிகள் அனைத்தையுமே எனக்கு வேண்டாம் என்று தத்தம் செய்து விடலாம் போல் அந்தக் கணத்திலே எனக்குத் தோன்றியது.

சென்ற ஏழு நாட்களில் இரவும் பகலும் நான்



இந்தப் புலியைச் சுட மேற்கொண்ட முயற்சிகள் சிலவற்றை உங்களுக்குச் சொன்னேன். ஆனுல், இந்த முயற்சிகளோடு நான் நின்றுவிடவில்லை. என் வாழ்நாளெல்லாம் காட்டிலே செலவிட்டு எத்தனையோ தந்திரங்களைக் கற்றிருக்கிறேன். தக் கிராமத்துக்கும் காடுகளுக்கும் இடையே உள்ள இரண்டு மைல் தூரப் பிரதேசத்தில் போகவர நான் நடந்த ஒவ்வொரு தடவையும், புலியை ஏமாற்ற நான் கற்ற அத்தனை தந்திரங்களையும் கடைப்பிடித்துப் பார்த்து விட்டேன். ஒன்றும் பலிக்காமல் போனது எனக்குப் பெரிய வருத்தந்தான். ஆயினும், நான் செய்த அல்லது செய்யாது விட்ட எந்த முயற்சியும் என் தோல்விக்குக் காரணம் அல்ல.

## 6. எதிர்பாராத பேரதிருஷ்டம்

என் ஆட்கள் என்னேடு வந்து சேர்ந்துகொண்ட உடனே ஒரு தகவல் சொன்னுர்கள். 'காட்டாடு கத்தி ஒரு மணி நேரம் சென்ற பின், வெகு தூரத்தில் இருந்து புலியின் உறுமல் எங்களுக்குக் கேட்டது. ஆனுல் அது எந்தத் திசையிலிருந்து வந்தது என்று மட்டும் நிச்சயமாய்ச் சொல்ல முடியவில்லை' என்றுர்கள். புலிக்கு எருமைகளிடம் இருந்த ஆவல் வெள்ளாடுகளிடம் இல்லை என்பது மிகத் தெளிவாய்த் தெரிந்துவிட்டது. ஆயினும் தனக்கு மிகவும் சௌகரிய மான இந்த இடத்தை விட்டுப் பகலில் அந்த நேரத்தில் புலி கிளம்பியது மட்டும் அதிசய மாய்த்தான் இருந்தது. எனக்கும் என் ஆட்களுக்கும், கேட்காத ஏதோ ஓர் ஒலி, புலிக்குக் கேட்டிருக்கவேண்டும். அது தான் புலியைக் கவர்ந்திருக்கிறது. இல்லாவிட்டால் புலி இப்படிக் கிளம்பி யிராது. அது எப்படியாளுலும் சரி, இனி நான் செய்வதற்கு ஒன்றும் இல்லை. எனவே, களைத்த உடம்போடு, முகாமுக்குச் செல்லப் புறப் பட்டு விட்டேன்.

ஏற்கனவே நான் சொல்லியபடி கீழே சூகாவிலிருந்து வரும் பாதை, தக் கிராமத்துக்குக் கால் மைல் தூரத்தில் மலை முகட்டை எட்டுகிறது. இந்த இடத்தில் மலை முகடு சில அடி அகலமே இருக்கிறது. இங்கே நின்றுகொண்டு பார்த்தால், லாத்யா நதியை நோக்கிச் செல்லும் இரண்டு பெரிய மலை இடுக்குகள் தெரியும். நான் இங்கே வந்ததும், எனக்கு இடது பக்கத்தில் உள்ள பள்ளத்தாக்கு வழியாகப் புலியின் உறுமல் மறுபடியும் வருவது கேட்டது. சற்று மேலே குமயசக் கிராமத்துக்கு இடது பக்கத்திலே புலி இருப்பதாகத் தெரிந்தது. காட்கின்றி மலை முகட்டுக்குச் சில நூறு கஜம் கீழே இருந்தது அந்த இடம். அந்தப் பிரதேசத்தில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் அங்கே தான் புல்லால் தங்களுக்குக் குடிசைகள் கட்டிக் கொண்டு வசித்தார்கள்.

இதோ புலியைச் சுட ஒரு வாய்ப்புக் கிட்டியிருக்கிறது. இது நிச்சயமாய்ப் பலிக்கும் என்று சொல்வதற்கில்லை. ஏதோ பார்க்கலாம் என்றுதான் துணிய வேண்டும். என்றுலும், இது ஒரு வாய்ப்புத்தான்; இனிக் கிட்டாது என்ற நிலையில் கடைசியாக எனக்குக் கிட்டிய வாய்ப்பு. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வது சரியா தவரு என்பதுதான் கேள்வி.

மரத்திலிருந்து நான் இறங்கியபோது, இருட்டுமுன் முகாமுக்குப் போய்ச் சேர எனக்கு ஒரு மணி நேர அவகாசந்தான் இருந்தது. மரத்திலிருந்து இறங்கிய பின் என் ஆட்களைப் போய் அழைத்தேன். அவர்கள் சொல்லிய தகவலைக் கேட்டுக் கொண்டேன். பிறகு வெள்ளாடுகளை அவிழ்த்துப் பிடித்துக்கொண்டு மலை முகட்டுக்கு நடந்தேன். இதற்குள்ளே சுமார் அரை மணி நேரம் சென்றுவிட்டது. சூரியனைப் பார்த்தேன். அது இப்போது நேபாளக் குன்றுகளின் சிகரத்தின்மீது தகதக வென்று செஞ் சுடர் வீசிக் கொண் டிருந்தது. இன்னும் அரை மணி நேரம் பகல் ஒளி இருக்கும் என்று இதிலிருந்து கணக்கிட்டுக் கொண்டேன். காலநிலை - இன்னும் திட்டமாகச் சொன்னுல் ஒளி நிலை - மிகவும் முக்கியமான அம்சம். ஏனென்றுல், எனக்குக் கிட்டிய இந்த வாய்ப்பை நான் பயன்படுத்திக் கொண்டால், ஒளி குன்று முன்

எனக்கு வெற்றி கிடைக்க வேண்டும். தவறினல் என் ஆட்களின் உயிருக்கு ஆபத்தாக முடியும்.

புலியோ ஒரு மைல் தூரத்துக்கு அப்பால் இருக்கிறது. அதற்கும் நாங்கள் இருக்கும் இடத்துக்கும் இடையிலே அடர்த்தியான புதர்கள் சூழ்ந்திருக்கின்றன; பெரும் பாறைகள் கிடக்கின்றன; அவற்றின் மீது அருவிகள் அறுத்தோடி யிருக்கின்றன. என்ருலும், புலி இஷ்டப்பட்டால் அரை மணி நேரத்தில் இவற்றையெல்லாம் கடந்து இங்கேவந்துவிட முடியும். புலியை எங்களிடம் வர அழைப்பதா வேண்டாமா என்ற பிரச்சினையைத்தான் நான் தீர்மானிக்க வேண்டியிருந்தது. நான் குரல் கொடுக்கிறேன். பகல் ஒளி இருக்கும்போதே அது வந்தால், அதைச் சுட எனக்கு வாய்ப்புக் கிடைக்கும். அப்போது எல்லாம் நன்ருக முடியும். இப்படியில்லாமல், அது வந்தும் என்னல் அதைச் சுட முடியாமல் போய் விட்டால், எங்களில் சிலர் உயிரோடு முகாமுக்குப் போய்ச் சேர முடியாது. ஏனென்ருல், சுமார் இரண்டு மைல் தூரம் இன்னும் நாங்கள் நடக்கவேண்டும். வழியெல்லாம் பலமான காடு சூழ்ந்திருக்கிறது. சில இடங்களில் பெரும் பாறைகளை ஒட்டியும் வேறு சில இடங்களில் அடர்த்தியான புதர்களில் புகுந்தும் பாதை செல்கிறது. என் ஆட்களை இதுபற்றி ஆலோசனை கேட்டுப் பயனில்லை. இந்தத் தடவைக்கு முன்பு ஒருபோதும் காட்டுக்குள் அவர்கள் வந்ததில்லை. ஆகவே, முடிவை நானேதான் செய்ய வேண்டும். புலியை அழைப்பதென்றே தீர்மானித்தேன்.

என் துப்பாக்கியை ஆட்களிடம் கொடுத்தேன். புலி மறுபடியும் உறுமுகிறவரைக்கும் காத்திருந்தேன். அது அப்படி உறுமியதும், என்னல் முடிந்தமட்டும் மூச்சைப் பிடித்திழுத்து, என் விரல்களை மடக்கிக் கைகளைக் குவித்து உதட்டில் வைத்துப் பள்ளத் தாக்கை நோக்கிச் சீழ்க்கை அடித்து, புலியின் உறுமலுக்குப் பதில் குரல் கொடுத்தேன். உடனே புலி பதிலுக்கு உறுமியது; அதற்குப் பிறகு பல நிமிஷ நேரம் உறுமிக்கொண்டே யிருந்தது. புலி வரும்; இதோ அது புறப்பட்டுவிட்டது. சுடப் போதிய வெளிச்சம் இருக்கும் போதே அது வந்து சேர்ந்துவிட்டால், சௌகரியம் எல்லாம் என் பக்கந்தான். ஏனென்ருல், புலியைச் சந்திக்க நான் குறித்த இடத்துக்கே அது வரப்போகிறது. சென்ற நாற்பது மணி நேரமாக இந்தப் புலி தனக்கு ஒரு துணைவனைத் தேடிக் காடெல்லாம் ஓடியாடித் திரிந்திருக்கிறது. என் குரலைக் கேட்டதும் துளியும் தாமதியாமல் துணைவனைக் காண ஓடி வந்துகொண் டிருக்கிறது.

மலை முகட்டிலிருந்து கீழே நானூறு கஜ தூரத்தில், தட்டையான நிலத்திட்டு ஒன்றின் குறுக்கே பாதை ஐம்பது கஜ தூரம் செல்கிறது. இந்தத் தட்டை நிலத்தின் வலது பக்கத்துக் கோடியில் ஒரு பெரிய பாறை நிற்கிறது. பாதை அந்தப் பாறையை ஒரு சுற்றுச் சுற்றி, பிறகு செங்குத்தாகக் கீழே செல்கிறது. அப்புறம், கொண்டையூசி மாதிரி அடுக்கடுக்காகப் பல முறை வளைந்துகொண்டே போகிறது. கடைசியில் இன்னெரு தட்டை நிலத்திட்டை அடைகிறது. அந்தப் பெரும் பாறைக்குப் பக்கத்திலேதான் புலியைச் சந்திக்க நான் முடிவு செய்தேன். அந்தப் பாறையை நோக்கிக் கீழே நான் செல்லும்போது வழியில் இடையிடையே பல முறை சீழ்க்கை அடித்துக் கொண்டே போனேன். நான் இடம் மாறிக்கொண் டிருப்பதைப் புலிக்கு அறிவிப்பதற்காகவும் புலி எங்கே

வந்துகொண் டிருக்கிறது என்பதை நான் அறிந்து கொள்வதற்காகவுமே இப்படிச் செய்தேன்.

இந்த இடத்தைப் பற்றி உங்கள் மனத்தில் தெளிவாக நீங்கள் சித்திரித்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் பின்வரும் நிகழ்ச்சிகளை நீங்கள் புரிந்துகொள்ள முடியும். நாற்பது கஜ அகலமும் எண்பது கஜ நீளமும் உள்ள ஒரு துண்டு நிலத்தைக் கற்பனை செய்துகொள்ளுங்கள். ஏறக்குறையச் செங்குத்தான ஒரு குன்றின் முகத்தில் அது போய் முடிகிறது. தக் கிராமத்தில் இருந்து புறப்படும் பாதை, இந்தத் துண்டு நிலத்தின் தெற்கு முனைக்கு வந்து சேர்கிறது. அங்கிருந்து இதன் நடுவே இருபத்தைந்து கஜ தூரம் கீழ்நோக்கிச் சென்ற பிறகு, வலது பக்கம் திரும்பி, இந்தத் துண்டு நிலத்தின் கிழக்குப் பக்கத்தில் இதை விட்டு வெளியேறுகிறது. துண்டு நிலத்தை விட்டுப் பாதை எங்கே வெளியேறுகிறதோ அங்கே சுமார் நாலடி உயரம் உள்ள ஒரு குன்று நிற்கிறது. இங்கிருந்து சிறிது தூரத்தில் பாதை மீண்டும் வலது பக்கம் திரும்புகிறது. அந்த இடத்தில் மூன்றடி அல்லது நாலடி உயரம் உள்ள பாறை முகடு ஒன்று எழுந்து, நீள் சதுரமான துண்டு நிலத்தின் வட கோடி வரைக்கும் நீண்டிருக்கிறது. அங்கே தரை ஒரு பாறை முகத்தில் செங்குத்தாகக் கீழே சரிந்திருக்கிறது. பாறை முகட்டின் கீழ்ப் பக்கத்தில்தான் பாதை இருக்கிறது. அங்கே அடர்த்தியான புதர்கள் ஒரு வரிசையாக முளைத்து, நான் குறிப்பிட்ட நாலடி உயரப் பாறைக்குப் பத்தடி தூரம் வரைக்கும் கிட்டச் சென்றிருக்கிறது. துண்டு நிலத்தின் மீதிப் பகுதிகளில் சில மரங்களும் அங்குமிங்கும் சிதறிய சில புதர்களும் குட்டையான புல்லும் முளைத்திருக்கின்றன.



பாறைக்குப் பக்கத்திலே பாதையில் படுத்திருக்க வேண்டும் என்றும் புலி கிட்ட வந்ததும் அதைச் சுட வேண்டும் என்றும் நான் முதலில் உத்தேசித் திருந்தேன். ஆனால், இப்படிப் படுத்துப் பார்த்தபோது, புலி இரண்டு அல்லது மூன்று கஜ தூரத்துக்கு அருகிலே வரும் வரைக்கும் அதை நான் கண்டுகொள்ள முடியாது என்று புலனாயிற்று. தவிர, புலி என் கண்ணில் படாமலே பாறையைச் சுற்றியோ சிதறிய புதர்களின் வழியாகவோ என்னிடம் வந்து சேர்ந்துவிட முடியும். புலி எந்தத் திசையிலிருந்து வரும் என்று எதிர்பார்த்தேனோ அதற்கு எதிர்த் திசையில் பாறையிலிருந்து தட்டுப்போலக் குறுகிய புரை ஒன்று நீண்டிருந்தது. பக்கவாட்டில் திரும்பி உட்கார்ந்து கொள்ளப் போதிய சிறிது இடம் அதில் கிடைத்தது. இப்படி உட்கார்ந்தபடி வட்டமான பாறையின் உச்சியில் என் இடது கையைப் படிய வைத்துக்கொண்டேன். வலது காலை முற்றும் நீட்டிக் கால்களைத் தரையில் பதித்துக்கொண்டேன். இந்த நிலையில் புரையில் நான் அமர்ந்திருப்பது சாத்திய மாயிற்று. எனக்குப் பின்பக்கம் பத்து அல்லது பன்னிரண்டு அடி நேர்கீழே வெள்ளாடுகளையும் ஆட்களையும் இருக்கச் செய்தேன்.

புலியை வரவேற்கும் நாடகத்துக்கு, மேடையை இப்போது தயார் செய் தாயிற்று. இந்த ஏற்பாடுகளெல்லாம் நடந்துகொண் டிருந்தபோது, புலி முந்நூறு கஜ தூரத்தில் வந்துகொண் டிருந்தது. புலிக்கு நான் இருக்கும் இடத்தைத் தெரிவிப்பதற்காக முடிவாக ஒரு முறை சீழ்க்கை அடித்தேன். பிறகு, என் ஆட்களெல்லாம் சரியாயிருக்கிறார்களா என்று பார்ப்பதற்காக ஒரு முறை திரும்பிக் கண்ணோட்டம் விட்டேன்.

ஆட்கள் இருந்த நிலையை வேறு சமயத்தில் பார்த்திருந்தால், கோமாளித்தனமாகவே தோன்றி யிருக்கும். இங்கேயோ அது ஒரு பரிதாபக் காட்சியாகத் தான் இருந்தது. குறுகிய சிறு வட்டம் ஒன்றில் முழங்காலைக் குத்திட்டு ஒருவரோ டொருவர் நெருக்கிக் கொண்டு அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுக்கு நடுவிலே வெள்ளாடுகள் குழி பறித்துக்கொண் டிருந்தன. பெரிய பீரங்கி ஒன்றிலிருந்து புறப்படப் போகிற ஒரு குண்டைப் பார்க்கக் காத்திருக்கும் ஆட்களின் முகம் எப்படித் தீவிர ஆவலுடன் சுளித்திருக்குமோ அந்த மாதிரி அவர்களின் முகம் சுளித்திருந்தது. முதல் முதல் மலை முகட்டிலிருந்து புலியின் உறுமல் எங்களுக்குக் கேட்டதே அதற்குப் பிறகு, ஒரே ஒரு முறை யாரோ சிரமப்பட்டு அடக்கிய இருமல் சப்தம் மட்டுமே எழுந்தது. ஆட்களோ ஆடுகளோ வேறு சப்தமே எதுவும் செய்யவில்லை. இந்நேரம் அவர்களும் அவையும் பயத்தால் கல்லாய்ச் சமைந்து விட்டனவாய்த் தோன்றியது. அது இயற்கை தான். அப்படியே கல்லாய்ச் சமைந்திருந்தாலும், அந்த நாலு ஆட்களுக்கும் நான் தலை வணங்குகிறேன். நான் மட்டும் அவர்கள் இருந்த நிலைமையில் இருந்திருந்தால், அவர்களைப் போல் தீரமாய்க் கனவில்கூட நடந்துகொண் டிருக்கமாட்டேன். சென்ற ஏழு நாட்களாக இந்தப் பயங்கர மிருகத்தைப் பற்றி, ஒன்றுக்குப் பத்தாய் மிகைப்படுத்திய – குலை நடுங்கச் செய்யும் – கதைகளை அவர்கள் கேட்டுவந் திருக்கிறார்கள். இரண்டு நாளாக இரவிலே அவர்களுக்குத் தூக்கமே கிடையாது. அப்படி யிருக்க இதோ இருள் கவிந்துகொண் டிருக்கும் இந்த நேரத்தில், தாங்கள் எதையும் பார்க்க முடியாத ஓர் இடத்திலே நிராயுத



பாணிகளாக அமர்ந்து, வர வரக் கிட்ட வந்துகொண் டிருக்கும் ஆட்கொல்லிப் புலியின் உறுமலைக் கேட்டுக் கொண் டிருக்கிறார்கள். இதைவிடப் பெரிய தீரத்தையும் நம்பிக்கையையும் கற்பனையே செய்ய முடியாது.

என்னுடைய இடது கையைக் கொண்டுதான், அந்தரமான என் ஆசனத்தில் தொற்றிக்கொண் டிருந்தேன். ஆகவே, என் துப்பாக்கியைத் தாங்க அந்தக் கையை உபயோகிக்க முடியவில்லை. இது எனக்குக் கொஞ்சம் கவலையா யிருந்தது. வட்டமான பாறையின் உச்சியில் துப்பாக்கி வழுக்கி விழுந்து விடுமோ என்று ஒரு பக்கம் பயம். அப்படி விழாது தடுப்பதற்காக என் கைக்குட்டையை மடித்து அதன்மீது துப்பாக்கியை வைத்திருந்தேன். இது போக, இந்த நிலையில் அதிவேகமாய்ச் சுடக்கூடிய துப்பாக்கியால் சுட்டால், அதன் அதைப்பால் என்ன நேருமோ என்று ஒரு பக்கம் அஞ்சினேன். துப்பாக்கியின் முனை, பாதையை நோக்கி யிருந்தது. பாதையில் பாறைக்கு இருபதடி தூரத்தில் ஒரு மேடு இருந்தது. இந்த மேட்டுக்கு மேலே புலி தென்பட்டவுடனே அதன் முகத்தில் சுட்டுவிடுவதென்று நான் உத்தேசித் திருந்தேன்.

புலி, குன்றின் நெளிவு சுளிவுகளை ஒட்டி வரவில்லை. அப்படி வந்திருந்தால், அந்த மேட்டுக்குச் சற்று அப்பால் அது தோன்றியிருக்கும். அவ்விதம் செய்யாமல், ஆழமான மலையிடுக்கு ஒன்றைக் கடந்து, என் கடைசிக் குரல் கேட்ட இடத்தை நோக்கி நேரே வந்து விட்டது. நான் இருந்த இடத்தை விட்டுச் சிறிது தள்ளி அது போய்க்கொண் டிருந்தது என்று சொல்லலாம். இப்படி அது போய்க்கொண் டிருந்ததால், அதற்கும் எனக்கும் இடையே பாறையின் தாழ்ந்த

முகடு தடையாக நின்றது. அதற்குமேல் மட்டத்தில் புலியை நான் பார்க்க முடியவில்லை. கடைசியாக நான் குரல் கொடுத்த திசையை வெகு கணக்காகப் புலி நிதானித்து விட்டது. ஆனால் தூரத்தைத்தான் தவருக அநுமானம் செய்துவிட்டது. தான் எதிர் பார்த்த புலியை அந்த இடத்தில் காணுததால், அது இப்போது பேராத்திரம் கொண்டுவிட்டது.

மிகவும் அருகிலே இருந்தும் கண்ணுக்குத் தெரியாத புலி ஒன்றின் உறுமலை விட அதிகமாக ஒருவரைக் கிலிபிடிக்கச் செய்யக்கூடிய வேருெரு சப்தம் இருப்ப தாக எனக்குத் தெரியவில்லை. இந்தப் பயங்கரமான சப்தம் என் ஆட்களை என்ன கலவரமடையச் செய் கிறதோ என்று நினைக்கவே எனக்குப் பயமா யிருந் தது. குன்றின் அடிவாரத்தை நோக்கி அவர்கள் வீரிட்டு அலறியிருப்பார்க ளானுல், அது ஒன்றும் எனக்கு ஆச்சரியமா யிருந்திராது. ஏனென்றுல், நல்ல துப்பாக்கி ஒன்றின் அடிமுனையைத் தோளிலே முட்ட வைத்துக்கொண்டு, என் கன்னத்திலே உராய அதன் அடிக்கட்டையைப் பிடித்துக்கொண்டு அமர்ந்திருக் கும் எனக்கே வீரிட்டு அலறவேண்டும் போல் தோன்றி யது.

ஆனல், இப்படித் தொடர்ந்து புலி உறுமியதையும் விட அதிகமாய்த் திகில் மூட்டியது இன்னென்று. ஒளி மங்கிக்கொண்டே வந்ததைத்தான் சொல் கிறேன். இன்னும் சில நிமிஷங்களே பாக்கி; அதற் குள் பத்து அல்லது பதினைந்தடி தூரத்துக்குள்ளே புலி வந்துவிடும். என் துப்பாக்கியில் குறிபார்க்க உள்ள அமைப்புக்களைக் கூட அப்போது நான் பார்க்க முடியாது. அதுவோ ஆட்கொல்லிப் புலி; தவிர, தான் தேடிவந்த மற்றொரு புலியைக் காணுது ஏமாற்



றத்துடன் பேராத்திரமடைந்திருப்பது. நாங்கள் அத னிடம் வகையாய்ச் சிக்கிக்கொள்ள வேண்டியதுதான். அதன் படுகொலைக்கு நாங்கள் ஆளாகாமல் தப்ப வேண்டும் என்றுல், ஏதாவது செய்தாக வேண்டும்; அதுவும் மிக விரைவிலே செய்தாக வேண்டும். மீண்டும் குரல் கொடுத்துப் பார்க்கலாம் என்ற ஒரு யுக்திதான் அப்போது எனக்குத் தோன்றியது.

இப்போது புலி மிகவும் சமீபத்தில் வந்துவிட்டது. ஒவ்வொரு தடவை உறுமுவதற்கு முன்னும் அது மூச்சைப் பிடித்து இழுக்கும் காற்றுச் சப்தம் கூட எனக்குக் கேட்டது. மீண்டும் மீண்டும் அது மூச்சிழுக் கும்போது நானும் அப்படியே செய்தேன். அதன் குரலும் என் குரலும் சேர்ந்தாற்போல் ஏக காலத்தில் ஒலிக்கத் தொடங்கின. கணநேரத்தில் பிரமிக்கத் தக்க பலன் விளைந்தது. புலி துளியும் தயங்காமல், குட்டையான பாறை முகட்டுக்கு மேலே உலர்ந்த சருகுகளுக்கு இடையே 'டக், டக்' என்று நடை போட்டுக்கொண்டு வந்து, என் எதிரே வலது பக்கச் சிறு புதர்களுக்குள்ளே புகுந்தது. அது எங்கே என் தலைக்கு மேலே காலை வைத்துவிடுமோ என்று நான் எண்ணிவிட்டேன். அந்தச் சமயத்தில் அது சற்று நின்றது. அடுத்த கணத்தில் அடித் தொண்டையோடு பலக்க உறுமியது. அப்படி அது உறுமிய காற்று என் முகத்திலே வீசியது; அது என் தலையிலே அணிந்துகொண் டிருந்த தொப்பியையே அடித்துக் கொண்டு போய்விடும்போல் தோன்றியது. புலி ஒரு நொடி ஓய்ந்திருந்துவிட்டு, மீண்டும் விரைவாய் அடி யெடுத்துவைக்கும் சப்தம் கேட்டது. இரண்டு புதர் களுக்கு இடையிலே அது நடந்தபோது சிறிது என் கண்ணுக்குத் தட்டுப்பட்டது. பிறகு, திறப்பான

இடத்தில் புலி வந்து நின்றது. நேருக்கு நேரே என் முகத்தைப் பார்த்தது. அப்படியே கற்சிலைபோல் நின்றுவிட்டது.

என்னவோ எதிர்பாராத பேரதிருஷ்டம் எனக்கு அடித்தது; புலி ஐந்தாறு அடி நடந்ததும், நேரே என் துப்பாக்கிமுனை நீட்டிக்கொண் டிருந்த இடத்துக்கே வந்து சேர்ந்தது. கடைசிமுறை உறுமிய திசையிலேயே மேலும் அது நடந்திருக்குமானால், என் கதை – அதை யாராவது எழுத இயன்றிருந்தால் – வேறு விதமாக முடிந்திருக்கும். ஏனென்றால், அப்போது என் துப்பாக்கியை ஒரே கையால் வட்டப் பாறையின் உச்சியில் வேறு திசைக்குத் திருப்பியிருக்கவும் முடியாது; தூக்கி நிமிர்த்திச் சுட்டிருக்கவும் முடியாது.

ஒளி மங்கினாலும் புலி மிகவும் கிட்ட இருந்ததால், அதன் தலையை மட்டும் நான் பார்க்க முடிந்தது. என் முதல் குண்டு புலியின் வலது கண்ணுக்கு அடியிலே பாய்ந்தது. இரண்டாவது குண்டை நான் எண்ணிச் சுடவில்லை; அது ஏதோ தற்செயலாய்ச் சுட்டது. அந்தக் குண்டு, புலியின் குரல்வளையில் பாய்ந்தது. மூக்கைப் பாறையில் புதைத்துக்கொண்டு புலி அப்படியே சாய்ந்தது. நான் பாறையைப் பிடித்திருந்த பிடி, என் துப்பாக்கியின் வலது பக்கக் குழல் பின்வாங்கிய அதைப்பால் தளர்ந்து நழுவிவிட்டது. நான் அப்படியே புரைமீது உருண்டுவிட்டேன். இப்படி அந்தரத்தில் விழுந்துகொண் டிருந்த போதே இடது பக்கக் குழல் குண்டையும் சுட்டுவிட்டேன். அந்தக் குழல் பின்வாங்கிய அதைப்பால் துப்பாக்கி பலமாய் என் தாடையில் மோதிவிட்டது. அப்படியே கரணம் போட்டுக்கொண்டு, என் ஆட்களும் வெள்



ளாடுகளும் இருந்த இடத்தில் அவர்கள் தலைக்கு மேலே போய் விழுந்தேன். மறுபடியும் ஒரு முறை அந்த நாலு ஆட்களுக்கும் நான் தலை வணங்குகிறேன். அடுத்த கணத்தில் புலியும் தங்கள் தலைக்கு மேலே வந்து குதிக்கப்போகிறது என்றுதான் அப்போது அவர்கள் நினைத் திருக்கிறார்கள். வேறு ஒன்றும் அவர்களுக்குத் தெரியாது. அப்படி யிருந்தும், என்னை அவர்கள் தாங்கிப் பிடித்துக்கொண்டார்கள்; எனக்குக் காயம் எதுவும் ஏற்படாமலும் என் துப்பாக்கி முறிந்து போகாமலும் காப்பாற்றினார்கள்.

ஆட்களின் கால்களுக்கும் ஆடுகளின் கால்களுக்கும் இடையிலே நான் சிக்கிக்கொண்டேன். அந்தச் சிக்கலிலிருந்து என்னை விடுவித்துக் கொண்டதும், என்னுடைய ·275 துப்பாக்கியை அதை வைத்திருந்த ஆளிடமிருந்து வாங்கிக்கொண்டேன். ஒரு தோட்டாச் சரத்தை அதன் சுழல் வாயில் திணித்தேன். பள்ளத்தாக்கையும் சர்தா நதியையும் கடந்து நேபாளத்தில் ஒலி கேட்கும்படி ஐந்து குண்டுகளைச் சுட்டேன். பள்ளத்தாக்கிலும் அதைச் சூழ்ந்த கிராமங்களிலும் ஆவலோடு காது கொடுத்துக் கேட்டுக்கொண்டிருந்த ஆயிரக் கணக்கான மக்கள், இரண்டே இரண்டு வேட்டுச் சப்தத்தைக் கேட்டால் ஒன்றும் புரிந்துகொள்ள முடியாது. அந்த இரண்டுக்கும் பிறகு, ஐந்து செகண்டுக்கு ஒரு தடவை மேலும் ஐந்து வேட்டுச் சப்தம் கேட்டால், நிச்சயம் அது ஏதோ செய்தி-ஆட்கொல்லி மாண்டது என்ற செய்திதான் – என்று அவர்கள் புரிந்துகொள்ளுவார்கள்.

மலை முகட்டில் இருந்தபோது புலியின் உறுமலை முதல் முதலாக நாங்கள் கேட்டதிலிருந்து இதுவரைக்கும் என் ஆட்களோடு நான் பேசவேயில்லை. புலி

செத்துவிட்ட தென்றும் இனி ஒருவரும் அஞ்சவேண்டிய அவசியம் இல்லை என்றும் இப்போது நான் சொன்னதை அவர்களால் நம்பவே முடியவில்லை என்று தோன்றியது. எனவே, நான் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டே, 'நீங்களே போய்ப் பாருங்கள்' என்று அவர்களிடம் சொன்னேன். அவர்கள் வெகு ஜாக்கிரதையாகப் பாறை வரைக்கும் ஏறினர்கள். அதற்கு அப்பால் போகவில்லை. ஏனென்ருல், நான் ஏற்கனவே சொன்னபடி, பாறையின் மறு பக்கத்தைப் புலி தொட்டுக்கொண் டிருந்தது.

அன்றிரவு வெகுநேரம் கழித்து முகாமில் தீ மூட்டி அதைச் சூழ உட்கார்ந்திருந்தபோது, அவர்கள் தங்கள் அநுபவங்களை மற்றவர்களுக்குச் சொல்லிக் கொண் டிருந்தார்கள். திரும்பத் திரும்ப வெவ்வேறு ஆட்கள் வந்து ஆவலுடன் அவற்றைக் கேட்டுக் கொண் டிருந்தார்கள். ஒவ்வொரு கூட்டத்தினருக்கும் கதையைச் சொல்லி முடித்தபோது, 'புலி உறுமிய உறுமலில் எங்களுக்கே குலை நடுங்கிப்போயிற்று. ஸாஹேபைப் புலி அவருடைய தலையிலே அறைந்து, எங்கள் தலைக்கு மேலே உருட்டி வீழ்த்தியது. இதை நீங்கள் நம்பாவிட்டால் அவருடைய முகத்தைப் போய்ப் பாருங்கள்' என்றே ஒவ்வொரு தடவையும் விடாமல் என் ஆட்கள் சொன்னர்கள். முகாமிலே நிலைக்கண்ணடி அநாவசியமான சாமான். அப்படியே ஒரு நிலைக்கண்ணடி என்னிடம் இருந்திருந்தால்தான் என்ன? அது என் தாடை வீக்கத்தை, எனக்குத் தோன்றியது போல் அவ்வளவு பெரிதாகவும் அவ்வளவு வலியுள்ளதாகவும் காட்டியிராது. அந்த வீக்கம் காரணமாகப் பின்னல் பல நாள் வரைக்கும் பாலையே என் உணவாகக் கொள்ள வேண்டி வந்தது.



அது போகட்டும். புலியைச் சுட்ட சற்று நேரத்துக்கெல்லாம் ஒரு மரக் கன்றை வெட்டி, அதில் புலியைக் கட்டித் தொங்கவிட்டோம். அந்த நேரத்தில் லாத்யா பள்ளத்தாக்கிலும் சுற்றுப்புற முகாம்கள் அனைத்திலும் கிராமங்கள் எங்கும் ஒளி விளக்குகள் சுடர்விடத் தொடங்கின. புலியை முகாமுக்குச் சுமந்து செல்லும் கௌரவத்தைத் தாங்களே அடையவேண்டு மென்று என்னுடைய நாலு ஆட்களும் ஆவல் கொண்டார்கள். ஆனல் அந்த வேலை அவர்களுடைய சக்திக்கு அப்பாற்பட்டதா யிருந்தது. எனவே, அவர்களை அங்கேயே விட்டு விட்டு, உதவிக்கு ஆள் பிடித்துவர நான் புறப்பட்டேன்.

சென்ற எட்டு மாதத்தில் மூன்று முறை நான் சூகாவுக்கு வந்திருக்கிறேன். அப்போதெல்லாம் பலதடவை பகலிலே இந்தப் பாதையில் நடந்திருக்கிறேன். எப்போதும் குண்டு கெட்டித்த துப்பாக்கி ஒன்றைத் தாங்கிக்கொண்டேதான் நடப்பேன். இப்போதோ இரவிலே தட்டித் தடுமாறிக் கொண்டு நிராயுதபாணியாக நடக்கிறேன்! இடறிவிழக் கூடாதே என்பதைத் தவிர, வேறு கவலையே இல்லாமல் நடக்கிறேன்; ஒருவனுக்கிருந்த பெரும் வேதனை சட்டென்று நின்ருல், அதுவே பேரின்பமாகும். அடுத்தபடியான பேரின்பம் எது தெரியுமோ? ஒருவனுக் கிருந்த பெரும் பயம் திடீரென்று தீர்ந்து விடுவதுதான். ஒரே ஒரு மணி நேரத்துக்கு முன்பு, அந்தப் பிரதேச ஆட்களைக் காட்டு யானைகள் போய்ப் பிடித்து இழுத்தால்கூடத் தங்கள் வீட்டையோ முகாமையோ விட்டுச் சுலபத்தில் வெளியே வந்திருக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட ஆட்கள், இப்போது எல்லாத் திசைகளிலிருந்தும் தனித்தனியேயும் கூட்டங் கூட்டமாகவும் பாடிக்கொண்டும் கூச்சலிட்டுக்கொண்

டும் தக் கிராமத்துப் பாதையிலே வந்து கூடிவிட்டார்கள். வரவரப் பெருகி வரும் இந்த ஜன சமுத்திரத்திலிருந்து சில பேர் அந்தப் பாதைவழியே மேலே ஏறிச் சென்று, புலியைத் தூக்கிவர உதவிபுரியத் தொடங்கினுர்கள். மற்றவர் என்னுேடு கூட என் முகாமுக்குத் துணை வந்தார்கள். அவர்களுக்கு மாத்திரம் நான் இடம் கொடுத்திருந்தால், என்னைத் தூக்கிக் கொண்டே வந்திருப்பார்கள். எங்கள் நடை மிகவும் தாமதப்பட்டது. புதிது புதிதாக வந்து சேர்ந்தவர்கள் தங்கள் தங்களுக்குத் தோன்றிய அலாதியான முறையில் நன்றி தெரிவித்துக் கொள்ளுமட்டும் அங்கங்கே அடிக்கடி நின்று நின்று நாங்கள் செல்லவேண்டியிருந்தது. புலியைச் சுமந்தவர்களும் இதனுல் எங்களோடு வந்து சேர்ந்துகொண்டார்கள். அவர்களும் நாங்களும் ஒன்ருகக் கூடியே கிராமத்துக்குள் பிரவேசித்தோம். அன்றிரவு எனக்கும் என் ஆட்களுக்கும் நடந்த வரவேற்பு வைபவத்தையோ, சூகாவில் நான் கண்ட காட்சிகளையோ வர்ணித்துச் சொல்ல நான் முயலப் போவதில்லை. என் வாழ்க்கையில் பெரும் பகுதியையும் காடுகளிலேயே கழித்தவன் நான். எனவே, சொல்லோவியங்களைத் தீட்ட எனக்குச் சக்தி இல்லை.

ஒரு வைக்கோற் போரைக் கலைத்துப் போட்டு, அதன்மீது புலியைக் கிடத்திஞர்கள். அந்தக் காட்சிக்கு வெளிச்சம் கொடுக்கவும் கதகதவென்று குளிர் காயவும் வசதியாக, அதற்கு அருகே சுள்ளி சருகுகளைக் கொண்டு பெரிய சொக்கப்பனை ஒன்று கொளுத்திவிட்டார்கள். ஏனென்ருல், அந்த இரவிலே கன்னங்கரிய இருள் கவிந்திருந்தது. அதோடு வட திசையிலிருந்து குளிர் காற்றும் வீசிக்கொண்டிருந்தது; நள்ளிரவாகிவிட்டது. என் வேலையாளும் அவனுக்கு உதவியாகச் சேர்ந்து கொண்ட தக் கிராமத்துப் பெரியதனக்காரரும் என் முகாமுக்குப் பக்கத்து வீட்டுக்காரரான குன்வார் சிங்கும், மக்கள் கூட்டத்தை, அவரவருடைய கிராமங்களுக்கும் தொழிலாளர் முகாம்களுக்கும் போகும்படி கேட்டுக்கொண்டார்கள்; அடுத்த நாள் வந்து புலியை நன்ருகப் பார்த்து மகிழலாம் என்று அவர்களுக்குச் சொன்ஞர்கள். தக் கிராமத்துப் பெரியதனக்காரர் என்னிடம் விடை பெறும் போது, 'தங்கள் கிராமத்துக்குத் திரும்பிப் போகும்படி தக் கிராமத்து மக்களுக்கெல்லாம் போது விடிந்ததும் சொல்லியனுப்பிவிடுகிறேன்' என்று தெரிவித்தார். அப்படியே அவர் செய்தார். அந்தக் கிராமத்து மக்கள் அடங்கலும் இரண்டே நாளில் தங்கள் வீடுகளுக்குப் போய்ச் சேர்ந்து, அன்று முதல் என்றென்றும் நிம்மதியாக வாழ்ந்து வருகிருர்கள்.

இது கிடக்க, புலியைச் சுட்ட அன்றே நள்ளிரவில் நான் உணவு உட்கொண்டபின், குன்வார் சிங்குக்குச் சொல்லியனுப்பி அவரைத் தருவித்தேன். 'என் வீட்டினருக்கு நான் வாக்களித்த தேதியில் திரும்பிப் போய்ச் சேரவேண்டும் என்ருல், சில மணி நேரத்தில் புறப்படவேண்டும். நான் ஏன் போய்விட்டேன் என்பதைக் காலையில் நீங்கள்தான் மக்களுக்கு விளக்கிச் சொல்லவேண்டும்' என்று அவரிடம் சொன்னேன். அவரும் அப்படியே செய்ய ஒப்புக்கொண்டார்.

பேனுக் கத்தியை வைத்துக்கொண்டு புலியின் தோலை உரிப்பதென்ருல், அதற்கு வெகு நேரந்தான் பிடிக்கும். ஆனுல், அப்போது அந்த விலங்கை நன்ருகப் பரிசீலனை செய்ய ஒரு வாய்ப்புக் கிடைக்கும்; வேறு விதத்தில் அது கிடைக்காது. ஆட்கொல்லிப்

புலியாக இருந்தால், அது ஏன் ஆட்கொல்லியாக மாறியது என்ற காரணத்தை, அதை இப்படித் தோல் உரிக்கும்போது, சற்றேறக்குறைய நிச்சயமாய்க் கண்டு பிடித்து விடலாம்.

இந்தப் பெண் புலி இளமையான விலங்குதான். ஆரோக்கியமான நிலையில் இருந்தது. இதன் மாரிக் காலப் போர்வையான கன்னங்கரிய உரோமங்களில் ஒரு குற்றமும் இல்லை. இதற்கு நான் அளித்த அத்தனை தீனியையும் இது பிடிவாதமாய் ஏற்க மறுத்து வந்திருந்தும் இதைக் கொழுப்பு மூடியிருந்தது. இதன் உடலில் பழைய துப்பாக்கிக் குண்டுக் காயங்கள் இரண்டு இருந்தன. ஆனால், அவற்றில் எதுவும் இதன் தோலில் தெரியவில்லை. ஒரு காயம் இதன் இடது தோளில் இருந்தது. நாட்டுப் புறத்தில் செய்த பல துப்பாக்கி ரவைகளால் அது ஏற்பட்டிருந்தது. காயம் சீழ் பிடித்து மெல்ல மெல்ல ஆறி வந்து கொண்டிருந்தது. இதனால் பெரும் பகுதி இடத்தில் தோல் சதையோடு கெட்டியாய் ஒட்டிக்கொண் டிருந்தது. இந்தக் காயத்தால் புலி எவ்வளவு தூரம் வலுவிழந்து ஆற்றலற்றுப் போயிருக்கும் என்பதைச் சொல்ல முடியவில்லை. ஆயினும், இந்தக் காயம் ஆறிவரத் தொடங்கி வெகு நாள் ஆகியிருக்கிறது என்று மட்டும் தெளிவாகத் தெரிந்தது. ஆகவே, இந்தக் காயமே புலி ஆட்கொல்லியாக மாறியதற்கு அநேகமாய்க் காரணமாக இருக்கலாம். இரண்டாவது காயம் புலியின் வலது தோளில் இருந்தது. அதுவும் முரட்டுத் துப்பாக்கிக் குண்டால் ஏற்பட்டதுதான். அந்தக் காயம் சீழ் பிடிக்காமலே ஆறிப்போயிருந்தது. புலி ஆட்கொல்லியாக மாறுவதற்கு முன்பு ஏதோ இரையை அடித்துத் தின்னும்போது, இந்த இரண்டு துப்பாக்கிக் குண்டு



களும் அதற்கு ஏற்பட்டிருக்கின்றன. அதனால்தான், அது சிறிது தின்றுவிட்டுச் சென்ற இரைகளை மீண்டும் நாடி வரவில்லை.

புலியின் தோலை உரித்துவிட்டு, நான் குளித்து உடுப்பணிந்து கொண்டேன். என் முகமோ வீங்கி வலித்துக்கொண் டிருந்தது; நடக்க வேண்டியதோ கரடு முரடான இருபது மைல் தூரம். இப்படியெல்லா மிருந்தும், சூகா கிராமத்தை விட்டுப் புறப்பட்டு, காற்றுவாக்கில் நான் நடக்கத் தொடங்கினேன்; அப்போது பள்ளத்தாக்கிலும் அதைச் சூழ்ந்தும் உள்ள ஆயிரக் கணக்கான ஆட்கள் கவலையற்று நிம்மதியாகத் தூங்கிக்கொண் டிருந்தார்கள்.

O111,3MCO,N
N56
TAMIL ... ARCHIVES LIBRARY ... MADRAS
111636

# கட்டுரை வினுக்கள்

1. தக் கிராமத்தினருகே புலி தன் முகாமை ஏற்படுத்திக் கொண்டதை அறிந்த கிராம மக்கள் என்ன செய்தார்கள் என்பதை விவரித்து எழுது.
2. இந்தக் கதையிலிருந்து ஜிம் கார்பெட்டின் எந்தச் சிறப்பியல்புகளை நீ அறிகிருய் என்பதைத் தகுந்த உதாரணங்களுடன் கூறு.
3. இபட்ஸன் தம்பதிகளின் குணச் சிறப்புக்களைப் பற்றி ஒரு பத்தி வரை.
4. தக் கிராமத்தில் மரத்தின் மேலிருந்து தழை வெட்டிக்கொண் டிருந்த ஒருவனைப் புலி பலி கொண்ட வரலாற்றை விளக்கி ஒரு பத்தி வரை.
5. ஸெம் கிராமத்தில் ஒரு நாள் இரவு முழுவதும் கண் விழித்து, எதிர்பார்த்த புலி அகப்படாததால் மனச் சோர்வடைந்த ஜிம் கார்பெட் மனத்தில் எழுந்த எண்ணங்கள் யாவை?
6. ஸெம் கிராமத்துப் பெரியதனக்காரர் புலியின் வாயிலிருந்து தப்பிய வரலாற்றை விவரித்து எழுது.
7. ஆட்கொல்லிப் புலியின் உணவுப் பழக்கத்தைப் பற்றி ஒரு பத்தி வரை.
8. புலி வேட்டை யாடுவதற்குச் செய்யவேண்டிய முன்னேற்பாடுகளைப் பற்றியும், வேட்டைக்காரர்களுக்கு ஏற்படும் கஷ்டமான வாழ்க்கையைப் பற்றியும், இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் ஒரு கட்டுரை வரை.
9. ஜிம் கார்பெட்டின் கடைசி நாள் வேட்டையின் போது அவருட னிருந்த நான்கு ஆட்களில் ஒருவனுக உன்னைக் கற்பனை செய்து கொண்டு, அவர் புலியைக் கொன்ற வரலாற்றை விவரி.



O111,3MCO,A
N56